403

உ

தமிழ்ப் பொழில்.

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௫	சுக்கில—மாசி, பங்குனி.	மலர் ௧௧-௧௨

குறிஞ்சிப்பாட்டின் பருப்பொருள்

திருவாளர் L. உலகநாதபிள்ளையவர்கள், தமிழாசிரியர்,

நாட்டுமொழிக் கல்லூரி, திருவையாறு.

இப்பாட்டு, இடையீடின்றித் தொடர்புபட்ட இயற்கை ஓசையான் அமைந்துகிடத்தலின், அகவற்பா எனப்படும். இது, குறிஞ்சித் திணைக்குரிய பொருளினை உணர்த்துதலின், குறிஞ்சிப் பாட்டு எனப்பட்டது. உலகியற் பொருள் யாவும் முதல் கரு உரி என மூன்று வகைப்படும். நிலமும் பொழுதும் முதற் பொருளாம். நிலம் எனவே, காரண காரியத் தொடர்ச்சியாய், நீர், தீ, வளி, வான் என்னும் ஏனைய பூதமும் அடங்கும்: காலம், மாத்திரை, நாழிகை, யாமம், பொழுது, நாள், பக்கம், திங்கள், இருது, ஆண்டு எனப் பலவகைப்படினும், பெரும் பொழுது சிறு பொழுது என்னும் இரண்டினுள் அடங்கும். இடமும் காலமும், பொருள்கள் தோற்றுதற்கு நிலைக்களமாகலின், முதல் ஆயின. இவற்றின் சார்பிற் றோன்றுவன எல்லாம் கருப்பொருளாம். அவை, தெய்வம் மக்கள் மா மரம் புள் உணா செயல் பறை யாழ் முதலியன. உரிப்பொருளாவது மக்களால் எய்துதற்குரிய

பொருள். அது, அகப்பொருள் புறப்பொருள் என இருவகைப் படும். அவற்றுள் இன்பத்தினை அகத்தினும் அறம் பொருள்களைப் புறத்தினும் அடக்குவர் தமிழ் மக்கள். இன்பம் உள்ளத் துணர்வான் நுகர்தலன்றி இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குணர்த்தற் கருமை நோக்கி அகமெனப்பட்டது. தாமும் துய்த்துப் பிறர்க்கும் உணர்த்தப்படுதலின், ஏனையவை புறமெனப்படும். ஈண்டு இன்பமென்றது, ஒரு காலத் தொருபொருளான் ஐம்புலனும் நுகர்தற் சிறப்புடைத்தாய காம இன்பத்தினை. இவ் வின்பத்திற்கு இன்றியமையாத ஒழுக்கம் திணை எனப்படும். அது, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை கைக்கிளை என் றெழுவகைத்து. அகத்திணையிற் போலவே புறத் திணையினும், வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்டிணை எனத் திணைகள் ஏழுண்டு. அகத்திணை ஏழிற்கும் புறத்திணை ஏழும் இனமாகும். அகத்திணை ஏழினும் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்னும் ஐந்திணைகளே சிந்தன. அவற்றுள் குறிஞ்சிக்குக் கூடலும் கூடனிமித்தமும், முல்லைக்கு இருத்தலும் இருத்தனிமித்தமும், மருதத்திற்கு ஊடலும் ஊட னிமித்தமும், நெய்தற்கு இரங்கலும் இரங்கனிமித்தமும், பாலைக்குப் பிரிதலும் பிரிதனிமித்தமும் உரித்தாம். இம் முதல் கரு உரி என்னும் மூன்றனுள் முதற்பொருளிற் கருப்பொருளும், கருப் பொருளில் உரிப்பொருளும் சிறந்து வரும்.

இனி, எடுத்துக்கொண்ட குறிஞ்சிக்கு முதல் கரு உரி என்னும் மூன்றினையும் உரைக்குமிடத்து, நிலம், மலையும் மலைசார்ந்த இடமுமாகும். கூதிர்ப்பருவமும் முன் பனிப்பருவமு மாகிய பெரும்பொழுதும், அவற்றின் இடையாமமாகிய சிறு பொழுதும் காலமாம். தெய்வம்—முருகவேள். மக்கள்—குறவர் குறத்தியர். மா—புலி யானை பன்றி கரடி. மரம்—அகில் ஆரம் கோங்கு திமிசு தேக்கு வேங்கை. புள்—மயில் கிளி. பறை—முருகியப்பறை தொண்டகப்பறை வெறியாட்டுப்பறை. செய்தி—தேனழித்தல், கிழங்ககழ்தல், தினைவிளைத்தல், கிளிகடிதல். பண்—குறிஞ்சி. பூ—வேங்கைப்பூ, குறிஞ்சிப்பூ, காந்தட்பூ,

சுனைக்குவளை. நீர்—அருவிநீர், சுனைநீர். ஊர்—சிறுகுடி குறிச்சி. இவை கருப்பொருளாம். உரிப்பொருள் கூடலும் கூடனிமித்தமுமாம்.

இனி, இவ்வுரிப்பொருளாகிய கூட்டம், களவு, கற்பு என்னும் கைகோள் இரண்டினுள், களவின்பாற்படும். களவின்றிக் கற்பு நிகழுமாறில்லையாகலின், கற்பினும் களவே சிறந்தது. களவாவது, உருவுந் திருவும் பருவமுங் குலனுங் குணமும் அன்பும் முதலிய வற்றால் ஒப்புமையுடையராய தலைமகனுந் தலைமகளும், பிறர் கொடுப்பவும் அடுப்பவு மின்றி, ஊழ்வகையால் தாமே எதிர்ப்பட்டு இன்பம் நுகர்ந்துவருவது. இந்நிகழ்ச்சி, இயற்கையா னிகழ்ந்தமையின், இயற்கைக் கூட்டம் எனப்பட்டது. அதன் பின்னர், பிரிந்து சென்ற அவ்விருவரும் மீட்டும் அவ்விடத்தே எதிர்ப்பட்டுக் கூடுவர்; அது இடந்தலைப்பாடு எனப்படும். இக் கூட்டம் பாங்கன் வாயிலானும் பாங்கி வாயிலானும் நிகழும். அவை, முறையே பாங்கற்கூட்டம் பாங்கியிற்கூட்டம் என்று கூறப்படும். அவற்றுள் இக் குறிஞ்சிப்பாட்டு, இயற்கைக் கூட்டத்தின்பின் பாங்கியிற் கூட்டம் நிகழ்ந்து வருகையில், இரவுக்குறி யிடை யீட்டால் வறிது மீண்ட தலைமகனைக் காணப்பெறாத ஆற்றாமை மிகுதியான் மெலிவுற்ற தலைமகளின் மேனிவாட்டத்தினைக் கண்ட செவிலி, அம்மெலிவிற்கேது அறியாளாய், கட்டினுங் கழங்கினும் எண்ணியறிவாரை வினவி, அவர் தெய்வத்தான் வந்ததென்றலின், பல்வகைச் சிறப்புச் செய்து தெய்வம் வழிபட்டும் மெலிவு தீராமையின் வருந்தி நிற்கையில் தலைமகள், 'நாம் ஆய்ந்த மன்றலினை அன்னைக் குணர்த்தலின் எமக்கு வருவதோர் பழியுண்டோ' எனக் குறிப்பானுரைப்பக் கேட்ட தோழி, 'நம் தலைவி இக் களவொழுக்கத்தினைத் தமர்க்குணர்த்துங் கருத்தினளாயினள், இனி அறத்தொடுநிற்றல் எனக் கடுத்த தாகும்' என்றுட்கொண்டு செவிலிக்கு மறைபுலப்படுத்தற் கெழுந்ததாகும். இதன் பருப்பொருளுரைப்பவே, அஃது இனிது விளங்குமாதலின், அதனைச் சுருங்க உரைப்பேன் உவந்து கேட்பாய்.

"அன்னாய் வாழி! யான் கூறுகின்றதனை விரும்பிக்கேள். என் தோழியின் மனத்துள் மறைந்த ஆற்றருநோயை நினக்குரைத்தல் எளிதன்றென என்னுள்ளே அடக்கினேன். நீயும், இவள் தோள் மெலிந்து அழகு கெடுதலுக்கு மனம் அலம்வந்து, கட்டினாலும் கழங்கினாலும் கண்டுரைப்பாரை வினாவினை. அவர் தெய்வத்தான் எய்திய தென்றலின், பல்வேறு கடவுளரைத் தொன்முறை வழிபட்டும் தீராமையின் மயங்கி வருந்தி நின்றாய். இவளும், 'அருங்கலன் கெடின் பின்னர் வந்து கூடும்; சால்பும் இயல்பும் குன்றின், அவற்றை மாசறக்கழுவி முன்போற் புகழை நிறுத்துதல் ஐயர்க்கும் ஆகாதென்பர் அறிஞர். யாங்கள் இருவேமும் ஆய்ந்தமன்றல் இதுவென நம் தாய்க்குணர்த்திடின், நமக்குப் புகழேயன்றி வருவதோர் பழியுமில்லை. அன்றியும், உண்மையை வெளிப்படுத்தபின், தலைவர்க்கே நம்மை நேர்ந்திலராயின், உயிர்போமளவும் இவ்வருத்தத்தை ஆற்றியிருப்பேம். இருப்பின் இக்கூட்டம் மறுமையினும் நமக்குக் கூடுவதொன்றாகும்; என்றுரைத்துக் கலங்கிக் கையற்று மெலியா நின்றாள். யானோவென்றால், இருபெரு வேந்தரைச் சந்துசெய்தற்கு இடைநின்ற சான்றோர் போல, நினக்கும் இவள்வருத்தத்திற்கும் அஞ்சும் இருபேரச்சத்தாலே வருந்தாநின்றேன். இனி, குணமும் குடியும் பிறவும் பலருடன் உசாவிடாமல், நும்மையின்றி எம்முயிர்க்குப் பாதுகாவலாக யாங்களே துணிந்த இக்காந்தர்வ மணம் முன்பு நடந்தபடியை நீ நன்குணருமாறு சொல்லுதற்கமைந்தேன். அது கேட்டுச் சினவாதிருப்பாயாக.

அன்னாய்! கிளிகடிந்து புனங்காத்து மாலையில் வருகென எம்மை விடுத்தனை. யாங்கள் போய்ப் பரண்மீதிருந்து கவண், குளிர் முதலிய கருவிகொண்டு கிள்ளை யோட்டி, நண்பகற் பொழுதில் அருவிநீர் படிந்து விளையாடி மனக்கினிய பாடிச் சுனைகுடைந்து, கூந்தலின் ஈரம் புலர்த்தியபின் அல்லி ஆம்பல் முதலிய பன்மலர் கொய்து பாறையிற் குவித்து, புறவிதழ் களைந்து நறுந்தழைதொடுத்து இடையில் உடுத்து, மென்கருஞ் சுழலிற் சின்மலர்க் கோதை புனைந்து, அசோகின் அணிநிழல் இருந்தேமாக.—

அவ்வளவில், ஒருபெருந்தகை, பன்மலர்க் கண்ணியைச் சென்னியின் மிலைந்து, செயலையந் தளிரைச் செவியினிற் செருகி ஏந்தெழின் மார்பிற் பூந்தாரணிந்து, கச்சைக்கட்டி, வில்லேந்தி அம்பு தெரிந்து பிடித்து, வீரக்கழல் ஏற்றிழிவு செய்திடப் போந்தனன். அப்பொழுது, சினத்தாற் செருக்கிய ஞமலிகள் இமையாக் கண்ணவாய் எம்மை வளைந்துகொண்டு மேன்மேல் நெருங்கின. யாங்கள் அவற்றை அஞ்சி அடிதளர்ந்து வேற்றுப்புலம் செல்லாநின்றேம். சென்றபொழுது எம் வெருட்சிக்குத் தான் கவன்று, எம் மனக்கினிய இன்மொழி கூறி நலம்பாராட்டி, 'இளையீர்! என் அம்பு பிழைத்த வேழம் ஒன்று இங்குப் போதரக் கண்டதுண்டாயிற் புகலுமின்' என்றனன். யாங்கள் வாய் திறவாது வாளாவிருந்தேம். ஆகையால், அவன் நெஞ்சமழிந்து, 'மெல்லியலீர்! யான் கெடுத்தவற்றைக் காட்டித் தாரீராயினும், என்னுடன் ஒருமொழி பகர்தலும் நுமக்குப் பழியாமோ? எனச் சொல்லி, நாய்களை ஓச்சி, எங்களது சொற்பெறும் செவ்வியை நோக்கி நின்றான். அன்ன காலையில் வேற்றுப்புலம் காவலர் கள்ளுண்டு களித்துக் காவல் முடிந்திருந்தவளவில், புனத்தினை வேழம் புகுந்தழித்திட, அவர் வெருண்டு அம்பெய்து புனத்தினின்று ஓட்டுகையாலே, அது காற்றெனக் கடுகிக் கூற்றென எங்கள்மேல் வந்தது. யாங்களும், உய்விடம் வேறு உணரேமாகி, நாணுமறந்து நடுநடுங்கி அவனைப் பொருந்தினேம். அவனும், கடுவிசைப்பகழியைக் கடிதின்வாங்கி அண்ணல் யானையின் அணிமுகத் தழுத்தலின், மத்தகங்கிழிந்து குருதிசோரப் புறங்கொடுத்தது. அதனால் வெருட்சி நீங்கி மகிழ்ச்சியுற்ற யாங்கள் கடம்பின் மாலைபோலக் கைகோத்தலை விடேமாய், யாற்றுப் பெருக்கில் பாய்ந்தாடுகையில், இடிகரை நின்ற வாழைபோல அடிதளர்ந்து புனலோடேகினேம். அது கண்டு அவ்வண்ணல் கடுகவந்தெடுத்து 'யான் நின் நலன் நுகர்வேன்; நின்னை நீங்குவே னென்றஞ்சற்க' எனக்கூறி நுதலினைத் துடைத்து, இக்களவொழுக்கம் நெடுங்காலம் நிகழவேண்டுமெனக் கருதி என்முகம் நோக்கி நகைத்தனன். நகைக்கவே இவள், அச்சமும் நாணமும் அடைதரத் தன்னினின்று நீங்கவும் விடானாய், அந்நிலையே அணைத்து மார்புறத் தழுவினன்

அப்பொழுது, இவளது உள்ளத்தன்மை இனி வரைந்துகொண்டு இல்லற நிகழ்த்தலாயிருக்கும் என உட்கொண்டு, 'நங்காய்! மனையகத்து விருந்துண்டு எஞ்சிய மிச்சிலை நீ இட யான் உண்டல் மேன்மை உடைத்து. அந்நிலையில் இல்லறம் எம்மைக் கரையேற்றும் என்றுணர்த்தி, முருகனை வழிபட்டுத் திருமுன் நின்று, 'நின்னிற் பிரியேன், பிரியின் அறனல்லது செய்தவனுவேன்' என வஞ்சினம் வாய்மையிற்றேற்றி, அருவிநீர் பருகினன். அதனல் இவள், அவ்வஞ்சினத்தில் நெஞ்சமர்ந்திருக்க, களிறுதரவந்த கூட்டத்தை அன்றைப் பகற்பொழுதெல்லாம் பைம்பொழிலிற் போக்கியபின், அந்திமாலை அடைதல்கண்டு 'இலங்கிழையீர்! சுற்றத்தினர் நம்முன்கைபற்றி எமக்குத்தர, நாட்டினர்காண நன்மணம் பின்னர் நிகழ்த்துவேம்; இக்களவொழுக்காற் பெறும் பேரின்பம் எய்துதற் பொருட்டுச் சிலநாள் இங்ஙனம் ஒழுகாநின்றேம்; இதுகொண்டு நெஞ்சம் கலங்கா திருப்பீராக' என்று நன்மொழி கூறி எம்மொடு வந்து, நம்மூர் நீர்த்துறைக்கண் எம்மை நிறுத்தி மீண்டுபோயினன். அன்று தொட்டு இரவுக்குறியில் என்றும் வருதன் மாலையன். வருந்தோறும், காவலர் கடுகினும் கதநாய் குரைப்பினும் நீ துயிலெழினும் நிலவு வெளிப்படினும், இன்றுயில்பெறுது தன் மனை மீளுவான்; மீளினும் வெறுத்தலைச் செய்யான். அவன் தான் இளமைப் பருவத்தைக் கடந்ததுமிலன். செல்வச் செருக்கால் தன் குலத்துக்குரிய நற்குணங்களில் நீங்கியதுமிலன். அவன், ஊரிற்பரந்த அலருரை யஞ்சி வரைந்துகொண்டு இல்லற நிகழ்த்துதல் நல்லொழுக்கமென்று துணிவானுயின், இவள் மழைக்கண் நீர்சொரியா நிற்கும். இன்னும் அவர் வரும்வழி ஏதம் உடைத்தென நினையுந்தோறும், இவள் வலையிடைப்பட்ட மயில்போலத் தன்னலங்கெடச் சாம்புவாள். இதுகாண் நல்வினை நிகழ்ந்த வண்ணம். அன்னுய்! ஆயுமிடத்து,

> நின்குற்ற மில்லை நிரைதொடியும் பண்புடையள்
> என்குற்றம் யானும் உணர்கலேன்—பொன்குற்
> றருவி கொழிக்கு மணிமலை நாடன்
> தெரியுங்காற் றீய திலன்'

சான்றோரால் தொகுக்கப்பெற்ற பத்துப்பாட்டுள் எட்டாவது குறிஞ்சிப்பாட்டு. இதனை இயற்றியவர் நல்லிசைப்புலவர் கபிலர். இவர் ஆரியவாசன் பிரகத்தனைத் தமிழறிவுறுத்தற்கே குறிஞ்சிப் பாட்டினை இயற்றினர் என்பர். அதற்கு அகச்சான்று கிடைத்திலது. இது நிற்க.

இப்பொழுதைக்குப் பதினன்கு ஆண்டுகட்கு முன்னர் எழுதப்பெற்ற குறிஞ்சிப் பாட்டின் பருப்பொருளாகிய இது, மாணவர் பலர்க்கும் பயன்படுதல் காரணமாகப் பொழிலின்கண் வெளியிடலாயிற்று.

உடல் இயலும் உடல் நல வழியும்.

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளையவர்கள், B. A., L. T.,
உரத்தநாடு.

(முற்றொடர்ச்சி பக்கம் 400.)

நரம்புமண்டலம்.

உயிர் முடிச்சு :—இது முள்ளந்தண்டின் உச்சியில் பிடரியின் உச்சியை ஒட்டியிருக்கும் சிறு குமிழ் போன்ற ஒருறுப்பு. இதில் சாம்பல் நிறப் பொருள் வெளியேயும் வெண் பொருள் உள்ளேயும் இருக்கின்றன. இதன் வேலையும் இரண்டே. அவைதாம் (1) முள்ளந்தண்டைப்போல் பெரு, சிறு மூளைக்குச் செய்தியனுப்பும் வழியாகிறது. (2) நரம்பு இணைச்சாலையாயிருந்து பல உயிர்த் தொழில்களைத் தற்செயலாய்ச் (Automatic action) செய்விக்கிறது. முதலாவதாக இது தன்னுள்ளுள்ள வெண் பொருளின் வழியே மூளைகளுக்குச் செய்தி அனுப்புகிறது. ஆனால் ஈண்டு உடலின் இடப்புறத்திலிருந்து வரும் நரம்புகள் மூளையின் வலப் புறத்திற்கும், எதிர் எதிராகவும் (Vice-Versa) மாறுகின்றன. இரண்டாவதாக இது ஓர் இணைச்சாலையா யிருந்துகொண்டு மூச்சு விடுதலையும், குருதியேற்றத் துடிப்பையும், குருதிக் குழாய்களின் பருமனையும், விழுங்குதலையும், வாந்தி யெடுத்தலையும், எச்சில் ஊறுதலையும் செய்விக்கிறது.* இதற்குண்டாம் சிறு ஊறும்

* தற்செயல் (Automatic action) எதிர்ச்செயலை (Reflex action) ஒத்தே வேறொன்றின் கட்டளையின்றித் தானே செய்வித்தலாகும். ஆனால் தற்செயல் உடலுக்குள்ளுள்ள உறுப்புகளிலிருந்து இவ்வுயிர் முடிச்சிற்கு உணர்ச்சி செல்வதால் துவங்குகிறது. இவ்விரண்டு செயல்களையும் ஒன்றாகக் கருதுவோரும் உளர்.

(காயமும்) மூச்சு விடுதலையும், எற்றத் துடிப்பையும் நிறுத்திவிடு மாதலின் உயிர் போய்விடும். இதனாற்றான் இதற்கு இப் பெயர் உண்டாயிற்று. ஒருவனைத் தூக்குப் போடும் பொழுது அவனுடைய உயிர் முடிச்சு கெடுவதால்தான் அவன் இறக்கிறான். குருதியில் கரிக்காற்று சிறிது மிகினும் அம் மிகுதியை இதற்கு வரும் குருதியிலிருந்து அறிந்துகொண்டு இம் முடிச்சு தற்செயலாய் மூச்சுவிடுந் தசைகளுக்குக் கட்டளையிட்டு அவைகளை விரைவாயுழைக்கச் செய்கிறது. இதனால்தான் நாம் பெருமூச்சு விடுகிறோம். இவ்வாறே இது ஏனைய உறுப்புக்களையும் இயக்குகிறது.

சிறு மூளை :—இவ்வுயிர் முடிச்சின் மேலிருப்பது சிறுமூளை. இதைச்சுற்றி நடுவே ஓடும் ஆழ்ந்த இடுக்கால் இது இரு சிறு மண்டைகளாகப் (Hemispheres) பிரிக்கப்பட்டிருக்கிறது; இதன் மேற்புறமும் பட்டைபோல் படர்ந்திருக்கிற சாம்பல் நிறப் பொருளாலாயது; உட்புறம் வெண் பொருளாலாயது. இச் சாம்பல் நிறப் பொருள் பல மடிப்புக்களாக வெண் பொருளினுள் ஊடுருவிச் செல்வதால் இவ்விடுக்குகளில்லா திருப்பதைவிட மிகுதியாக இருக்கிறது. இது பெருமூளைக்கு உதவியாயிருந்து கட்டுப்பட்ட தசைகளை அடக்கி ஆளுகிறது; பல தசைகளின் வேலைகளையும் ஒற்றுமைப் படுத்துகிறது (Co-ordinates). இது நிற்றல், நடத்தல், ஓடல், பேசல், எழுதல் முதலிய பல செயல்களைச் செய்கையில் எந்தெந்தத் தசை எவ்வளவு விரைவுடனும் வலிவுடனும் எவ்வாறு வேலை செய்யவேண்டுமோ அவ்வாறு செய்விக்கிறது. இது ஊறுபட்டால் இச் செயல்கள் யாவும் குடிகாரன் செயல்போல் தடுமாறித் தப்பிப்போம். ஈருருளிவிடல் (Cycling) நீந்தல், தச்சு, கொல்லு முதலிய வேலைகளைப் புதிதாய்க் கற்றுக் கொள்வோமாயின் இம் மூளையில்தான் அப்பழக்கங்கள் பதிந்திருக்கின்றன; பின் எத்தனை நாளாயினும் மறவாது தானாகவே தசைகளை இயக்கிச் செய்விக்கிறது. ஆதலின் இத்தகைய தசைச் செயல்களை வருந்திக்கற்பது இம்மூளையின் வழியாகத்தான் என்று சொல்லலாம்.

பெரு மூளை:—இது சிறு மூளைக்கு மேலுள்ளது. இது மூளையின் நிறையில் முக்காலேயரைக்கால் பங்கு இருப்பதால் மூளையின் பெரும் பங்கு இதுவேயாகும். இதுவும் இதைச்சுற்றி நடுவே ஓடும் ஒரு பெரிய ஆழமான இடுக்கால் (Fissure) இரு அரை உருண்டைகளாகப் பிரிக்கப்படிருக்கிறது. இவ்விரு பகுதியையும் வெண் பொருளாலாய கட்டுக்கள் இணைக்கின்றன. இப் பெரு மூளையின் மேற்பரப்பு அரைக்கால் அங்குலம் மொத்தமுள்ள சாம்பல் நிறப் பொருளாலாயது. இப் பொருள் பல ஆழ்ந்த வெடிப்பின் இருபக்கங்களிலும் படர்ந்து செல்கிறது. இவ் வெடிப்புக்களிற் பல ஓரங்குல ஆழமுமுடையன; அவை ஒவ்வொன்றற்கும் கிளை வெடிப்புகளுமுண்டு. ஆதலின் சாம்பல் நிறப் பொருள் மிகுத்திருப்பது எளிதாகிறது. இப் பொருளே பெரு மூளையின் அருந் தொழில்களைச் செய்கிறது. மூளையின் பெரும் பகுதி வெண்பொருளேயாம். இது சாம்பல் நிறப் பொருளிலுள்ள 9,200,000,000 கூடுகளை ஒன்றோடொன்று இணைக்கிறது; இன்னும் இது பல நரம்பு முடிச்சுக்களின் (Ganglion) வழியாகப் பெருமூளையையும் சிறு மூளையையும் உயிர் முடிச்சையும் ஒன்றோடொன்று இணைக்கிறது.

பெரு மூளையின் வேலைகள்:—இது தான் அறிவிற்கும் (Conseiousness) எண்ணங்களுக்கும் (Thoughts), செய்கைகளைச் செய்யும்படி கட்டளையிடுகிற தீர்மானத்திற்கும் (Will) இருப்பிடமாகும். இது சிறுமூளை, உயிர் முடிச்சு, முள்ளந்தண்டு இணைச்சாலைகளை அடக்கி ஆளுகிறது. இது ஐம்பொறிகளிலிருந்தும் வரும் உணர்ச்சிகளை அறிந்து கொள்ளுவதன்றி எல்லாக் கட்டுப்பட்ட தசைகளுக்கும் கட்டளைகளை நேரே அனுப்புகிறது; கட்டுப் படாத தசைகளுக்கும் வேறுவழிகளில் அனுப்புகிறது. இம்மூளையின் பற்பல விடங்களுள் ஒவ்வோரிடமும் ஒவ்வொரு வகை உணர்ச்சியை உணர்வதற்கும் ஒவ்வொருவகைக் கட்டளை யிடுவதற்குமென ஏற்பட்டிருக்கிறது. எடுத்துக் காட்டாக, பார்வை என்னும் உணர்ச்சியைக் கொடுக்கிற பங்கு மூளையின் பின்புறத்திலிருக்கிறது. கண்ணிலிருந்து இப்பங்கிற்கு நரம்புகள் செல்கின்றன. ஒருவன் மல்லாந்து

விழுவதால் மூளையின் இப்பங்குகெடின் கண்கள் நன்றாயிருந்தும் பார்க்க முடியாது. இம்மாதிரியே ஒருவன் மூளையின் பேசுமிடங்கெடின் அவனால் பேசமுடியாது. எனினும் அவனுடைய கேட்குமிடம் நன்றாயிருப்பின் நாம் சொல்வதைக் கேட்டுக் கொண்டு, கையை இயக்குமிடம் நன்றாயிருந்தால் தக்க பதிலை அவன் எழுதிக் காட்டிவிடுவான். இவ்வாறு பலப்பல உணர்ச்சிகளை அறியுமிடங்களையும், உறுப்புக்களை இயக்குமிடங்களையும் படங்களிற் கண்டுகொள்க.

பழக்கங்கள் :—மக்களுடைய உள்ள, உடற் செயல்களையெல்லாந் தொகுத்துப் பாகுபாடு படுத்திப் பார்த்தால் அவை யாவும் நான்கு பிரிவினுள் அடங்கும். அவையே நினைப்பு (Thought), உணர்ச்சி (Feeling), தீர்மானம் (Will or Determination) அதனாலாய உடலின் செயல்கள் (Actions) என்பனவாம். நினைப்பதும், உணர்வதும், தீர்மானிப்பதும் மூளையிலும் தண்டிலுமுள்ள கூடுகளின் வேலைகளாம்; உடலின் செயல்கள் ஈண்டுள்ள நரம்புகளால் இயக்கப்படுகிற தசைகளின் வேலைகளாம். எனவே யாவற்றிற்கும் நரம்புக்கூடுகளே முதலாயிருக்கின்றன. இந் நான்கனுள் யாதேனும் ஒன்று நிகழினும் அதற்கு முதலாயிருக்கிற நரம்புக் கூட்டிற்குக் குருதி மிகுதியாய்ப் பாய்ந்து அது வலுவடைந்து பெருக்கிறது; அக் கூட்டின் கிளைகளும் பருத்து வலுவடைந்து பக்கத்துக் கூட்டுகளுடன் இணைப்பும் (சம்பந்தமும்) மிகுகிறது. இதுவன்றி உடற் செயல் நிகழும் பொழுதெல்லாம் அச் செயலைப் புரியுந் தசைகளுக்குங் குருதி மிகுதியாய்ப் பாய்ந்து அவையும் பெருத்து வலுவடைகின்றன. இதனால் அச்செயலை மறுமுறை செய்தல் எளிதாகிறது. இவ்வாறு பலமுறை செய்யச் செய்ய அதற்கு முதலான நரம்புக் கூடுகளுந் தசைகளும் மிகுதியாய்ப் பெருத்து வலுவடைவதால் அச்செயல் நமக்கு மிக எளிதாகிப் பழக்கமாகிறது. இவ்வாறு உண்டாகிற பல பழக்கங்கள் ஒருவனை மற்றெல்லோரினின்றும் வேறுபடுத்திக் காண்பிக்கும் பண்பாகிறது. இப் பழக்கங்கள் இருவகைப்படும். அவையே நல்லனவுந் தீயனவுமாம்.

நற்பழக்கங்கள் :—ஒருவன் மற்றெவராலும் நல்லவன், பெரியவன், மதியுடையோன், இனியவன் என்று மதிக்கப்பட விரும்பினால் அதற்கான பழக்கங்களைச் செய்துகொள்ளல் வேண்டும். இவற்றிற்கு முறையே நல்ல எண்ணங்களை எண்ணுதல், உயர்ந்த எண்ணங்களை எண்ணுதல், ஆராய்ந்து செயல், இனியனசெயல் ஆகிய நற் பழக்கங்கள் வேண்டும். இவையன்றிச் சுறுசுறுப்பு, முயற்சி, உழைப்பு, தூய்மை, அடக்கம், பொறை, பிறர் உள்ளம் நோவன செய்யாமை, சினமின்மை, குறித்த பொழுது தவறாமை (Punctuality), தீவினையச்சம், அன்புடைமை, அருளுடைமை முதலிய பல நற்பழக்கங்கள் நம் உள்ளத்தை ஒளிரச்செய்வன. வைகறைத்துயிலெழல், உடற் பயிற்சி செய்தல், கூனாது நிமிர்ந்திருத்தல், வாயை மூடல், மென்றுண்ணல், புகையிலை, காப்பி, கள் முதலியவற்றை நீக்கல், முதலிய பழக்கங்கள் உடலை வலிவுடனும் நலனுடனும் பல ஆண்டு வாழச் செய்யும் நற்பழக்கங்களாம். நேராம் உட்கார்தல், நிற்றல், நடத்தல், பேசுதல், எழுதுதல், உடுத்தல், உண்ணல் முதலிய பலப்பல வேலைகளைச் செய்யும் பொழுதெல்லாம் நம் உள்ளத்தையும் பார்ப்பவர் உள்ளத்தையுங் கவரும்படி அழகாகவும் திறமையுடனும், குறைந்த முயற்சியால் பெரும்பயனடையும் படியும், நெடும்பொழுது வேலை செய்யும்படியும் செய்தல் மிகுந்த இனிமைதரும் நற்பழக்கங்களாம். இன்னும்

சித்திரமுங் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையு நடைப்பழக்கம் நட்புந் தயையுங்
கொடையும் பிறவிக் குணம்

என்று ஔவையார் கூறியுள்ளபடி, சித்திரம் எழுதுதலன்றித் தச்சு, கொல்லு, கல்தச்சு முதலிய பல தொழில்களும், நீந்துதல், ஓடல், பந்தடித்தல் முதலிய பல விளையாட்டுகளும். செந்தமிழன்றிப் பல மொழிகளைக் கற்றலும், அம்மொழிகளில் நூலியற்றலும் சொற் பொழிவு நிகழ்த்தலும் பலநாட் பழக்கத்தாலேயே வந்துவிடும்.

எனினும் சிலருக்குச் சில பழக்கங்கள் எளிதிலும் சில அரிதிலும் வரும் என்பதை

வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்கும் செய்யரிதால்—யாம்பெரிதும்
வல்லோமே யென்று வலியசொல வேண்டாங்காண்
எல்லோர்க்கும் ஒவ்வொன் றெளிது

என்னும் பாடல் விளக்கும்.

இவ்வாறாய பல நற்பழக்கங்களைச் செய்துகொள்ளத் தகுந்த பருவம் இருபத்தைந்து அல்லது முப்பது * ஆண்டுகளுக்குட்பட்ட இளமைப் பருவமாம். ஏனெனில் இப்பொழுதில்தான் நரம்புகள் வளர்ந்து வருகின்றனவாதலின் இந் நற்பழக்கங்களுக்கான நரம்புக்கூடுகள் வலுத்து வேண்டிய நல்ல தொடர்புடையனவாக வளரும். இதனால்தான் தொட்டிற் பழக்கஞ் சுடுகாடுமட்டே என்று கூறப்பட்டது. இப் பழக்கங்களைப் பின் தவிர்த்தல் எளிதன்று. இவ்வாறு நற்பழக்கங்களை உண்டாக்கிக் கொள்ளலே சிறந்தகல்வியாம். இதுவன்றி சுவடிகளைப்படித்து எழுதப்பழகல் மட்டுங் கல்வியாகக் கருதல் என்ன மதியின்மை! இந் நற்பழக்கங்கள் சுவடிகளிலிருந்து மட்டும் வந்துவிடக்கூடியன அல்ல. நல்லாரோடு பழகுதலாலும், உள்ள முயற்சியாலுமே வரும். இளமைப் பருவத்துத் தாய், தந்தை; உடன்பிறந்தார் முதலிய நெருங்கிய சுற்றத்தினரே நமக்கு முதல் நண்பர்களாதலின், இவர்களின் பழக்கவழக்கங்களே இளைஞர்களுக்கும் படியுமாதலின் இவர்கள் தங்களைப் பொறுத்து நற்பழக்கங்களைச் செய்து கொள்ளாவிடினும் தங்கள் மக்களின் பொருட்டாவது செய்து கொள்ளவேண்டுமன்றோ? இதற்காகவே குடிப்பெருமை போற்றத் தகுந்ததாகும். இவ்வாறு நற்பழக்கங்கள் உண்டாகா

---

* இதனாற்றான் ஔவையாரும் :—

முப்பதா மாண்டளவில் மூன்றற் றொருபொருளைத்
தப்பாமற் றன்னுட்பெறு ஞயின்—

பின்பெறுவது அரிது என்று கூறியுள்ளார்.

விடினும் நல்லறிவு வந்தபின் முதுமையிலும் தக்க நற்பழக்கங்கள் செய்து கொள்ளக்கூடும். அதற்கு விடாமுயற்சியும், நிலையுள்ள தீர்மானமும் கடைப்பிடியும் வேண்டும்.

தீப்பழக்கங்களும் அவற்றை நீக்கும் வழிகளும்:—முற் கூறியவற்றிற்கு மாறானவை யாவுந் தீப்பழக்கங்களாம். இவை உடல் உள்ளங்களைக்கெடுத்து இம்மையில் துன்பமும், சாக்காடும், மறுமையில் கொடுந்துன்பமும் அளிக்கவல்லன. ஆதலின் இவற்றை நமது பெரும்பகையாகக் கருதி ஒழித்தல் வேண்டும். இதற்கு இரு வழிகள் உண்டு (1) அத்தீய பழக்கங்களைப் பிடிவாதத்தால் செய்யாது விடல் முதல் வழியாம். இதனால் அத்தீய பழக்கங்களுக்கு முதலாயிருக்கும் நரம்புக் கூடுகள் சிறுத்துச் சிறுத்து வலிவற்றுப்போவதன்றி மற்றக்கூடுகளுடன் உள்ள இணைப்பும் வலுவற்று வரும். இவ்வாறு இக் கெட்ட பழக்கங்கள் எவ்வளவிற்கெவ்வளவு விடுபட்டனவோ அவ்வாறு அவ்வளவிற்கவ்வளவு திரும்பவும் வருதல் அரிது. எனினும் ஒரு பழக்கம் ஒருமுறை செய்துவிட்டால் அது பின்னும் எப்பொழுதாவது திரும்பிவரக்கூடிய ஒரு இடுக்கண் உண்டு. ஆதலின் மறந்துங் கெட்டபழக்கஞ் செய்யக் கூடாது. இவ்வாறு செய்தல் நச்சுநாட்டம் (விஷபரீக்ஷை) பார்த்தலை ஒக்கும். தவறிச் செய்துவிட்டாலும் வெகு கவலையாக மறுமுறை அப்பழக்கத்திற் குள்ளாகாமலிருக்கப் பாடுபடவேண்டும். இவ்வாறு பிடிவாதத்தால் காப்பி, கள், புகையிலை முதலிய தீய பொருள்களைப் பயன் படுத்தும் கெட்ட பழக்கங்களை நீக்கிக்கொள்ளலாமென்று முன்பு கண்டோம். (2) தீய பழக்கங்களை நீக்கும் இரண்டாவது வழிதான் அப்பழக்கத்திற்கு மாறான நற்பழக்கம் செய்துகொள்ள லாகும். சினம், பொறாமை முதலிய தீய பழக்கங்களை அன்பினால் நீக்கிக்கொள்ளலாம்; சோம்பலை மாறு உழைப்பினாலும், கூனலை எப்பொழுதும் நிமிர்ந்திருக்கப் பழகுதலினாலும் இவ்வாறு ஒவ்வொரு தீய பழக்கங்களையும் அதற்குத்தக்க எதிர்ப்பழக்கங் களாலும் நீக்கிக்கொள்ளல் கூடும். இதற்கு உள்ள உறுதியும் ஊக்கமுமே தேவை.

களைப்பு:—இவ்வாறு பழக்கங்கள் செய்து வருவதால் அவைகளுக்கு உரித்தான நரம்புக் கூடுகளுக்குக் குருதிபாய்ந்து பருத்துவரினும், ஒரே வேலையை நெடும் பொழுது செய்யின் அவ் வேலையைச் செய்விக்குங் கூடுகள் சுருங்கி, சிறுத்து, வலிவிழந்து போகின்றன. அன்றியும் நம்மூளைக்கு நம்முடலிலுள்ள குருதியில் ஐந்தில் ஒரு பங்கு பாய்ந்துகொண்டேயிருப்பினும், வேலை செய்து கொண்டேயிருப்பதால் உண்டாகுங் கழி பொருள்கள் முழுவதும் நீக்கப் பெருது மூளையின் கூடுகளை நச்சுப்படுத்தி விடுகின்றன. இதனால் களைப்படைகிறோம். †பின் களைப்பாறினால் இந் நச்சு நீங்குவதாலும், மூளையின் கூடுகள் பருத்து வலுவடைவதினாலும் வேலை செய்தல் எளிதாகிறது. இவ்வாறு களைப்பாறல் மூன்று வகைத்து. ஒன்று அவ்வேலை செய்யாது வாளாவிருத்தல்; இரண்டு வேறு வேலை செய்தல்; மூன்று தூங்கல்.

களைப்பை நீக்கும் வழிகள்:—முதலாவதாக ஒரு வேலையுஞ் செய்யாதிருத்தலினால் அக்கூடுகள் சிறிதே களைப்பாறலடைகின்றன. ஏனெனில் உடல் வேலையின்றி இருக்கிறதேயன்றி, உள்ளம் உழைத்துக்கொண்டே யிருப்பதால் மூளையின் கூடுகள் முழுதும் களைப்பாறுகிறதில்லை. அன்றியும் வாளாவிருத்தல் மக்கள் இயற்கைக்கு மாறுகலின் அத்துணை இன்பம் பயக்காது. ஆனால் வேறு வேலை செய்யப்புகின் வேறு கூடுகள் வேலை செய்வதால் களைப்டைந்த கூடுகள் அப்பொழுது ஆறுதலடைகின்றன. இவ்வாறு களைப்பாறச்செய்யும் வேலை முதற் செய்த வேலைக்கு ஒத்ததாக விருத்தல் சிறிதே நன்மை பயக்கும். ஏனெனில் பெரும்பாலும் அக் கூடுகளே இயக்கப்பட்டு களைப்பு மிகும். எடுத்துக் காட்டாக கணக்குப் போட்டுக் களைப்படைந்த பிள்ளைகளை எழுத்து நூல் (இலக்கணம்) படிக்கச் சொன்னால் களைப்பு மிகும். ஆனால்

---

† இக்களைப்பு உண்டாக்கிக்கொள்ளத் தகுந்ததே. ஆனால் மயக்கப் பொருள்களைப் பயன் படுத்துவதாலும், சோம்பலினாலும் மீதூண் உண்பதினாலும், தூயகாற்றை மூச்சுவிடாததினாலும் நச்சுப் பொருள்களுண்டாய் பெருங்களைப்பை உண்டாக்குகின்றன. இவை சிறிதும் விரும்பத்தகாத களைப்பாம்.

ஓவியம் போடுவாவது, கைகால் வீசவாவது (Drill) எழுதவாவது சொன்னால் களைப்பு மாறும். ஒவ்வொரு குறிப்பொழுதின் (Period) இடையிடையே சிறுவர்களை சிறிது உலாவவாவது, விளையாடவாவது விட்டால் ஊக்கம் மிகுந்து அடுத்தபாடம் படிக்க உள்ள எழுச்சி உண்டாகும். இது பெரியோர்களுக்கும் ஒத்ததேயாம். இவ்வாறு நாள் முழுவதும் வேலைசெய்ய வேண்டியவர்கள் ஒவ்வொரு இன்ப வேலை (Hobby) யை வைத்துக் கொண்டு இடையிடையே அதைச் செய்தல் நன்று. இவ்வின்ப வேலையும் நம் கடமைக்குத் தக்கபடி இருத்தல் நன்று. நாம் பெரும் பகுதி உடலால் உழைக்கவேண்டியதாயிருந்தால் நம்மின்ப வேலை உள்ளத்தால் உழைக்கத்தகுந்ததாகவும், இதற்கு எதிர் எதிராகவும் இருத்தல் நலம். இவ்வாறு தக்கபடி வேலைகளை மாற்றி மாற்றி நெடும்பொழுது வேலை செய்துகொண்டே இருக்க இயலாது. ஏனெனில் வேலைசெய்து கொண்டிருக்கும் பொழுதெல்லாம் தசை மூளையின் நார்கள் தேய்வடைதல் மிகுதியாகவும் குருதியால் வளர்தல் குறைவாகவுமே இருப்பதால் களைப்பு மிகுந்து கொண்டே வந்து வேலை செய்தல் இயலாமற் போகிறது. இதை நீக்கத் தூங்குவோமாயின் அப்பொழுது தேய்வு மிகக் குறைந்தும் வளரல் மிகுதியாயும் இருந்து வருவதால் சிறிது சிறிதாகத் தேய்வு நீங்கித் தூக்கமும் தானகவே நீங்கிவிடுகிறது. பின் மறுபடியும் வேலை செய்தல் எளிதாகிவிடுகிறது.

தூக்கம் :— தூங்குகையில் நரம்புக் கூட்டமும் தசைக் கூட்டமும் இவ்வாறு களைப்பாறுகின்றன. கண்ணும் காதும் இருட்டாலும், ஓசையின்மையாலும் களைப்பாறுகின்றன. மூளைக்குக் குருதி குறைவாய்ப் பாய்கிறது. உயிர்த்தொழில்களாய மூச்சு விடல், எற்றத்துடிப்பு, சமித்தல் முதலியன மெதுவாகி இவைகளைச் செய்விக்கும் கட்டுப்படாத தசைகளும் இளைப்பாறுகின்றன. உடலிலுண்டாகுஞ் சூடுங் குறைகிறது. இவ்வாறாய பல நலங்களை அளிக்குந் தூக்கம் யாவருக்கும் இன்றியமையாததாகும். இஃது ஆண்டுச் செல்லச்செல்லக் குறைந்து வருகிறது. குழவிகளுக்குத் தூக்கம் மிகுதியாய் வேண்டும். அவைகளைப்

பால் கொடுப்பதற்கும் எழுப்பாது தாமாகவே விழிக்கும் பொழுது பார்த்துக் கொடுக்கவேண்டும். இவ்வாறு தூக்கங் கலைக்கப் பெருத குழவிகளே பின் சிறந்த அறிவாளிகளாகின்றன வென்று எண்ண இடமுண்டு. யாவருக்கும் தூங்கப் புகுந்த இரண்டாவது மணியில் தூக்கம் மிகுவதால் அயர்ச்சி மிகுகிறது. அப்பொழுது எழுப்பப்படின் நரம்புக் கூட்டத்திற்கு மிகுந்த அதிர்ச்சிஉண்டாகிறது. ஆதலின் அப்பொழுதெழுப்பல் பெரும் பிழை. நல்நிலேயிலுள்ள சராசரி மகனெருவனுக்கு 8மணித் தூக்கம் வேண்டும். நோயுற்ருலும், உழைப்பு மிகுந்திருந்தாலும், இன்னும் மிகுதியாகத் தேவையே. குறித்த பொழுதில் படுக்கைக்குச் செல்வோருக்குத் தூக்கம் உடன் வரும். தூங்கும் பொழுது தசைகள் தளர்வுற்றிருப்பதால், தூங்கப் புகும்பொழுது கழுத்தைத் திமிராகவும், பல்லேக்கடித்துக் கொண்டும், தசைகளே முறுக்கேற்றிக் கொண்டும் இருந்தால் தூக்கம் வராது. பகலிலும் தூங்கப் புகும்பொழுதும் துன்புற்றுக்கொண்டும், உள்ளம் கிளர்ச்சியடையும்படியும் இருந்தால் தூக்கம் வராது. இவைகளேத் தணித்தால் தூக்கம் வரும். தேருதலுக்குப் படிப்பவர்கள் நெடும் பொழுது இரவில் விழித்துப் படிப்பதால் மூளே கலங்கி உள்ளதுங் கெட்டுவிடும். ஆதலின் அதற்குமுன் நன்ருய்த் தூங்கினுல் நரம்புக்கூடுகள் வலுத்தும் குருதி தூய்மையடைந்தும் இருக்கு மாதலின் விடை எழுதும்பொழுது மூளே நன்ருய் வேலே செய்தல் இயலும்.

நரம்பு நலிந்தோர் (Nervous People) :—இவர்கள் ஒழுங் காய்க் களேப்பாருததினுலும், தூங்காததினுலும், இரவு பகல் இடைவிடா வலுத்த ஓசையுள்ள இடத்தில் இருப்பதால் காதின் நரம்புகளுக்குத் தக்க ஓய்வு இல்லாததாலும், சர்க்கரையை மிகுதி யாய் உண்பதாலும் இவ்வாறு நலிவுறுவர். இந்நலிவு சிறப்பாய்ச் சிறுவர்களுக்கும் அவர்களுள்ளும் பள்ளிப் பிள்ளேகளுக்குமே உண்டாகிறது. இதை நீக்கத் தகுந்த வழிகளாவன :—(1) பலர் கூடுமிடமாகிய பள்ளியில் காற்ருேட்டம் ஒழுங்காய் வைத்திருத்தல் முதல்வழியாம். (2) நெடும் பொழுது ஒரே பாடத்தைப் ப்டிக்கச்

செய்தல் களைப்பை யுண்டாக்குமாதலின் ஒவ்வொரு பாடத்திற்கென்று குறிக்கப்பட்ட பொழுது (Period) சிறிதாயிருக்க வேண்டும். அதிலுங் கீழ் வகுப்புக்களில் மிகச் சிறிதாயிருக்க வேண்டும். ஒரு பாடம் முடிந்ததும் வேறுபாடம் தக்கபடி மாறியிருத்தலும் வேண்டும். (3) இளஞ்சிறுர்களின் இயற்கை வாளாவிருத்தல் அன்று. அவர்கள் கன்றுக்குட்டி துள்ளுவது போல் துள்ளிக் குதித்துக்கொண்டே கைகால்களால் வேலை செய்துகொண்டே யிருக்கும் இயல்புடையவர்கள். அவர்களை ஒரே இடத்தில் கையையுங் காலையும் அடக்கிக்கொண்டு சும்மா இருக்கச் செய்தல் கொடிது. அத்துடன் வளர்ந்த மக்களின் இயற்கைக்கும் மாறுயுள்ள சுவடி படித்தலைச் செய்யச் செய்தல் அதனினுங் கொடிதே. ஆதலின் அவர்களை அடிக்கடி வெளி வேலை, இயற்கைப்பொருள்களைப் பார்த்துப் பழகுதல், களிமண் வேலை, சித்திரம் எழுதுதல் முதலிய சுவடியின்றிச் செய்யும் பல வேலைகளைச் செய்யச் சொல்லல் மூன்ருவது நலவழியாம். இத்துடன் அவர்களை அடிக்கடி விளையாடவும் ஓடவும் செய்தல் மிகௗ நன்று. இவ்வாறு இயலாவிடின் கைகால்களை வீசவும் எழுந்துட்காரவுமாவது சொல்லவேண்டும். இது ஒன்பது ஆண்டிற்குட்பட்ட சிறுவர்களுக்கு அரை மணிக்கு ஒரு முறை ஐந்து துடிப்பொழுதும், பதின்மூன்று ஆண்டிற்குட்பட்டவர்களுக்கு ஒரு மணிக்கு ஒரு முறை பத்துத் துடிப்பொழுதும், அதற்குமேல் ஆண்டுள்ளவர்களுக்கு அரை நாளில் 15 அல்லது 20 துடிப்பொழுதும் விளையாடப் பொழுது கொடுக்கவேண்டும். இப் பொழுதுகளில் அவர்களைத் திறந்த வெளியிற் சென்று நன்ருய் ஆழ்ந்த மூச்சுவிடச் செய்தலும் மிக்கநலந்தரும். (4) நான்காவதாக அவர்களைக் கூனிக்கொண்டும், குனிந்துகொண்டும், முதுகை ஒரு பக்கமாகச் சாய்ந்து வளைத்துக்கொண்டும் சரிந்து படுத்தாற்போல் உட்கார்ந்துகொண்டும் இல்லாதபடி நேராக உட்காரும்படி சொல்லுவதன்றி அதற்கு ஒத்த உட்காரும் பலகைகளையும் போடவேண்டும். இவ்வாறு செய்துகொள்ளல் ஆண்டு முதிர்ந்தோருக்கும் இன்றியமையாததாகும்.

நோய் முதல் :—இவ்வாறுள்ள பல நலவழிகளை நாடாது நடப்போமாயின் பல விடங்களில் வலியுண்டாகிறது; பல நோய்கள் உண்டாகின்றன. இந்நோய், வலிகளின் முதலை நாடாது அதை நீக்காது மருந்தை மாத்திரம் உண்டால் நோய் நீங்குமா? நீங்காது. ஆதலின்

நோய்நாடி நோய்முதல் நாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

என்றபடி இந் நலவழிகளில் எதை விட்டுவிட்டதால் இந்நோய் வந்ததென்று ஆராய்ந்து அந் நலவழியைப் பின்பற்றினால்தான் நோய் உண்மையாக நீங்கும். இவ்வாறின்றி மருந்தை உண்ண முயலின் மருந்தின் வேகத்தால் நோய் சிறிது நீங்கினும் பின் நலவழி நாடாமையால் வலியும் நோயும் வந்துவிடுமன்றோ? அவ்வாறு வரவர மருந்தையே நம்பி நலம் பெறலாகாதோவெனின் ஆகாது! ஏனெனின் வரவர மருந்தை மிகுதிப்படுத்திக் கொண்டே செல்லவேண்டும். இதனால் உடல் நச்சுறுத்தப்பட்டு நலிந்து பின்னும் பெரு நோயுறும். இதற்காகவே புதுவகையான அறிவுள்ள மருத்துவர், யாவர் நோயுறினும் அந்நோய் முதல் யாதென முறையாக நாடுகின்றனர். முதலில் நோயாளி மூச்சு விடுங்காற்று தூயதா? தூசியற்றதா? என்று பார்க்கின்றனர். மூச்சும் சரிவர மூக்கால் நிமிர்ந்துவிடப்படுகிறதா என்றும் ஆராய்கின்றனர். பின் குடிக்கப்பெறும் நீர் தூயதா என்றும், உண்ணப்படும் உணவு தூயதாய், மாறுபாடில்லாததாய், போதிய சத்துள்ளதாய் உளதா? அளவுப்படி நன்றாய் மென்று உண்ணப் படுகின்றதா? என்றும் பார்க்கின்றனர். அதன்பின் தசைகளுக்குப் போதிய பயிற்சி, களைப்பாறல் உண்டா என்றும், உடையும் உடலும் தூய்மையாய் வைத்திருக்கப்படுகின்றனவா என்றும், உள்ளம் கவலை, சினம் இன்றி இருக்கின்றதா என்றும் பார்த்து அவ்வாறில்லாவிடின் அதற்குத்தக்க ஏற்பாடுகள் செய்துகொள்ளச் செய்கின்றனர். இவ்வாறு செய்யின் உடல் தன்னைத்தானே நலப்படுத்திக் கொள்ளுகிறது. இவ்வாறு நோய் நீங்குவதால் மருந்தை மிகக் குறைவாய்ப் பயன் படுத்துகின்றனர். இதற்கு மாறாகச்சிலர் இரண்டொரு நோய்க்குத்தக்க மருந்துகளைத்

தெரிந்துகொண்ட அளவிலே, தாமே பெரும் மருத்துவரீாய் விட்டோமென்று கருதி, அம் மருந்துகளை வீட்டில் வாங்கி வைத்துக்கொண்டு தொட்டதிற்கெல்லாம் அவற்றை உண்கின்றனர். இதனால் இவர்களுக்கு அப்போதைக்கப்போது நோய் நீங்குவதால் சிறிது நலமிருக்கலாம். ஆனால் அவர்கள் நோய் முதலை ஆராய்ந்து நீக்காததினால் அந்நோய் அடிக்கடி வருவதால் உடல் நலிந்துகெடும். அவ்வாறிலாது உடல்நலவழிகளை உண்மையாகவும் ஒழுங்காகவும் உணர்ந்தவர்கள் தம் உடல் நோயுறப் புகும்போழுதே தானே அந்நோய் முதலை ஆய்ந்தறிந்து அதைத் தக்க நற்பழக்கங்களால் நீக்கிக்கொள்ளுவர்; தனக்கு அந்நோய் முதலை அறியும் ஆற்றல் இல்லையேல் தக்க மருத்துவரின் உதவியாலாவது அறிந்து நீக்கிக்கொள்ளுவர்.

வலிகள்:—இவ்வாறு நீக்கிக்கொள்வதற்காக நம் நோயை நமக்கு நன்றாய் அறிவுறுத்துவன வலிகளாம். இவை இருப்பதாற்றான் நாம் நீடித்து வாழ்கின்றோம். ஏனெனில் அவைகளை பொறுக்க முடியாது நீக்கி உடல் நலத்தை அடைகின்றோம். வலிகள் நான்குவகையில் ஒன்றால் உண்டாகலாம். அவைதாம் (1) நரம்பு அறுபடல் அல்லது கிழிபடல் (2) அமுக்கப்படல் அல்லது இழுக்கப்படல் (3) நரம்புகளின் ஊட்டங் குறைதல் (4) நரம்புகள் நச்சுறுத்தப்படல். இந் நான்கினுள் உடலின் வெளிப்புறத்துண்டாம் வலி முதலிரண்டு வகையாலும் தலைவலி, முதலிய உட்புறத்துண்டாம் வலி கடை மூன்றுவகையாலும் உண்டாகின்றன. இவைகளை நீக்க இவற்றின் முதலை நீக்குதலே தக்க வழி.

தலைவலி:—இது பலருக்கு அடிக்கடி உண்டாகிறது. இது மூன்றுவகையால் உண்டாகக்கூடும் என்று கண்டோம். இவ் வகையை முன்னிட்டு அதற்குத்தக்க இடங்களில் வலி தோன்றும் குருதிக்குறைவினால் நரம்புகள் ஊட்டம் பெறாது உண்டாம் தலை வலி உச்சியில் உண்டாகிறது. பசியின்மை, வெளிக்குப் போகாமையால் உண்டாம் தலைவலி நெற்றிப்பக்கத்திலும், மூக்கு, காது, பல்லின் கெடுதல்களினாலுண்டாம் தலைவலி காதுகளுக்குச் சற்று

மேலும், நரம்புகள் களைப்புறுவதாலும் முள்ளந்தலோடு உறுத்தப் படுவதாலும் உண்டாம் தலைவலி பிடரிக்குச் சற்று மேலும், கண் மிகுதியாய் உழைப்பதால் உண்டாம் தலைவலி இம் மூன்றிடங் களில் ஒன்றிலும் உண்டாகின்றன. இவ்வாறுண்டாகும் வலிகளை நீக்க அவற்றின் முதலை நாடி நீக்காது பலர் பல மருந்துகளைத் தடவியும், உட்கொண்டும் நீக்கிக்கொள்ளுகின்றனர். என்ன மதியின்மை! தலைவலி மருந்துகளில் கஞ்சா அபின் முதலிய தீய சரக்குகள் இருந்து கொண்டு குருதியோட்டத்தைக் குறைத்து நரம்புகளை மயக்கி வலியை நீக்குகின்றன. என்ன கெடுதல்! இவ்வாறு கேடடையாது இருக்க மேற் கூறிய மூவகையால் வரும் வழிகளையும் அவ்வவற்றை நீக்கும் வழிகளையும் ஆராய்வோம்.

நரம்புகள் அமுக்கப்படலால் உண்டாம் தலைவலி:—இவ் வலி அடிக்கடி சினம் உறலினாலும், திடீரென அச்சப்படல், வருந்தல், களைப்புறல் முதலிய பல கடும் உணர்ச்சிகளாலும் ஏற்றத் துடிப்பு மிகுந்து தலைக்குக் குருதி மிகுதியாய்ச் செல்வதால் உண்டாகிறது. இன்னுங் கால் குளிர்ந்தால் அங்குச் செல்ல வேண்டிய குருதி தலைக்கு மிகுதியாய்ச் செல்வதாலும், சாப்பிடா மல் பட்டினியுற்றால் சமிக்கும் உறுப்புகளுக்குச் செல்லவேண்டிய குருதி தலைக்கு மிகுதியாய்ச் செல்வதாலும் உண்டாகிறது. இவ்வாறு தலைக்குக் குருதி மிகுதியாய்ச் செல்வதால் ஏற்றத்தின் ஒவ்வொரு துடிப்புக்கும் தக தலையில் ஒவ்வொரு அதிர்ச்சி (இடி அல்லது தெரிப்பு) உண்டாகும். இவ்வாறு வரும் வலியை நீக்க முறையே உள்ளத்தை அமைதிப்படுத்தல், காலைச் சூடுறச் செய்தல், உண்ணல் முதலியவைகளால் நோய் முதலை நீக்கலே தக்க வழிகளாம்.

ஊட்டக் குறைவால் உண்டாம் தலைவலி:—இது பசி மிகுத்தவர்களுக்கும், குருதி செத்தவர்களுக்கும் உண்டாகிறது. போதிய உணவு உண்ணாமையால் நரம்புகளும் பசியுற்று அப்பசி யைத் தலைவலியால் தெரிவிக்கின்றன. இதை நீக்க நல்ல உணவை சாப்பிடுவதே தக்க மருந்தாம். குருதி செத்தவர்களின் குருதியில் செங்கூடுகள் மிகக் குறைவு ஆதலின் அன்னார் வெளுத்துப்போ

கின்றனர். இதை நீக்க வெளிவேலையும் வேண்டிய அளவு தூய தண்ணீரும் உணவுமே தேவை. வெளிவேலையால் ஆழ்ந்த மூச்சுண்டாகி தூய காற்றை உட்கொள்வதால் பசி மிகுகிறது. உணவு நன்றாய்ச் சமித்துத் தண்ணீருடன்கலந்து பாவித்தூய குருதியாக மாறுகிறது. இதனால் தலைவலி நின்றுபோம்.

நச்சால் உண்டாம் வலி :—இவ் வலி வெளியிலுள்ள நச்சை உட்கொள்வதாலும், உடலின் உள்ளேயே நச்சுண்டாவதாலும் உண்டாகலாம். வெளி நச்சுக்களால் தலைவலி யுண்டாம் வகையாவன:– கரிக்காற்று மிகுத்த அரையில் தங்கலால் குருதி அழுக்கடைந்து தலைவலி யுண்டாகிறது. ஆதலின் பள்ளி, நாடகக் கொட்டகை முதலிய பலர் கூடுமிடங்களில் காற்றோட்டம் ஒழுங்காயில்லாவிட்டால் வெளியில் வந்துவிடல் வேண்டும். கள், சாராயம், கஞ்சா, அபின், புகையிலை, காப்பி, தேநீர் முதலியனவும் குருதியைக் கெடுத்துத் தலைவலியை உண்டாக்குகின்றன.* காரமான மருந்துகளிலுள்ள 'ரசம்' முதலிய பொருள்களாலும் தலைவலி உண்டாகின்றன. உள் நச்சுக்களால் தலைவலி உண்டாம் வகையாவன :—நெடும் பொழுது உழைத்தலால் தசை நார்கள் உண்டாக்கும் கரிக்காற்று, சிறு நீர் உப்பு, முதலிய நச்சுப் பொருள்கள் நரம்புகளைக் கெடுத்துத் தலைவலியை உண்டாக்குகின்றன. இவ்வாறே உள்ள உழைப்பின் மிகையாலும், தூக்கம் இன்மையாலும், கவலை, நீடித்த சினம் முதலிய கடுமையான உணர்ச்சியாலும், நச்சுப் பொருள்களுண்டாய்த் தலைவலிக்கிறது. பொடிப் பொருள்களை நெடும்பொழுது பார்ப்பதாலும், வெளிச்சம் குறைந்த அல்லது மிகுந்த அல்லது கண்மட்டத்தின் கீழிருந்து வருகிற இடத்தில் உள்ள சிறு பொருள்களைப் பார்த்துக்கொண்டிருப்பதாலும், கண் வருந்தி உழைக்கவேண்டியிருப்பதால் தலைவலி உண்டாகும். மீதூண், எளிதில் சமிக்காத உணவு, களைப்புடன் இருக்கையில் உண்ட உணவு இவை எளிதில் சமியா

* இம்மயக்கப் பொருள்களே நரம்புகளை மயக்கியும், குருதியேற்றத்தை குறைவாக வேலைசெய்யச் செய்து மூளைக்குச் செல்லுங் குருதியைக் குறைத்தும் தலைவலியை நீக்குகின்றன.

வகைகையால் உணவு வாய்க்காலிலிருந்து அழுகி நச்சுப்பொருளாக மாறுகின்றன வாதலின் தலைவலி உண்டாகிறது. இவ்வாறு உணவின் குற்றத்தால் வயிற்றுவலிகூட எளிதில் உண்டாவதில்லை; தலைவலிதான் உண்டாகிறது. ஏனெனில் இதனால் உண்டாகும் நச்சுப்பொருள்கள் குருதியுடன் கலப்பதாலும் அக்குருதி மென்மையான மூளைக்கே மிகுதியாய்ச் செல்வதாலும் தலைவலி உண்டாகிறது. சளிபிடித்தால் தசை நார்கள் வெந்து அழுக்குப் பொருளாக மாறிக் குருதியுடன் கலந்து தலைவலியை உண்டாக்குகிறது. இவ்வாறுண்டாம் தலைவலிகளை நீக்க முற்கூறியதுபோல் அவ்வம் முதலைக் கண்டுபிடித்து நீக்குதலே தக்க வழியாம்.

தூண்டு பொருள்கள் (Stimulants):—இவை உடலை மிகுதியாய் உழைக்கச் செய்கின்றன. ஆனால் உழைப்புக்குத் தக்க உணவையும் வலிவையுங் கொடுப்பதில்லை; உடலில் சேமித்து வைக்கப்பட்டிருக்கிற உணவையும் வலிவையும் பயன்படுத்துகின்றன. இவை இருவகை: இயற்கைத்தூண்டு பொருள்கள், செயற்கைத் தூண்டு பொருள்கள் என்பனவாம்.

இயற்கைத் தூண்டு பொருள்கள்:—குளிர் நீர் முழுக்கு, தோலில் எதிர்ப்பை † உண்டாக்கிச் சூடடையச் செய்கிறது. நல்ல காற்று, மாலை வெய்யில், உடற்பயிற்சி முதலியன சுறுசுறுப்பை உண்டாக்குகின்றன. பசி உண்ணச் செய்கிறது. மனைவி மக்களிடத்துள்ள அன்பு வருந்தி உழைத்துப் பொருள்தேடச் செய்கிறது. படிப்பிலுள்ள விருப்பம் ஊக்கத்துடன் கற்கச் செய்கிறது. சிறிது இன்பமும், நட்பும் நற்செய்கைகளைச் செய்யத் தூண்டுகின்றன. இவ்வாறு பல இயற்கை வழிகளில் நாம்

† எதிர்ப்பு என்பது ஒரு பொருளினால் உண்டாகிற தீமையை நீக்கிக் கொள்ள உடல் செய்துகொள்ளும் ஏற்பாடாகும். குளிரை நீக்கிக்கொள்ள தோலிற்குக் குருதி மிகுதியாய்ப் பாய்வதால் சூடுண்டாவதும், நச்சை நீக்கிக்கொள்ள உடல் கிளர்ச்சி உறுவதும், கிளர்ச்சி மிகுதியால் செய்யும் வேலையும் மிகுந்து உடல் நலியா வண்ணம் தளர்ச்சி உண்டாவதும் உடலின் எதிர்ப்புக்களே.

தூண்டப்பெற்றே பல செயல்களைச் செய்து பெரும் பேற்றையும் அடைகின்றோம்.

செயற்கைத் தூண்டு பொருள்கள்:—கடுகு, மிளகு, சீரகம், புளி, மிளகாய், முதலிய காரப் பொருள்கள் பசியுண்டாம்படி தூண்டுகின்றன. காப்பி மூளையைச் சுறுசுறுப்படையச் செய்கிறது; தேநீர் இவ்வாறு செய்வதன்றித் தூக்கம் வாராமல் உழைப்பதற்கும் உதவுகிறது. நல்லபாம்பின் நச்சு, சாராயச் சத்து, புகையிலைச் சத்து முதலிய கொடிய நச்சுக்களும் மிகச் சிறிதாக உட்கொள்ளின் உடல் உள்ளத்தைத் தூண்டிவிடுகின்றன. ஏனெனில் இந் நச்சுக்களினின்றுந் தப்பிக்கொள்ள நம்முடற் கூடுகள்யாவும் வருந்தி யுழைக்கின்றனவாதலின் நமக்குக் கிளர்ச்சி யுண்டாகிறது.

எது மேல்?:—இவ்விரு தூண்டு பொருள்களுள் இயற்கைத் தூண்டு பொருள்கள் மேலானவும், நன்மைதரத்தக்கனவுமாம். செயற்கைத் தூண்டு பொருள்கள் தவறாது தீமை தரத்தக்கன. எவ்வாறெனின் (1) இயற்கைத் தூண்டு பொருள்கள் கிளர்ச்சியை உண்டாக்கினும் பின் எதிர்ப்பினால் தளர்ச்சியை உண்டாக்குவதில்லை. ஏனெனில் அவை உடலின் தேவைக்குமேல் மிகுதியாக வேலைசெய்யச் செய்வதில்லை. ஆனால் செயற்கைத் தூண்டு பொருள்களோ உடலை நலியவைக்கும் அளவு தூண்டிவிட்டு வேலை செய்யச் செய்வதால் அவ் வேகந்தணிந்ததும் தப்பாது தளர்ச்சி யுறுகின்றோம். (2) இயற்கைத் தூண்டு பொருள்கள் யாவும் நல்ல பொருள்களாதலின் எவ்வளவு பயன் படுத்தினும் நன்மையையே செய்யும். செயற்கைத் தூண்டு பொருள்கள்யாவும் கொடிய நச்சுப் பொருள்களாதலின் உடலைக் கெடுத்துக்கொண்டே வருகின்றன. (3) செயற்கைத் தூண்டு பொருளைப் பயன்படுத்தப் படுத்த அவற்றை மிகுதியாக்கிக்கொண்டே வரவேண்டும். தேநீர் சாப்பிடாதவர்கள் எப்பொழுதாவது சாப்பிட்டுவிட்டால் இரவு முழுவதும் தூங்கமுடியாது வருந்துவர். ஆனால் தேநீர் நாள்தோறுந் தவிராது சாப்பிடுவோருக்கு இவ்வாறிலாது நரம்புகள் மழுங்கிப்போவதால் தூக்கம் வரும். இவர்கள் கண்விழிக்க வேண்டுமாயின் தேநீரை மிகுதியாகப் போட்டுண்ண வேண்டும்.

இவ்வாறே காப்பி, சுருட்டு முதலியன பயன்படுத்துவோருக்கும் ஆகும். இதனால் உடல் நச்சுப்படுத்தப்பட்டுக்கொண்டே வருவதால் அவர் உடல் நலிவதன்றி இப்பொருள்களை விடமுடியாதும் வருந்துவர். (4) நல்லகாற்று, வெய்யில், பசி, முதலிய இயற்கை பொருள்களின் உதவியால் உடலில் உணவும், வலிவும் சேமித்து வைக்கப்படுகின்றன. ஆனால் செயற்கைத் தூண்டு பொருள்களால் சேமித்து வைக்கப்பட்டவை வெகு விரைவில் செலவழிக்கப் படுவதன்றி பின்னர் சேமித்து வைப்பதற்கான வழியும் அடைக்கப் படுகிறது. ஒருவன் உடலில் எவ்வளவு வலிமை சேமித்துவைக்கப் படுகிறதென்பதை நெடுநாள் பட்டினியுற்ற நோயாளியும் பொறுக்க முடியாத வலியின் தூண்டுதலால் பலரைத் திமிரிக்கொண்டு கிளம்புவதைக்கொண்டு அறியலாம். இவ்வாறு சேமித்துவைக்கப் பட்ட வலிமையே செயற்கைத் தூண்டுபொருளாகிய காப்பி, புகையிலை முதலியவற்றால் எழுப்பப்பட, நாம் கிளர்ச்சியடைகிறோம். இவ்வாறு நாம் நாள்தொறுஞ் செலவழித்துக்கொண்டே செல்வோமாயின் கூடிய சடுதியில் முதலிழந்து சிறு நோயும் பொறுக்க இயலாது திடீரென இறக்கவேண்டியதாய் முடியும். ஆதலின் இச் செயற்கைத் தூண்டு பொருள்களை நஞ்சினுங் கொடிதாய் நினைத்து விலக்கவேண்டும். இயற்கைத்தூண்டு பொருள்களின் உதவியால் வாழ்பவர் நலமும் வலிவும் திடமுமுள்ள மூளையையும், நரம்புகளையும் உடையவராவர். ஆதலின் நாம் நன்றாய் உணரவேண்டியது என்னெனின், குளிர்ந்த காற்று, மிளகு, சீரகம் போட்ட உணவிலும் பசியை நன்றாய் உண்டாக்கும்; குளிர் நீர் முழுக்கு, காப்பியைவிட மூளையையும் உடலையும் முறுக்காக வேலைசெய்யச் செய்யும்; நாலைந்து முறை நன்றாய் முழு மூச்சுவிடல் அல்லது சிறிது உடற்பயிற்சி செய்தல் கள் ளுண்பதைவிட வலிமையுங் கிளர்ச்சியுந் தரும்; ஒரு சுருட்டு பிடிப்பதைவிட ஒரு நண்பனுடன் சிறிது அளவளாவுவது நல்ல கிளர்ச்சியை ஊட்டும்; நன்றாய்க் களைத்த பின் களைப்பாறல் உடற்குப் பின்னும் முரட்டுத்தனமாய் விளையாடிக்கொண்டேயிருத்தலினும் நன்மைதரும்; கடவுளிடத்து நம்பிக்கை, கள் சாராயத்தைவிடக் கவலையை நீக்கும் என்பதாம்.

மயக்கப் பொருள்களின் மாண்பு:—செயற்கைத் தூண்டு பொருள்கள் மிகின் மயக்கப் பொருள்களாகின்றன. இவை நரம்புகளை இறந்தது போலாகவாவது, மறத்துப்போகவாவது, சோம்பியிருக்கவாவது செய்கின்றன. இதனால் நரம்புகளின் செயல் குறைந்து விடுகிறது. நச்சுக்களை மிகச் சிறிதாக உட்கொண்டால் தூண்டுபொருள்களாகின்றன என்றுகண்டோம். அதனினுஞ் சிறிதுமிகின் சிறிதே தூண்டிவிட்டுப் பின் மயக்கஞ் செய்கின்றன. அளவு மிக மிக மயக்கமும் விரைவில் உண்டாகிறது. மிகுதியாகவும் உண்டாகிறது. மயக்கப் பொருள்கள் முதலில் தூண்டிவிட்டுத்தான் பின் மயக்கஞ் செய்வனவாதலின், தூண்டுதலினலாகுங் களைப்பு உண்டாம் பொழுதே, மயக்கமும் உண்டாவதால் இவையிரண்டுஞ் சேர்ந்து சோர்வை மிகுதியாக உண்டாக்குகின்றன. நச்சின் அளவு போதுமானதாயிருந்தால் உடன் கொன்றுவிடும், அல்லது நாள் பட்டுக்கொல்லும். சாராயச்சத்து (Alcohol)ம் புகையிலைச்சத்தும் கொல்லக்கூடியன. ஆனால் அவை பலர் உட்கொள்ளும் கள், சாராயம், விஸ்கி, பிராந்தி, சின், பீர், புகையிலை, சுருட்டு, தூள் சுருட்டு, பீடி முதலியவற்றுள் குறைவாயிருப்பதால் உடன் கொல்லுகிறதில்லை. நாட்பட்டுத் தப்பாது கொல்கின்றன.

குடி சிறிதாயினும் பெரு மூளையை முதலில் கெடுக்கிறது. இதனால் அவன் பித்துப்பிடித்தவன்போல் பிதற்றுகிறான். அவனுக்குக் கண், காது, மூக்கு, நாக்கு, தோல் கூர்மையாக வேலை செய்கிறதில்லை. சுரணையற்று ஒழுங்கான எண்ணங்களும் அற்றுப்போகின்றன. இன்னுங் கொஞ்சம் குடிமிகின் சிறு மூளை கலங்கிப்போவதால் கால் தள்ளாடுகிறது, கை நினைப்பின் வழிச்செல்வதில்லை. பின்னும் குடி மிகின் உயிர்முடிச்சுங் கெடுவதால் தூக்கமும், பெருமூச்சும் உண்டாகின்றன. மிகுந்த குடியால் உயிர்முடிச்சு அறக்கலங்கி மூச்சுவிட முடியாது இறந்து போதலும் உண்டு.

குடியினுல் பசிக்காது மந்தமுண்டாகிறது; சோம்பல் உண்டாகிறது. குடிப்பவரின் நாம்புக்கூடுகளின் பெரும்பகுதி அரிக்கப்பட்டுப்போவதால் அவர் பித்துப்பிடித்ததுபோலிருந்து இறக்கின்றனர். இதனுல் அக்கொடிய பழக்கத்தைப் பின் னோக்கும் வன்மையும் அற்றுப்போகிறது. இன்னும் குடித்துக் கொண்டேயிருப்பதால் நரம்பு வேக்காடு (Neuritis) என்னும் மிகக்கொடிய வலியுள்ள நோயுண்டாகிறது. சிலர் கொஞ்சமாகக் குடிப்பதால் நன்மையேயன்றித் தீமை இன்றெனநினைக்கின்றனர். இது முழுத்தவறு. சிறிதாகக் குடித்தபோதிலும் குருதி ஏற்றங் கொழுத்து மதர்த்துப்போய் ஒழுங்காய் வேலை செய்வதில்லை; குருதிக்குழாய்களும் நோயுறுகின்றன; கல்லீரல் இறுகுகிறது; ஆண்டு குன்றுகிறது. இன்னும் நாக்கு வாளுகிறது, கிறுகிறுப்பு, வாயாலெடுத்தல், தள்ளாடல், சண்டை, வம்பு, கொலை, களவு, பெண்வெறி முதலியவற்றை உண்டாக்குகிறது. சிலர் கவலையை நீக்கிக்கொள்ளக் குடிக்கின்றனர். இது எதைத் தடுக்க நினைக்கிறேமோ அதையே மிகுதிப்படுத்த முயலுவது போலாம். ஏனெனில் இவர்கள் வருந்தி உழைக்காது வீட்டிலுள்ள பொருள் களையெல்லாம் செலவழிப்பதன்றிப், பணங்கிடைக்காவிடில் மிகக் குறைந்த விலைக்கு விலையுயர்ந்த பொருள்களை யெல்லாம் அடகு வைத்துக் குடித்துக் கவலையை மிகுதிப்படுத்திக்கொள்ளுகின்றனர். இன்னும் தங்கள் மனைவி மக்களை உண்ணவும் உடுத்தவும் பொருளின்றித் தெருவில் தவிக்க விடுகின்றனர். தங்கள் இளஞ்சிறுர்களுக்குக் கல்வி கற்பிப்பதில்லை. அவர்களை அடித்துக் கெட்டவர்களுடன் பழக விடுகின்றனர். தாங்களும் காலாடிக் கூட்டத்துடன் கலந்து விரைவில் சிறைச்சாலை புகுகின்றனர். தங்கள் பொருள் போவதன்றி தங்கள் உடலில் சேமித்துவைக்கப் பெற்றுள்ள வலிமையும் சத்துங்குன்றி எளிதில் இறக்கின்றனர். இம்மட்டோ! தங்கள் மக்களுக்கும் இப்பழக்கங்களைப் பிறப்பாலும் (Heridity) வளர்ப்பாலும் ஊட்டி உருப்படாமற் செய்துவிட்டுப் போகின்றனர்!! என்னே இவர்கள் மதியின்மை!!!

இத்தகைய பெருங்கேடு விளைக்குங் குடியைக் கேடு தருவதென்றுணர்ந்தும் எத்துணைப்பேர் நீக்காதிருக்கின்றனர்?

இவ்வாறிலாது அதன் அருவருக்கத்தக்க சுவை, நாற்றம் முதலிய வற்றையும் அதனால் உண்டாம் பெருங்கேடுகளையும் நன்குணர்ந்து விடுபவர்களே அறிவாளிகள். ஒருவனாவது குடியின் சுவை, மணங்கருதிக் குடிப்பதில்லை. அவற்றை உண்ணும் மூடர்களைப் பார்த்துத் தானும் அவர்கள் போலாக வேண்டுமென்னும் அவாவினால் குடிக்கப் புகுகின்றான். இவனுக்கு வழிகாட்டிகள் படித்தகுடியர்களும், பணக்காரக் குடியர்களுமேயாவர். இவர்கள் உலகுக்கு விளைக்குந்தீங்கிற்கு அளவேயில்லை. இவர்கள் தங்களால் பலர் கெடுகின்றனரே என்று உணர்ந்து நீக்குவார்களாயின் பெரு நன்மை உண்டாம். இவ்வாறு நீக்கற்குப் பிடிவாதமும் அறிவும் ஆண்மையுமேவேண்டியனவாம். இவற்றைச் சொல்வது எளிது. அதன்படி நடந்துவிடுவதே அருஞ்செயலாம். கள்ளைப் போன்ற பல கெடுதல்களையுடைய புகையிலையையும் அபின், கஞ்சா முதலியவற்றையும் உள்ள உறுதியால் அற ஒழிப்பவர்களே பெரியவர்களாவர்.

தொடரும்.

தமிழ்க் கொலை.

எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை அவர்கள், பி.ஏ., எல்.டி.,

தமிழ்த்தாய்மாருக்குப் பிறந்து நாள்தொறும் உற்றார்உறவினருடன் தமிழே பேசி வரும் பார்ப்பன மக்களும் ஏனைய மக்களும் தமிழ்த்தாயைப் போற்றாது அனைவருக்கும் பொதுவான வடமொழியைத் தம் மொழியாக எண்ணி அதனையே மேன்மைப்படுத்தல், பெற்றதாயைப் புறக்கணித்து எழில்நல முற்ற இளமதித் தையலாளை வணங்குவது போலாம். போற்றாவிடினும் போகட்டும் இழிவு கூறினுங் கூறட்டும். தாயைக் கொலை செய்யுமாறு சூழ்ச்சி செய்தல் முற்றிலுந் தகாத செயலன்றோ. கவிச்சக்கரவர்த்தி யாகிய கம்பர் காலந்தொட்டு இதிகாச புராண சமய நூல்களில் வடமொழிச் சொற்களும் பாவினங்களும் பல்லாயிரக்கணக்காகத் தமிழ் எடுகளிற் புகுந்து தனித்தமிழின் சீரைக் குலைக்கவாரம்பித்தன. இக்காலத்தில் சிறார்களுக்கென் றெழுதப்படும் வாசகப் பாடப்புத்தகங்களில் வடமொழிச் சொற்கள் நிறைந்துள. அன்றியும் வடமொழிச் சொற்கள் வடமொழி யொலி விளங்குமாறு எழுதப்பட்டுள. 'கிருஷ்ணன்' என்னும் எடுத்துக்காட்டு, ஒரு பானைச் சோற்றில் ஒரு சோறெடுத்துப் பதம் பார்ப்பதை யொக்கும். தமிழ்ச் சொற்களிருக்கும் பொழுது அவற்றை வழங்காமல் வேறு சொற்களை வழங்கி அவற்றிற்கு உரை யெழுதுமுறை என்னென்று கூறுவேம், சென்னைப் பல்கலைக்கழகத்தைச்சார்ந்த நாட்டுமொழிகளை ஆராய்ச்சி செய்யுஞ் சங்கம், சில அறிவியல் நூல்களை மொழிபெயர்த்து வருவதில் ஆங்கில மொழிகளை வடமொழிகளாக்கி அவற்றின் பொருளை வடமொழி கலந்த தமிழ்ச் சொற்களால் விளக்குகின்றனர். இவ்விடையூறுறாமல் ஆங்கிலச் சொற்களைத் தமிழெழுத்துக்களாலெழுதி அவற்றின் பொருளைத் தனித்தமிழ்ச் சொற்களால் விளக்குவது எளிதன்றோ. இஃதன்றித் தனித்

தமிழறியாப் பேதையர்கள் செய்துவரு முறையினல் தமிழ்ச் சொற்கள் குறைந்து மறைந்துபோமன்றே? பிள்ளைகளும் பெரியார்களும் நாளடைவில் வடமொழிச் சொற்களைத் தமிழ்ச் சொற்களென்று துணிந்து கூற நேரிடும். வடமொழியாளர்கள் தமிழே வடமொழியின் தோன்றலென்று கூறவுந் துணிவர். இப்பெருங்கேட்டை முளையிலேயே அழிப்பது எளிது. முற்ற விட்டால் பெரும்பாடாகும். இதனைத் தமிழ்மக்கள் சிறிது ஊன்றிப்பார்த்து விளையப்புகுங் கேட்டைத் தக்க வழிகளில் முறையிட்டுத்தடுப்பது நலமாகும். 'இளைதாக முண்மரங் கொல்க களையுநர்—கைகொல்லுங் காழ்த்த விடத்து' என்ற திருக்குற ளுண்மை கருதத்தக்கது.

சிறுர் பாடப் புத்தகங்களிற் காணப்படுஞ் சொற்கள், தொடர்களிற் சில இவண் தருகுவம். ரம்பம், ரதம், ரசம், ரத்தம், ராமன், ரூபம், ரோமம், லேகியம், ரொட்டி, ரோகம், லௌகிகம் இவையனைத்தும் தமிழில் இடையெழுத்துக்கள் தலை யெழுத்துக்களாக வாரா என்ற விதிக்கு மாறும். நதி, புஷ்பம், பத்திரம், வாசனை, வருஷம், உற்சவம், ரதம், இரசம், வாத்தியம், ஆரோக்கியம், யுக்தி, சந்தோஷம், வஸ்து, விஷம், தீபம், ஆச்சரியம், உபகாரம், பிரியம், வியாதி, பிராணி, சுத்தம், அவசியம், போஜனம், அஜீரணம், ஜாமம், யஜமானன், ஜாக்கிரதை, யோசி, யாசி, விசுவாசம், கஷ்டம், விஷயம், பதார்த்தம், சாதாரணம், அஸ்தமநம், நேர்த்தி, உதயம், பிரகாசி, தினம், கர்வம், ஜலம், பிராயம் இவைபோன்ற வடசொற்களுக்குச் செவ்வையான தனித்தமிழ்ச் சொற்களிருந்தும் அவை வழங்கப் பெறுமல் வடசொற்கள் வழங்கியிருப்பதை உற்று நோக்கின் வழக்கத்தின் கொடுமை நன்கு புலப்படும். சிரசேபிரதானம், ரதஉற்சவம், வித்தியாதானம், யோசித்து நிச்சயி, ஜனங்களுக்கு ஆபத்து, வாசனை சக்தி, ஜதைஜதையாக, விசித்திரப் பதுமைகள், வாத்தியம்வாசி, தானம் தீர்மானி, தேகாரோக்கியம், ஸ்தலசுய ஆட்சி, தேசாபிமான கீதம், தந்தசுத்தி, புத்திர பாக்கியம், சுப சகுனம், இத்தொடர்களுக்கு இணையான தமிழ்ச் சொற்ருெடர்கள் இலையா? மேற்கூறிய சொற்களும், தொடர்களும் சங்கவாசகப்

புத்தகங்களில் வந்துள்ளன. அவற்றிற்கு முறையே வாள், தேர், சாறு, (இரதம், இரசமன்) உருவம், மயிர், இளக்கம், (உரொட்டி) (உரோகம்), நோய், உலக வழக்கு, ஆறு, பூ, இலை, (குழை) மணம், ஆண்டு, திருவிழா, சாறு, (இரதம்) தேர், இன்னியம், நலம், (கூரிய) எண்ணம், உவகை, இறுமாப்பு, ஏமாப்பு, பொருள், நஞ்சு, வியப்பு, விளக்கு, ஒத்தாசை, (உதவி), விருப்பம், நோய், உயிர், தூய்மை, இன்றியமையாமை, (தேவை), ஊண், உணவு, செமியாமை, (யாமம்), நள்ளிரவு, முதலாளி, விழிப்பு, (எச்சரிக்கை), நினை, இரத்தல், உள்ளன்பு, (நன்றி), பாடு, துயரம், மாற்றம், பொருள், பெருவழக்கு, அடைதல், நன்கு, எழுதல், ஒளிவிடு, நாள், செருக்கு, நீர், வயது. தலைமுதன்மை, தேர்த்திருநாள், கல்விக்கொடை, எண்ணித்துணி, மக்களின் இடர், மணக்கும் திறம், இரண்டு இரண்டாக, அழகானஉருவங் கள். இன்னியம் முழக்கு, கொடை முடிவுசெய், உடல்நலம்; நாட்டரசு, தன்னரசு, நாட்டுக்களிப்பாட்டு, (நாடுமேவிய இசை) பல்விளக்கல், மகப்பேறு, நற்குறி, ஆதியன இணையாகக் கூறலாம். காலத்தால் நினைத்துப் பார்ப்பின் இவற்றினும் நல்ல சொற்களும் தொடர்களும் புலப்படும்.

ஆரியக் கொள்கைகளைப் புகுத்துவான் வேண்டித் தமிழக் கொள்கைகளைக் கொலை செய்தகற்றல் கூடாது. தமிழ் மக்களுக்குக் கடவுள் ஒன்றே: மும்மூர்த்திகளல்லர். உருத்திரன் சிவனலன். இளவயதிலேயே இடர்ப்பாடுடைய கொள்கைகளைக் கற்பித்தல் புராண விதிகாசக் கொள்கைகளைப் பசுமரத்தாணி யறைந்தாற்போல உறுதிப்படுத்தலின் பொருட்டே. சங்கவாசக நான்காம் புத்தகத்தின் முதற் பாடத்தைப் பார்க்க. இரண்டாம் பாடத்தில் பிராமணன், மறையவன், அந்தணன் ஒருபொருட் கிளவிகளாக மயங்கக் கூறப்பட்டுள. பதினைந்தாம் பாடத்தில் மும்மூர்த்திக் கொள்கை மறுமுறையும் வற்புறுத்தப்பட்டிருக் கின்றது. பாடம் 26 சாதிப்பெருமையை விளக்குவதாகும். ஒழுக்கத்தாலன்றிப் பிறப்பால் மேல் கீழ் இலையென்று போதிக்கும் இக்காலத்தில் பிறப்பிலுயர்ந்தோனெனப் பெருமையாகக் கூறல் தகாது.

வேறொரு வழியிலும் தமிழ் கொலை செய்யப்பட்டு வருகின்றது. தமிழ் இனியமொழி யென்பதன் நோக்கம் பலவாம். அவற்றில் பின் வருவன சில. வல்லெழுத்துடன் இனவெழுத்து வரின் மெல்லிய வொலி பிறக்கும். 'கங்கை' என்ற சொல்லில் 'க'கரத்திற்கினமாகிய 'ங'காம் வர முன்னும் பின்னுமுள்ள வல்லொலி மெல்லொலியாவதைக் காண்க. முப்புள்ளியும் அத்தகைத்ததே. அக்கம் அஃகம் ஆயிற்று. புணர்ச்சி விதிகளும் தமிழினிமைபற்றியே விளக்கப்பட்டுள. முள் மரம்—முண்மரம், குறுகல், நீடல், கெடுதல், மறைதல், திரிதல் இவற்றால் ஒலி நயமுண்டாகும். யாக்கையுடன் பல வுறுப்புகளும் பொருத்தப் படின் உடலியக்கமுறும். பொருத்தப்படாவிடின் உடலியங்காது. அவ்வாறே சொற்கள் பொருந்தும்பொழுது எழுத்துக்கள் தோன்றல், கெடுதல் முதலியன நிகழும். இவை நிகழாவிடின் தொடர்கள் இனிமைப்பட வொலிக்க வொண்ணா. 'திரவியம் தேடி' என்பதை 'திரவியந்தேடி' என்று படித்தலால் ஒலிநயம் புலப்படும். 'திரவியந்தேடித் தனவான் ஆகவேண்டும்' என்பதில் தகரவொற்றை விட்டுப் படித்தால் இசையொழுக்கு வேறு படுகின்றதன்றோ? 'அவன் எழுத்து முத்துபோல் அழகாய் இருக்கும்' என்பதை 'அவனெழுத்து முத்துப்போலழகாயிருக்கும்' என்று படிக்கும்போது சந்திசேர்தலினாலுண்டாம் நயம் விளங்கும். 'முத்துபோல்' (புத்தகம் I, பக்கம் 43) 'தட்டுபோல்' II-13 என்பனவற்றைப் படிக்கும்பொழுது பகரவொற்றில்லாமற் படித்தால் வியப்புத் தோன்றவில்லையா? இசைபற்றியும் தட்டுத் தடையின்மை பற்றியும் சந்திசேர்த்தெழுதல் முறையென்பதை யுணாராமல் தெளிவுபற்றிப் பாக்களைச் சந்திபிரித்தெழுதலால் இசை நயமாளுகின்றது.

வழக்கத்திலுள்ள சில சொற்களை மாற்றுதலால் தமிழ் நயங் கெடும். பனம்பழத்தை 'முக்கனி' என்று சொல்லுதல் மரபா யிருக்க 'முப்பழம்' (II-22) என்றெழுதல் முறைதவறும்.

ஆற்றொழுக்குப் போன்று செல்லும் தமிழ் நடை சிறந்தது. அஃதன்றி மோனைபற்றிய தொடர்களை யடுக்குவது

இழிவென்பதை ஆங்கிலேயர் மூன்று நூற்றாண்டுகளின் முன்னரே உணர்ந்து அதனைத் தடிந்தனர். சிலர் சிறப்பென்று நினைத்து எழுதுவதெல்லாம் மோனைகொண்டே எழுதுகின்றனர். 'அந்த அநாதைகளைப் போஷிப்பது பகவானுக்கும் பிரீதியான தருமம் அன்றோ?' என்பதைத் தனித்தமிழில் 'அ(ந்த)க் காப்பிலிகளை (ளுக்குச்) சோறிட்டு வளர்ப்பது கடவுளும் விரும்பத் தக்க அறம் அன்றோ?' என்று எழுதினாலென்?

ஆங்கிலத் தமிழ் என்றவொருவகைத் தமிழும் நடைபெற்று வருகின்றது. 'உணவு எடுத்தாயிற்றா?' இது ஆங்கிலத் தமிழ். 'உண்டாயிற்றா', 'ஊண் கழிந்ததா?' தனித்தமிழாகும். உலாவினான், பட்டம் பெற்றான் என்பனவற்றுடன் ஆங்கிலத்தில் எடுத்தான் என்ற சொல் சேர்ந்தே வரும். நடத்தலெடுத்தான், பட்டம் எடுத்தான் எனின், செவியின்ப மின்மையின் அவற்றினைச் செவி மடுக்காது. தற்காலத்தில் ஆங்கிலங் கற்கும் மாணவர்கள் பயின்றுவரும் நூல்களின் பெயர்களைத் தமிழில் மொழிபெயர்த்தல் எளிதெனினும் கேட்டறியாத வடமொழிச் சொற்களாலமைத்து அவற்றை விளக்கஞ்செய்து இடர்ப்படுகின்றனர். Arithmetic கணக்கு. அதைக் கணித சாஸ்திரம் என்றெழுதல் வேண்டாவாம். Algebra எழுத்துக் குறிக்கணக்கு. Geometry காணியளவை. Physics பூதநூல். Chemistry பொருட்சேர் மாற்றநூல். Physiology உடல்நூல். Anatomy உடற்கூற்று நூல். Biology உயிர்நூல். Biography உயிர் வாழ்க்கை நூல். History நாட்டு நிகழ்ச்சி வரலாறு. Politics ஆட்சிநூல். Geography ஞாலநூல். Hygiene உடல் நலநூல். Trigonometry முக்கோணவளவை. Zoology விலங்கின நூல். Geology பூவமைப்பு நூல். Thermometer சூடளவை. Barometer காற்றுநிறை. Political Economy இறைப்பொருளியல் நூல். பள்ளிக்கூடங்களில் இவையுன்ன பெயர்களால் நூல்களை வழங்குதல் மாணவர்கட்கு எளிதாயிருக்கும்.

இதுகாறும் எடுத்துக்காட்டப்பட்ட வழிகளிலும் ஏனைய பலவழிகளிலும் தமிழ்மொழி கொலையுண்டு வருவதைக் காணும் பொழுதே ஒழித்தல் தமிழர்களின் கடமையாகும். தமிழ் மக்கள் வாளாது கண்வளர்வரேல் நாள் செல்லச் செல்ல தமிழ் மக்களென்ற பெயருக்கும் அருகாலராவர். இவ்வரும்பாடு வாராது இறைவன் காத்தருள்க.

தமிழறிவு குறைந்திருப்பதேன்?

திருவாளர் ஊ. சா. வேங்கடராம ஐயர் அவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

நான் சிலநாட்களுக்கு முன்னே கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி ஆசிரியர் சிலருடன் அளவளாவ நேர்ந்தது. அக்கால், "ஆங்கிலக் கலாசாலைகளிலே படிக்கும் மாணுக்கர்களிடம் இக்காலம் ஏன் தமிழறிவு குறைந்து வருகின்றது? வேற்று மொழியாகிய ஆங்கிலத்தில் அவர்கள் பெற்றிருக்கும் அறிவு கூட அவர்களுக்குத் தமிழ் மொழியில் இருக்கவில்லையே! இதைப்பற்றி நம்மவர் ஆராய்ச்சி செய்யவேண்டியது இன்றியமையாததொன்றன்று?" என்பது பொருட்டாய் ஓர் உரையாடல் கிளம்பியது. அன்று அதிக நேரம் கூடிப்பேசக் காலமின்மையாலும், அச்சிறு கூட்டத்தினர் பேசி முடிவு செய்வது பெரும் பயன் தாராதாகையாலும் பிரியலானேம். எனினும், "ஒழிவுகிடைத்தவுடன் நமது தமிழ்ப் பொழில் பக்கங்களிலே எனக்குத் தெரிந்த

விடையை எழுதி வெளியிடுமாறு முயலுவேன்" என்று கூறிப் பிரிந்தேன். அது பற்றி இன்று இங்கே சில எழுதத் தொடங்குகிறேன்.

நமது நாட்டிலே இருந்து வரும் ஆங்கில கலாசாலைகளிலே தமிழ்மொழியும் ஒருபாடமாக வைக்கப்பட்டிருப்பது உண்மையே. அஃது இந்த ஆண்டு தொடங்கி ஒருவகையிலே சிலருக்குக் கட்டாய பாடமாகவும் வைக்கப்பட்டுள்ளது. என்றாலும், மாணாக்கர்கள் கற்கவரும் நோக்கம், பாடபுத்தகங்களை அமைத்தல், கற்பித்தல், தேர்தல் ஆதியவற்றிலே பல குழறுபடைகள் இருக்கின்றன. இத்துணை இடையூறுகளையும் தாண்டிச் சிற்சிலரேனும் தமிழறிவும், தமிழன்பும் வாய்ந்தவர்களாகத் தேறி வெளிவருதுதான் வியக்கத்தக்கது. ஆங்கில அறிவு சிறந்திருப்பதாகக் கூறுவதும் ஒத்துக்கொள்ள முடியாததே. சுருக்கிச் சொன்னால் இக் கால மாணவர்கள் ஆங்கிலம், தமிழ் என்ற இரண்டிலும் அறிவு குறைந்தவர்களே.

(க) கற்கவரும் நோக்கம் :—கலாசாலைகளிலே படிக்கவரும் மாணாக்கர்கள் அறிவைப் பெருக்கிக்கொள்ளவேண்டும் என்ற நோக்கத்துடன் வருவதில்லை. படித்தால் பிற்காலத்தில் ஏதேனும் உத்தியோகம் கிடைக்காதா என்ற நோக்கத்துடனே அனுப்பப் பட்டுப் படிக்கவருகிறார்கள். இங்கே நம்மவரின் அறியாமையை எண்ணி வருந்தவேண்டுமானாலும், நமது நாட்டின் வறுமை நிலைமையை நோக்க அது குறை கூறக் கூடியதன்று. அன்றியும் தங்களது கருத்தை நிறைவேற்றிக்கொள்ள அவர்களுக்கு ஆங்கில அறிவே இன்றியமையாததாக இருக்கின்றது. இது முதற் கோணல்.

(உ) பாட புத்தகங்கள் :— தமிழறிவு வளர்ச்சியின் பொருட்டு மாணாக்கர்கள் கற்பதற்கெனத் திட்டம் பண்ணப்படும் புத்தகங்களோ சிறந்தனவாகவும், நாட்டின் விருப்பத்தை நிறைவேற்றக் கூடியனவாகவும் ஆராய்ந்து அமைக்கப்படுவதில்லை. அவை முற்றும் வியாபார முறையிலும், சலுகை முறையிலுமே அமைக்கப்படுகின்றன. நாட்டினரின் வறுமையையும், அறியா

மையையும் கூர்ந்து நோக்கி அவ்விரு பெரும் பிணிகளும் நீங்கத் தக்க நெறியிலே தமிழ்ப்பாட புத்தகங்களைத் தேர்ந்தெடுத் தமைக்கும் நற் காலம் இனித்தான் நமது நாட்டு ஆங்கில கலாசாலை களிலே உண்டாக வேண்டும். இது பொருந்தாத் தொடக்கம்.

(ஈ) கற்பித்தல்:—தமிழ்மொழியைக் கற்பிக்கும் முறையோ பெரு வியப்பைத் தருவதாயிருக்கின்றது. ஆங்கிலம் முதலிய வற்றைக் கற்பிக்க, அவ்வவற்றிலே சிறப்பாகத் தேறித் தகுதிச் சீட்டுப் பெற்றவர்களே ஆசிரியன்மார்களாக இருத்தல் வேண்டும். தமிழ்மொழியைக் கற்பிக்க, ஆங்கிலத்தோடு தமிழ் படித்ததாகச் சொல்லிக்கொள்பவரே ஆசிரியராகத் தகுந்தவராகிறார்! இஃதொன்றோ; நன்கு வான்முறையாகத் தமிழ்மொழியைக் கற்றவர் ஆசிரியராகும் தகுதியற்றவராகவும் கருதப்படுகிறார்! இது விந்தையிலும் விந்தையன்றோ? இம்முறையினால் தமிழ்ச் சுவை நிரம்பிய பாடபுத்தகங்கள் ஆங்கில கலாசாலைகளிலே பாட புத்தகங்களாக அமைவதில்லை. இலை மறை காய்போலச் சிற்சில இடங்களிலே பாடமாக்கப்பட்டாலும் ஆற்றலின்மையால் அவை மேற்கூறிய 'பெரியோர்'களால் இனிது கற்பிக்கப்படுவதும் இல்லை. இவற்றோடு தமிழ்ப்பாடங்களைக் கற்பித்தற்கெனக் கொடுக்கப்படும் காலமும் மிகமிகக்குறைவாயிருக்கிறது. "தமிழ்ப் பாடங்களைக் கற்பித்தற்கு அதிககாலம் கொடுக்கப்படவேண்டும்" எனக்கேட்டால் "தாய்மொழி வழியாகவே ஆங்கில மொழிந்த பிறபாட்டங்கள் கற்பிக்கப்படுகின்றமையால், தமிழ்ப் பாடங்களுக்கு அதிக காலம் வேண்டியதில்லை" என்று கூறி 'இன்ன மொழியா லாகிய புத்தகம் என்பதையும் தெரிந்துகொள்ள முடியாத நிலைமை யில் தமிழ் எழுத்துக்களும் கலந்து எழுதி வெளியிடப்பட்ட' அந்தப் புத்தகங்களின் 'பெருமை'யை வெளியிடு முகத்தால் தடை செய்யப்படுகிறது.

(உ) தேர்தல்:—தேர்தல் நடைபெறும் அழகோ மிகவும் மதிக்கக் கூடியதாயிருக்கிறது! தமிழ்மொழிப் பாடங்களைப்பற்றிய வினாக்களுக்கு விடையெழுதாத மாணாக்கன் மேல் வகுப்புக்கு உயர்த்தப்படுவது வழக்கமாயிருக்கிறது. காரணம், அவன் பிற

பாடங்களிலே தேறியிருக்கிறுனும்; அந்தப் பாடங்களிலே நல்ல சராசரி மதிப்புக் கிடைக்குமாம். போதாக்குறைக்குப் புதிய திட்டத்திலே ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கும் பகுதியும், தமிழ்க் கட்டுரைப் பகுதியும் தமிழ்ப்பாடங்களைப்பற்றிய வினுப் பத்திரத்திலேயே சேர்க்கப்பட்டுள்ளன. இயல்பாகவே தமிழ்க் கல்வியில் அலட்சிய புத்தியுடன் இருக்கும் மாணவர்களுக்கு இப்புதிய முறை 'பழம்நழுவிப் பாலில் விழுந்ததுபோல' ஆக அஃது அவர்களை "எப்படி எழுதினுலும் மொழிபெயர்ப்பிலும் கட்டுரையிலும் வேண்டிய 'மார்க்கு'களை வாங்கிவிடலாம்" என்று எண்ணும்படி செய்வதுடன் தமிழ்ப்பாடங்களைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாதிருக்கவும் செய்கின்றது. அந்தோ பரீட்சையில் தேறுவது ஒன்றையே பெரும் பேருகக்கருதும் இயல்பினையுடைய அந்த மாணுக்கர்கள் வேறு என்ன செய்யக் கூடும்? தமிழ் மொழியின் பொருட்டு இம்முறையால் செய்யப்பட்டிருக்கும் அநியாயம் அறிஞர்களால் கவனிக்கத்தக்கது.

(ரு) ஆதிய என்பது:— தமிழாசிரியர்களின் நிலைமை, அவர்கள் நடத்தப்படும் விதம், மாணவர்களுக்கும் அவர்களுக்கும் உள்ள தொடர்பு என்றவற்றுலும் தமிழ்க் கல்வியின் வளர்ச்சி குறைந்துவர இடமிருக்கின்றது. இக் குழறுபடைகளே இந்தக் கட்டுரையின் தலைத்தொடர் தோன்றியதற்குக் காரணம். இவை பலரறிந்த வெளிப்படையான உண்மைகள்.

இனி, இம் முறையே இக் குறைகளின் நீக்கத்திற்கான வழிகளையும் கூறுவது ஈண்டைக்குப் பொருத்தமானது. தொடங்கியுள்ளமையின் அவற்றைப் பற்றியும் சில கூறி நிறுத்துவேன்.

(க) இக்காலம் நமது நாடு இருக்கும் பல்வேறுபட்ட நிலைமையில் மாணுக்கர்களை அறிவின் பொருட்டே கற்கப்புகுதல் வேண்டும் என்று திருத்திவிட இயலாது; உத்தியோக மயக்கமும் இருந்துதான் தீரும். காரணம், பெற்றோர்களே இன்னும் திருந்த வேண்டிய நிலைமையில் வைக்கப்பட்டிருக்கிறுர்கள். என்றுலும், கிராம உத்தியோகத்தர்கள், உபாத்தியாயர்கள், வழக்கறிஞர்களின்

எழுத்தாளர், பத்திரப் பதிவு இலாகாவைச் சேர்ந்தவர்கள், படியெழுதுவோர், நாட்டாண்மைக் கழகம், நகர சபை முதலியவற்றைச் சேர்ந்தவர்கள் ஆகிய உத்தியோகத்தினர் தமிழ் மொழியிலே பிழையின்றி எழுதவும், பிழையின்றிப் பேசவும் தகுந்த அறிவு, ஆற்றல்களைப் பெற்றவர்கள் என்ற தகுதிச் சீட்டைப் பெற்றபிறகே குறித்த உத்தியோகத்தில் அமர்த்தப்பட வேண்டும். இவை முதன்முதலில் தொடங்கப்பட்டுக் காலக் கிரமத்தில் மாகாணப் பொது நடைமுறைகள் தவிர எஞ்சியன வாகிய நீதி, நிர்வாக மன்றங்களின் நடைமுறைகளும் தமிழ் மொழியிலேயே நடைபெறல் வேண்டும். இம்முறை தோன்றினல் இக்காலம் ஆங்கில மொழியிலே ஆழ்ந்து பதிந்திருக்கும் பெரு மயக்கம் விலகித் தமிழ் மொழியின் பொருட்டு நல்லுணர்ச்சி தோன்றும். அக்கால், இப்பொழுது நிலைத்திருக்கும் தமிழறிவு பற்றிய அலட்சியக் குறிப்பு ஒழிய முதற்கோணல் நிமிரும். "முதற்கோணல் முற்றுங்கோணல்" என்ற பழிமொழியை நம்மவர் மறத்தலாகாது.

(உ) பாட புத்தகங்கள், மாணக்கர்களுக்குத் தமிழறிவு வளர்ச்சியுடன் நாட்டுப் பற்றினையும், தன் மதிப்பின் சிறப்பினையும், சுதந்தர உணர்ச்சியினையும், பகுத்தறிந்து நன்னெறியிற் செல்லும் ஆற்றலினையும் அளிப்பனவாகவும், வளர்ப்பனவாகவும் இருத்தல் வேண்டும்; குறைந்த பொருட் செலவிலே நிறைந்த சிறந்த பொருள்களைக் கற்பிப்பனவாக இருத்தல் வேண்டும். அவை நமது நாட்டையும், நம்மவரையும் பழிப்பனவாகவும், குறைவு படுத்துவனவாகவும் இருத்தல் கூடாது. எந்தக் காரணங் கொண்டும் புத்தக விலையாகப் பெரும்பொருள் வேற்று நாட்டினருக்குப் போதல் கூடாது. ஆக்கியோர், வெளியிட்டோர் என்ற கண்ணோட்டங் காரணமாகவும் பாடபுத்தகங்கள் தேர்ந் தெடுக்கப்படலாகாது. நன்ருகத் தொடங்கப்பட்ட காரியம் செம்பாதி நிறைவேறியதாகுமல்லவா? இம் முறையிலே பாட புத்தகங்கள் தேர்ந்தெடுக்கப்படின் அறியாமை, வறுமை என்ற இருபெரும் பிணிகளின் அடிப்படை நமது நாட்டைவிட்டு நீங்க வழிதேடியதாகும்.

(ங) எக்காரணங் கொண்டும் தமிழ்மொழியைச் சிறப்பாகக் கற்காதவர் தமிழ்ப் பாடங்களைக் கற்பிப்பவராதல் கூடாது என்ற கண்டிப்பான விதிதோன்றிப் பழக்கத்திற்கு வரவேண்டும். ஏதும் அறியாத நிலைமையிலும் துணிவுகொண்டு தமிழ் மொழியைக் கற்பிக்கவரும் அந்த ஆங்கில ஆசிரியருக்கு இருக்கும் தமிழறிவு அவ்வளவு, தமிழ் மொழியைச் சிறப்பாகக் கற்றவர்க்கு ஆங்கில அறிவு இருக்கும் என்பதையும் அத் திருக்கூட்டத்தினர் உணர்தல் வேண்டும். ஒவ்வொரு நாளினும் குறைந்தது இரண்டு மணி நேரமாவது தமிழ்ப் பாடங்களைக் கற்பிக்கக்கூடியதாக அமைதல் வேண்டும். மாணுக்கர்கள் பிழையின்றி எழுதவும், படிக்கவும் தெரிந்துகொள்ளும் வரையில் தவருது சொல்வதெழுதல் என்ற முறை பழக்கத்திலும் தேர்தலிலும் இருக்க வேண்டும். நடுத்தாக் கல்வி முடிவு பெறுவதற்குள் இரண்டாயிரம் செய்யுட்களாவது நன்கு கற்பிக்கப்படல் வேண்டும். அங்ஙனமே 'கிரௌன்' அளவிலே அச்சிடப்பட்ட இரண்டாயிரம் பக்கங்களடங்கிய உரை நடையும் கற்கப்படல் வேண்டும். யாப்பு, அணி என்ற பெயர்களில் மாணுக்கர்களை மருட்டாமல் உரை நடையிலாவது எழுத்தும், சொல்லும் இனிது உபயோகப்படுத்துமாறு கற்பிக்கப் படல் வேண்டும். எவ்வளவுக்கு மனப்பாடமும், எழுதும் பழக்கமும் மிகுதியா யிருக்கின்றனவோ அவ்வளவுக்கு மொழி யறிவு சிறந்ததாயிருக்கும் என்பதும் அறிந்து கைக்கொள்ளப் படல் வேண்டும். இவற்றோடு படித்தவர்கள் எல்லோரும் உத்தியோகத்தைப் பெற்றுவிட இயலாதென்பதையும், படிக்காத பலருடன் தான் உத்தியோகம் பெற்றவரும், பெருதவரும் பழக வேண்டியிருக்கின்றது என்பதையும், "மலையிலே விளைந்தாலும் உரலிலேதான் மசியவேண்டும்" என்பதுபோலத் தமிழர் எவரும் வீட்டிலே தமிழ் மொழியை மறந்துவிடமுடியாது என்பதையும் அத் திருக்கூட்டத்தினரும், மயக்கங்கொண்ட மாணுக்கர்களும் உணர்ந்துகொள்ளுமாறு செய்தல் வேண்டும்.

(ச) தேர்தல் முறை முற்றும் மாற்றப்படல் வேண்டும். தற்கால ஏற்பாடாகச் செய்யுள், உரைநடை, இலக்கணம் என்ற மூன்றற்கும் ஒரு வினப்பத்திரமும், மொழி பெயர்ப்பு, கட்டுரை

என்றவற்றிற்கு ஒரு வினாப்பத்திரமும் இருத்தல் வேண்டும். இரண்டிலும் தனித்தனியே நூற்றுக்கு நாற்பது வீதம் 'மார்க்' குப் பெறுபவரே தேர்ந்தவராகக் கருதப்படல் வேண்டும். மொழி பெயர்ப்பிலும், கட்டுரையிலும் கட்டாயமாக எழுத்துப் பிழை, தொடர்மொழிப் பிழை, பொருட் பிழை, இலக்கணப் பிழை ஆதியன கவனிக்கப்படல் வேண்டும். கதைகளாக எழுதுவதினும் கட்டுரையாக எழுதுவதையே அதிகமாக்கவேண்டும். இம் முறையிலே தேறத்தவறியவர் பிற பாடங்களிலே தேறி யிருந்தாலும் அவர் உயர் வகுப்புக்கு உயர்த்தப்படலாகாது. இவை கண்டிப்பாக வரையறுக்கப்படல் வேண்டும்.

(ரு) தமிழாசிரியர்களின் நிலைமை பெரிதும் இரங்கத்தக்கதா யிருக்கின்றது. அவர்களது ஊதியமோ மிகமிகக் குறைவு; உழைப்போ மிக அதிகம். மேலதிகாரிகளால் அவர்கள் நடத்தப் படும் விதமோ பெரும்பாலான இடங்களில் மிகவும் இழிவாகும். இக் காரணங்களால் மாணாக்கர்களுக்கும் இவர்களுக்கும் உள்ள தொடர்பு அன்பிருப்பினும் மரியாதையிலே குறைவாகவே இருக்க நேருகின்றது. சிற்சில இடங்களிலே மாணவர்களுக்கும் தமிழாசிரியர்களுக்கும் இடையில் சிறந்த அன்பும், மரியாதையும் காணப்படுவது உண்மையே. எனினும், அந்நிலைமை யாங்கணும் எவரிடத்தும் காணமுடியாத நிலைமையைக் கருதி இங்கே கூறப்பட்டது. இவை அனைத்தும் தமிழாசிரியர்கள் சிறந்த ஊதியம் பெற்று அதிகாரிகளால் உயர்வாக நடத்தப்படுவதால் நீங்கிவிடக்கூடும்.

இத்துணையுங் கூறியவாற்றால் எடுத்துக்கொண்ட தலை யங்கத்திற்கேற்றன ஒரு சிறிது விளக்கப்பட்டனவாம். நமது பொழிலாசிரியர்களும், சங்கத்தாரும் இதுபற்றித் தக்கவாறு முயன்று இக் கட்டுரையிலே காட்டியுள்ள குறைகளை நீக்கித் தமிழ்த்தாயைச் சிறந்து விளங்கச் செய்வார்களாக.

பெண்கல்வியின் இன்றியமையாமை.

திருவாளர் E. R. அங்கப்பா அவர்கள், ஆசிரியன், மலையப்பட்டி.

ஓர் நாட்டின் முன்னேற்றம் அதன்கண் வாழும் மக்களின் கல்வியின் முன்னேற்றத்துக்குத் தக்கவாறே யமையும். பற்பல பண்டிதர்கள்மட்டும் ஆங்காங்கே தோன்றுவதால், அந்நாடு கல்விப்பொருளை முற்றிலும் பெற்றதாகக்கூறல் பொருந்தாக் கூற்றே. நம் நாட்டின் கல்வியின் நிலை பெரிதும் வருந்தத்தக்கதா யுள்ளதென்பது, யாவரானும் ஒப்பமுடிந்ததொன்று. நம்நாட்டில் ('கல்வி சிறந்த தமிழ்நாட்டில், உயர் கம்பன் பிறந்த தமிழ் நாட்டில்'!) படியாதார் நூற்றுக்குத் தொண்ணூறு (90 %) யுள்ளனர். இக்குறை பெரும்பாலும் பெண்களுக்குக் கல்வியின் மையால் காணற்கிடனாயிற்றென்பதும் மறுக்கக்கூடாவுண்மை யாம். நம் நாட்டினர் பெண்களுக்குக் கல்வி வேண்டுவதின்றி யமையாதென வுணரமாட்டாராய், "அடுப்பூதும் மங்கையர்க்கு அறிவு வளர்ச்சி எற்றுக்கு?" எனக் கூசாது கூறுகின்றனர். ஆயினும், இவர்கள் கூர்ந்து நோக்கின், அடியிற் கூறப்பெறும் பல்வேறு கேடுகளுமொழிந்து, பன்னலங்கள் தோன்றுதல் பெண்க்ல்வி யொன்றானே யமையுமென்னும் உண்மையை யுணராநிற்பர். மற்றும் பலர், "பெண்கள் கற்றால் கற்புநிலை பிறழ்ந்து கணவர்க்கடங்கார்" எனப் பகராநிற்பர். இவர்கள் கூற்றும் அறியாமையையுந் தந்நலத்தையுங் கொண்டதேயன்றிப் பிறிதின்றாம். இன்னார்களை நோக்கிச் சில வினவுகின்றோம்.

மக்கள் பகுத்தறிவைக் கொண்டவர்களாகலான், ஆறறிவு படைத்தாராய் உயர்திணையுட் சேர்க்கப்படுகின்றனர். அப்பகுத் தறிவும் கல்வியறிவொன்றானேயன்றிப் பிறிதொன்றானமையா தன்றே? பெண்கட்குக் கல்வியும் அதனாற்றரப்படும் பகுத்தறிவும் வேண்டுவதின்றேல், அன்னார் உயர்திணையின்பாற் படாரன்றே? ஆகவே, அன்னார் மக்கட்குழுவினின்றும் வேறாகி விலங்கினத்திற்

சேர்க்கப்படல்தானே வேண்டும்? அவ்விலங்கினத்தோடு கூடி வாழும் ஆண்மக்களும் அவ்விலங்கின் தன்மைகளைத்தானே பெறல் வேண்டும்? மிருகத்தன்மைகளையே பெரிதுங்கொண்ட ஓர் நாட்டில், ஆறறிவு படைத்த மக்கட்டன்மையாற் பெறப்படும் முன்னேற்றத்தை எங்ஙனம் எதிர் நோக்கல் கூடும்? அற்றன்று, பெண்கள் கற்றால் ஆணவம் முதிரப்பெற்று ஆடவர்க்கடங்காரெனின், நன்று கூறினீர்!. ஆணவம் முதிர்வது அஞ்ஞானத்தானேயாம். ஞானமொன்றையே நல்கும் கல்வி. ஆண்கட்கு ஞானத்தையும் பெண்கட்குமட்டும் அஞ்ஞானத்தையுமளிக்குமியல்புடையதாமோ? பெண்கள் கற்புநிலை பிறழ்வது அன்னார் கல்விகற்ற முறையினாலா? அன்றி யவர் கற்ற கல்வியாலா? கற்ற பெண்கள் கெடுவரென்னிற் கல்லாமகளிர் யாவரும் கற்புநிலை தவறாதும் கணவர்க்கடங்கியும் வாழ்கின்றனரா? அன்றியும் கற்பென்பது பெண்கட்கு மட்டுந்தானா? அஃதிருவர்க்கு மணிகலனுமன்றோ? பெண்கள் கல்வியாற் கற்புநிலை தவறுவரென்னின் ஆண்கள் மட்டும் கல்வியாற் கற்புநிலை தவறாரோ? அங்ஙனமாகாரெனின், இதுகாறும் எத்துணைக் கல்விகற்ற ஆண்மக்கள் கற்புநிலை தவறிக் காமக் கிழத்தியர் பலரை நட்புக்கொண்டுள்ளார்! ஆண்கட்குயட்டுங் கற்பின்றேலிழுக்கின்றோ? அதுவுமன்றிக் கற்புநிலை பிறழ்ந்த ஆண்மகனுக்குப் பிறந்த ஓர் பெண்மணி எங்ஙனம் கற்புநிலை பிறழாது வாழல் கூடும்? ஆண் கற்புடையனாயினன்றோ பெண்ணுங் கற்புடையளாவள்?

பண்டைநாளிற் பெண்மணிகள் பலருங் கல்விகற்றவராயுமொழுக்கத்திற் சிறந்தாராயுமிருந்தனரென்பது, பண்டைய நூற்களானே யுணரப்படும். அதிவீரராமபாண்டியன் நூற்குச் சாற்றுக்கவி தந்தார் யாவர்? அவர்தமில்லக்கிழத்தியே யன்றோ? கம்பர் நூற்குக் காப்புரைதந்தார் அங்கநாச்சியென்னு மறிவுடைப் 'பெண்ணன்றோ? மற்றும் சங்கநூற்களிற் காணப்பெறும் பல்வேறு பாடல்களையும் பகன்றார் பெண்மணிகளே யன்றோ? இத்துணைப் பெண்டிருங் கற்புநிலை பிறழ்ந்தோரென்று கழறவுங் கூடுமோ? பல்வேறு நீதி நூற்களையும் யாத்த பெரும் புலவர்களிற்

பலர் தந்நூற்களில் † மகடூஉ முன்னிலைச் செய்யுட்களையும், இருபால்களையுமுணர்த்தும்* பொதுச்சொற்களையுங் கையாண்டுள்ளார். அன்னார் காலத்திய பெண்மக்கள், கல்லாதவர்களாயு மொழுக்கங் குன்றியவராயுமிருந்திருப்பின், அன்றிப் பெண்கட்குக் கல்விப் பயிற்சி கூடாதென்றோ அஃதன்னார்கட் கிடுக்கண் விளைக்குமென்றோ, அன்னார்தமுளக்காட்சியான் (Imagination) அறிந்திருப்பின், இவ்வாறு தந்நூற்களை யியற்ற முற்படாரன்றே?

இவ்வாற்றான், பெண்கள் கற்புநிலை தவறுவது அவர்கள் கற்குங் கல்வியானன்று; அன்னார் கூடிப் பழகுங் கூட்டத்தின் தன்மையானேயாமென்பது பெற்றாம். கற்ற பெண்டிரிற் சிலர் கெடலுமுண்மையே. அத்தகையார் கெடக் காரணமாய் நிற்பதும் அவர்தந் தாய்மாரே யாவர். எவ்வாறெனிற் கூறுதும். ஓர் பெண்மணி கற்றவளாயினும், தான் கூடிப்பழகு மறிவிலாக் கூட்டத்தாற் சிறிது கெடுகின்றாள். அத்துடனில்லாது, இன்ன நூற்களைப் படிப்பதென்றோராளாய், ஏதோ சிலர் (நாட்டு மக்களைத் தீநெறியிற் செலுத்துவான் வேண்டியே) பொருளீட்டு முறையானெழுதிய நாவல்களையும், அவை போன்ற பல தீய நூற்களையும் படித்துத் தன் மனத்தைப் பல்வேறு தீ நெறிகளினும் செலுத்துகின்றாள். அவள்தன் தாய் கற்றவளாயின், தன் மகளை நற்பழக்கங்களையே, கொள்ளுமாறும் நன்னூற்களையே படிக்குமாறுந் தூண்டாநிற்பாள். தாய் கற்றிலளாயின் இஃதெங்ஙனமியலும்?

மக்கள் இளமையிற் கொள்ளும் பழக்க வழக்கங்கள் அவர்தம் முதுமையினுந் தொடர்வனவாகும். 'தொட்டிற்பழக்கம் சுடுகாடு மட்டும்' என்னும் பழமொழி இது குறித்தே எழுந்ததென்க. ஆகவே மக்கள் இளமையில் நற்பழக்கங்களைக்கொள்ளின், முதுமையினும் அப்பழக்கங்கள் அன்னார்பால் விளங்கா நிற்கும். குழவிப்பருவமுதல் இல்லறத்தைக் கொள்ளும்வரை, மக்களுட

† 'பூவிற்பொலி குழலாய்' 'நன்னுதால்' 'நல்லாய்' 'தோழி' முதலியன.

* 'கல்வியினூங்கில்லை சிற்றுயிர்க்குற்றதுணை'
'விலங்கொடு மக்களனையர்... கற்றாரோடேனையவர்'
'முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்.' etc.

னுறைந்து வேண்டுவன வாற்றுங் கடமை தாய்க்கன்றி மற்றை யோர்க்கிராதென்றே கூறலாம். அவ்வா றிளமைமுதல் உட னுறைந்துவாழும் தாய்மார் கற்றிலராயின், அன்னார் எங்ஙனம் தம்மக்களை நன்னெறியிலுய்த்தலியலும்? இது குறித்தே ஓர் கிரேக்க நூலாசிரியர், "நின்மகனை ஓர் வேலையாளிடம் பயிற்று விப்பின் நீ இரு வேலையாட்களை யடைவாய்" என்றும், ஜார்ஜ் ஹெர்பர்ட் என்ற ஓரறிஞர், "ஓர் நல்ல தாய் நூறு நல்லாசிரியர் கட்குச் சமம்." என்றும், இரிட்சர் என்னுமறிஞர், "ஒருவன் உலக வுருண்டையைச்சுற்றிப் பற்பல வகுப்பாரிடைப் பழகினும், தன் செவிலித்தாயின் (Nurse) பழக்கங்களில் மாறுபாடு கொள்ளான்." என்றும், நெப்போலியன் என்னு மொப்பற்ற வீரர், "ஓர் குழந்தையின் ஒழுக்கம் அதன் தாயினதையேபற்றி நிற்கும்" என்றும், மற்றும் பலர் பலவாறும் கூறியுள்ளார். பெண்மக்கள் கருக்கொண்டிருக்குங்கால், அன்னார் கொள்ளும் ஒழுக்கங்களு மெண்ணங்களும் அக்கருவுக்கு முண்டாதலியல் பென மருத்துவ நூலறிஞர் பலர் (Doctors) கண்டுள்ளார். பெண்கள் கற்றுத் தேர்ந்த வறிவுடையாராயின், அன்னாரைப் போன்றே அவர்தம் மக்களுமமைவரன்றோ?

நந்தமிழ்நாடு பண்டைநாளில் வீரர் செறிந்ததா யிலங்கிப் பின் கோழையர் நிறைந்த நாடாயிற்றென்பது பன்னூற்களா னறியக் கிடக்கின்றது. ஒருவர் ஓர் தாயை நோக்கி, அவள் 'மகன் எங்குற்றானென வினவ அன்னாள் அவர்க்கு மறுமொழியாக, "என்மகற்குப் போர்க்களத்தினன்றி யீண்டு வேலை யாது?" என வினவா நின்றனளென்றும், ஓர் தாய் தன் மகன் போர்க்களத்திற் புறமுது கிட்டானெனக் கேட்டு வெகுண்டு, போர்க்களம் புக்கு, ஆண்டு தன் மகன் உரத்துற்ற புண்ணோடு உயிரற்றுக்கிடத்தல் கண்டு, பெற்ற ஞான்றினும் பெரிது உவந்தனளென்றும், மற்று மோர் தாய் முதனாட் போரிற் றன் கொழுநனுயிர் துறப்பவும், வாட்டங் கொள்ளாளாய்த் தனக்குள்ள ஒரே மகனையும் போர்க் களம் போக்கத் துணிந்தாளென்றும், பல உண்மை நிகழ்ச்சிகள் பண்டைச் சங்க நூற்களா னறியப்படுகின்றன. உலகத்தையே ஒரு குடைக்கீ ழாளவிருந்த நெப்போலியனென்னும் ஒப்பற்றவீரர்,

தாம் அத்துணை வீரமு மாற்றலும் பெற்றமை கல்வியறிவுள்ள தம் தாயி னறிவுறுத்தல்களானேயா மென்று கூறியுள்ளார். தற்போதைய நந் தாய்மார்களோ, ஓர் பெருங் கூட்டத்தைக் காணினும் (அக்கூட்டங் கூடியதன் நோக்கம் யாதாயினுமாக.) அங்குத் தம் மக்களைச் செல்லாதவாறு தடுக்கத் தயங்கார்! காரணம் என்னை? அன்னார் வீரமும் உலகவியலுமொருங்கே தரவல்ல கல்வியைப் பெறாமையேயாம். ஓராராய்ச்சியாளர், "மேனாட்டு மக்கள் விண்ணினின்றும் வெடிகுண்டெறிய வேட்கை கொள்ளுகையில், இந்திய மக்கள் துப்பாக்கி யொலிகேட்டு வெப்பங்கொண்டு வியாதியடைகின்றனர்" என நகைச்சுவை ததும்பக் கூறுகின்றார். மேனாட்டுப் பெண்கள் தம் கல்வியறிவான் தம் மக்கட்கு அஞ்சாமையை யறிவுறுத்தா நிற்ப, நந்நாட்டுப் பெண்டிர் கல்வியறிவின்மையான் தம் மக்களைக் கோழைத் தன்மையைக் கொள்ளச் செய்கின்றனர்.

பெரும்பாலும், பெண்கள் கல்லாமல் அறியாமை வாய்ப்பட்டிருத்தலின், தாங்களுமல்லலுற்றுப் பிறரையுமவ்வாறே ஆக்கமுறப்படுகின்றனர். எடுத்துக்காட்டாகச் சில கூறுதும். இந்நாட்டில் பெண்களின் அணிகலன்கட்கு மட்டும் சுமார் இருநூறு கோடி ரூபாய்கள் செலவிடப்படுகின்றனவென அறிஞர் கணித்துள்ளார். இயற்கையழகே எவர்க்குமழகாம்; செயற்கையழகாற் சிறப்புமுண்டோ! இவ்வுண்மையைக் கல்லாமகளி ருணராராய்த் தம் பெற்றோரையும் காதலரையும் தமக்கணிகலன்களைப் பூட்டுமாறு துன்புறுத்திக் கலாம் பல விளைத்துக் கலங்குகின்றனர். மற்றும் ஒரே இல்லில் ஒற்றுமையான் வாழும் உடன் பிறப்பாளர் வேற்றுமைகொண்டு வேறுவதும் பெண்களி னறியாமையானேயாம். மற்றும் பலவற்றை விரிவஞ்சி விடுக்கின்றேம். பெண்களி னறியாமையே உடல்நலவழிகளனைத்தும் கெடக் காரணமாயுளது. இல்லாளென்னு மியற்பெயர்க்கேற்ப, இல்லத்தைச் செவ்வனே வைத்தலும், அடிசிலாக்கலை யாராய்ந்து செய்தலும் பெண்கட்குரிய சிறப்புத்தொழில்களாதலான், அவற்றைச் செவ்வனே செயற்குப் பெண்கள் கற்றிருத்தல் வேண்டுமன்றோ? ஓர் மருத்துவ வல்லுநர் உடல்நல வழிகளைப்பற்றிப் பலவாறு

படித்தும் பிறர்க்கெடுத்துரைத்தும் பயனென்! அவர்த மில்லின் அவர் முறைகளைச் சிறிதேனும் பின்பற்றுளாய்த் தன்முறைப்படி புளிப்பையும் கார்ப்பையும் நனிமிகப் பெய்தட்ட அடிசிலைத்தானே யுண்ணக் கடமைப்பட்டுள்ளார்! அவர் கூறும் வழிகள் அவர்தங் கல்லா மனைவிக்குப் பெரு நகைப்பையேயன்றிப் பிறிதொரு பலனையும் பயக்காவென்க. பெண்கள் கற்றவர்களாயின், உடல் நலவழிகளை முற்றுமுணர்ந்து, அவ்வாற்றில் தம் மில்லத்தையும் இல்லினுள்ளோரையும் ஆக்க முற்படுவாரன்றே?

கல்லாப் பெண்டிர் இல்லறத்தைச் செவ்வனே நடாத்தி யின்புறுமியலை யுணரார். "காதன் மனையாளுங் காதலனு மாறின்றித்—தீதி லொருகருமம் செய்பவே," என ஓர் தக்கார் மொழிந்துள்ளார். இருவரும் ஒத்த தன்மை வாய்த்திலரேல் இஃதெங்ஙனமியலும்? கணவன் மனைவிக்கு ளெழும் வேற்றுமை யில் உண்டாம் பிணக்குகளே அன்னார்களை யொழுக்கங் குன்றச் செய்யுமென்பது மிகையன்று. இச்சிறு பிணக்குகள் இருவர்க்கு மிடையே ஒற்றுமையை வளர்க்குமன்றோவெனச் சிலர் வினவ முந்துவர். இவை பெரும்பாலும் இருவர்க்குள்ளும் ஒத்ததன்மையு நோக்கமு மின்மையானே எழுதலான், மேற் கூறிய பயனை விளைக்காவென்க. கணவனைப்போன்று மனைவியுங் கல்விபயின்று ஓரே நோக்கங் கொள்வாளாயின், ஆடவன் பிறன் மனை புகும் பெரும் பிழையைச் செய்வனோ? பெண் கற்பு நிலையையேனும் அன்றிக் கணவன் கட்டளையையேனுங் கைவிட முந்துவளோ? இருவருங் காதற்றளையாற் கட்டப்பெறுவாராதலான், மேற் கூறிய கேடுகள் நேராவென்க.

மேற்கூறிய வாற்றான், பெண்கல்வி பெரிதும் இன்றியமை யாதென்பது பெற்றாம். ஆகவே இத்துணை இன்றியமையாப் பெண் கல்வியைப் பரப்ப யாவரும் ஊக்கங் கொண்டுழைப்பா ராயின், நம் நாடு பெரிதும் முன்னேற்றமடைதல் திண்ணம். ஆங்காங்குள்ள அரசியல் வாதிகளும், சீர்திருத்தக்காரர்களும்

சமயத்தொண்டர்களும், அரசாங்கச் சட்டமூலமாகவோ அன்றி வேறெவ்வழியானே, இப் பெண்கல்வியைப் பரவச் செய்யும் முயற்சியிலீடுபடுவார்களா? அவ்வாறு செய்யின் அன்னார் தொண்டுக்கும் அவர்தம் நாட்டுக்கும் பயனுண்டாதலுறுதி. இப்பெண்கல்வி யாண்டும் விரைவில் பரவ இறைவன் திருவருள் புரிவானாக.

திருவள்ளுவர் திருக்குறள்.

பாயிர ஆராய்ச்சி.

கடவுள் வாழ்த்து.

திருவாளர் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள்.

(முன் தொடர்ச்சி 334).

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவ
னற்ருள் தொழாஅ ரெனின்.

இதன் பொருள் :—(மாந்தர் பல நூல்களையும்) கற்றறிந்ததனல் (அவருக்கு) உளதாய பயன் யாது, தூய அறிவினனது நல்ல தாழ்களைத் தொழாராயின்? அதாவது, தூய அறிவினை யுடையானது (உடைய கடவுளது) நல்லதாள்களைத் தொழாரானல் (மாந்தர் பல நூல்களையும்) கற்றறிந்ததனல் (அவருக்கு) உள்தாகிய பயன் யாது? (ஒன்றும் இல்லை.) என்பதாம்.

மெய்ப்பொருள் முதற்குறளில் 'ஆதிபகவன்' எனவும், இக் குறளில் 'வாலறிவன்' எனவும், இதற்குப் பின்வரும் எட்டுக் குறள்களினும் முறையே 'மலர்மிசையேகினன்' 'வேண்டுதல் வேண்டாமை இலான்', 'இறைவன்' 'ஐந்தவித்தான்' 'உவவையில்லாதான்' 'அந்தணன்' 'எண்குணத்தான்' 'இறைவன்' எனவும் உயர்திணை ஆண்பாலாகக் கூறப்பட்டுள்ளது. ஆனல், அப்பொருள் "மெய்யுணர்தல்" என்னும் அதிகாரக் குறள் பத்தினும் அவ்வாறு உயர்திணை ஆண்பாலாகக் கூறப்பட்டிலது; அஃறிணை ஒன்றன்பாலாகக் கூறப்பட்டுளது. திருவள்ளுவர் தொல்காப்பியத்தை இலக்கணமாகக் கொண்டவரென்பது புலவர் பலர்க்கும் ஒப்பமுடிந்ததொன்று.

'மக்க டேவர் நரக ருயர்திணை, மற்றுயி—ருள்ளவு மில்லவு மஃறிணை' என்னும் கோட்பாடு பிற்காலத்தே தோன்றியது. அன்றியும், தேவர் என்பது வானவரைக் குறிக்குமேயல்லாது மெய்ப்பொருளைக் குறிக்காது. அங்ஙனம் இருக்கவும், பின்னூலார் களிற் பலர் மெய்ப்பொருளை உயர்திணை ஆண்பால் சொற்களால் கூறியுள்ளனர். தொல்காப்பியமோ "உயர்திணை யென்மனர் மக்கட் சுட்டே, அஃறிணை யென்மனா ரவரல பிறவே, ஆயிரு திணையி னிசைக்குமன் சொல்லே" எனக் கூறுகின்றது. மக்களைத் தவிர மற்றைப் பொருள்களைக் குறிக்கும் சொற்களெல்லாம் அஃறிணையாக ஒலிக்கும் என்னும் இவ் விலக்கணத்தைக் கைக்கொண்ட திருவள்ளுவர் மெய்ப்பொருளை உயர்திணை ஆண் பாலாகக் கூறுவாரா? அவ்வாறு அவர் கூறினல் அஃது ஓர் இழுக்காகாதா? ஆதலால், மெய்ப்பொருளைத் திருவள்ளுவர் உயர்திணை ஆண்பாலாகக் கூறார் என்பதும், அப்பொருளை உயர்திணை ஆண்பாலாகக் கூறுகின்ற இவ்வதிகாரக் குறள்கள் பத்தையும், கூறியவர் மேற்கண்ட 'மக்கடேவர் நரகருயர்திணை' என்னும் கோட்பாட்டிற்குப் பின்தோன்றியவரே என்பதும் வெள்ளிடைமலை.

வாலறிவன் என்பதன் பொருள் தூய அறிவினை உடையவன் என்பதே. ஆகவே, தூய அறிவு ஒன்று, அதனை உடையவன் ஒருவன், அதனை உடைமையாகக்கொண்ட தொழில் ஒன்று என்ற

இந் பொருளுண்மையும் ஒரு தொழிலுண்மையும் பெறப்படுகின்றன. இவ்வுண்மைப்பேறு மெய்ப்பொருளொன்று தவிர வேறுபொருள் ஒன்றும் இல்லையென்னும் கொள்கைக்கு முரண்படுகின்றதன்றோ? திருக்குறள் பல சமயங்களையும் தழுவி ஒரு சமயத்தையும் கடியாதுநிற்கும் பொதுச் சமயநூல் என்பது புலவர் பலர்க்கும் ஒப்ப முடிந்ததொன்றன்றோ? அவ்வாறாகவும், ஒரு சமயத்தைக் கடிந்து பொதுச்சமயநூல் என்ற பெயரை இழந்து நிற்கின்ற நூல் என்று பலரும் சொல்லும்படியாகக் கடவுளிலக்கணத்தை வள்ளுவர் மேற்கூறியவாறு கூறினர் என்றல் அவர் சிறப்பினைக் குறைத்தலாகாதா? அன்றியும், இப்பா மெய்ப்பொருளை மனித உருவகப்படுத்தி, அது தாள் முதலியவற்றை உடையதாகக் கூறுகின்றது. இவ்வாறு மனித உருவகம் செய்வதால் மெய்ப்பொருள் மனித உருவினை யுடையது என்று கொள்ளவோ அல்லது மனித உருவினையுடையதுதானோ என்று ஐயம் உறவோ செய்கின்றதன்றோ? இத்தகைய கொள்கை அல்லது ஐயம் மக்களுள் பரவும்படி மெய்ப்பொருளை நம் வள்ளுவப் பெரியார் மனித உருவகம் செய்வாரா? செய்யார் என்பது ஒருதலை.

இக்குறட்பாவின் பொருள்தான் என்னை? கடவுளைத் தொழாதார் கல்வி கற்றதனால் பயன் ஒன்றும் அடைந்திலர் என்பதே. கல்வியின் பயன்களுள் கடவுளைத் தொழுதல் சிறந்ததொரு பயன் என்று சொல்லலாமேயன்றிக் கல்வியின் பயன் கடவுளைத் தொழுதல் ஒன்றே என்று எவ்வாறு சொல்லலாம்? உலக அறிவு, நல்லொழுக்கம் முதலியன கல்வியின் பயன்களல்லவா? கற்றானொருவன் கடவுளறிவு ஒன்று தவிர மற்றைய அறிவுகளெல்லாவற்றையும், நல்லொழுக்கங்களெல்லாவற்றையும் கைக்கொண்டு நிற்பனேல், அவன் கற்றதனால் யாதொரு பயனையும் அடைந்திலன் எனக்கூறலாமா? ஒருவன் மறம் இஃது, அறம் இஃது, என்று அறிந்து மறத்தை விடுத்து அறத்தைப் புரிந்து நிற்பனேல், அவன் கற்றதனால் யாதொரு பயனையும் அடைந்திலன் என்று கூறலாமா? ஒருவன் 'யான்' 'எனது' என்னும் செருக்கினை ஒழித்து மன்னுயிரெல்லாம்

தன்னுயிரெனப் பேணி நிற்பனேல், அவன் கற்றதனுல் யாதொரு பயனையும் அடைந்திலன் எனக் கூறலாமா? கல்வியும் அறிவும் ஒழுக்கமும் நிறைந்துள்ள சிலர் கடவுள் இல்லையெனவும், வேறு சிலர் கடவுள் உண்டோ இல்லையோ, அவ்வுண்மை யின்மைகளைப்பற்றி ஆராய்தலால் நாம் அடையும் பயன் ஒன்றும் இல்லையெனவும் கூறுகின்றதுபற்றி அவரெல்லாம் கற்றதனுல் யாதொரு பயனையும் அடைந்திலர் எனக்கூறலாமா?

மேற்கூறியனவெல்லாம் ஒரு புறம் கிடக்க; நூற் கல்வி மெய்யுணர்தலுக்கு இன்றியமையாததொன்ருகுமா? எம் மொழியின் எழுத்துக்களையும் அறியாதார் எத்துணைப்பேர் மெய்ஞ்ஞானிகளாய் விளங்கியிருக்கின்றனர்? நம் கண்ணப்ப நாயனுர், இராமகிருட்டினப் பெரியார் முதலியவர்கள் எந்த நூல்களைக் கற்றுக் கடவுளைக் கண்டனர்? அடைந்தனர்? கடவுளைக் காண்டற்கு நூற்கல்வி ஒரு துணையாகும் என்று கூறலாமேயன்றி, இன்றியமையாததொன்றெனக் கூறுதற்கு இடமேயில்லை. இம்முதலாய பொருட்டுக்களால் பல நூல்களையும் கற்றுப் பலவகைகளிலும் மேம்பட்டார் ஒருவர் வினைவழியாலோ அல்லது வேறு காரணத்தாலோ கடவுளைத் தொழாராயின், அவர் அந்நூல்களைக் கற்றதனுல் யாதொரு பயனும் அடைந்திலர் என்று கூறுவது அறிஞர் சிலரால் மறுக்கப்படத்தக்கதொன்றேயாம். "சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை, வெல்லுஞ்சொ லின்மை யறிந்து" என்று விதித்த நம் வள்ளுவர் இக்குறளைக் கூறினுரென்றல் பேதமையுட் பேதமையேயாகும்.

'வாலறிவன் நற்ருள்' என்ருர், அவற்குத் தீத்தாள் ஒன்று உளதோ என்று சிலர் மயங்குமாறு. அம்மயக்கத்தை நீக்கக் கருதியே, 'நன்மையே பயக்கும் தாளாதலால் நற்ருளென்ருர்' என்று உரையாசிரியர் சிலர் உரைக்கலாயினர். அவற்கு வேருகத் தீமையென ஒருபொருள் உண்டென்பார் யாண்டுளர்? அன்பே அறத்திற்கும் மறத்திற்கும் சார்பு என்ற நம்வள்ளுவர் மெய்ப்பொருள் மறத்திற்கு வேருயுளதென்று பொருள்பட 'நற்ருள்' என்று கூறுவரா? கூருர் என்பது பள்ளிச்சிருர்க்கும் தெள்ளென விளங்கும் ஓர் உண்மை.

கல்வியின் பயன் கடவுளைத் தொழுதல் என்று கூறவே, தொழுவான் வேறாயிருந்தே கடவுளைத் தொழுதல் வேண்டும் எனக் கூறினதாயிற்று. 'யான்' என்னும் செருக்கறுத்தான் கடவுளுக்கு வேறாக எங்ஙனம் இருத்தல் கூடும்? தொழுதல் கூடும்? இக்குறளின் கருத்துப்படி அச்செருக் கறுத்தானும் கல்வியின் பயனை அடையாதவன் என்று கூறப்படுதற் குரியனாகின்றான். "மெய்யுணர்தல்" என்னும் அதிகாரக்குறள்கள் பத்தில் ஒன்றிலேனும் 'தொழல்' என்னும் சொல் வழங்கப் படாமையும் நோக்குக. இவ்வகையாகப் பொருட்குற்றம் சொற் குற்றம் நிறைந்து நிற்கும் இக் குறட்பாவைத் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் கூறினரென்னும் கூற்று, தென்திசைக் கூற்றுப்போலவே தோன்றுகின்றது.

மூன்றாம் குறள்.

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

இதன் பொருள்:–பூமேல் நடந்தவனது (பூமேல் நடந்த கடவுளது) மாட்சிமைப்பட்ட அடிகளைச் சேர்ந்தவர்கள் நிலத்தின்மேல் நெடுங்காலம் வாழ்ந்திருப்பர் என்பதே.

மலர் என்பது பூ. மிசை என்பது மேல், "மேடுமேலு மிசையென மொழிவர்" என்பது பிங்கல நிகண்டாதலின். ஏகினான் என்பது சென்றான். ஆகவே, மலர் மிசை யேகினான் என்பதற்குப் பூமேல் நடந்தான் என்பதுதான் நேரிய பொருள். ஆனால், அப்பொருளினைக் கொள்ளின், 'பூமிசை நடந்தோன்' என்னும் பெயரினையுடைய அருக மதக்கடவுளையே இப்பாவாசிரியர் குறித்தனர் என்று கூற நேரும். அவ்வாறு ஒரு சமயக் கடவுளைக் குறித்தே பொதுமறையாசிரியர் கூறினரென்று யாரே கூறத் துணிவர்?

'மலர்' என்பதற்கு 'மனமாகிய மலர்' என்று பரிமேலழகர் உரைத்துள்ளார். மலர் என்பதற்கு மனமாகிய மலர் என்றுரைக்க, நம் வள்ளுவருக்கு முந்திய இலக்கியம் யாதுளது? யான் கற்ற

வரையிலும் கேட்டவரையிலும் யாதொன்றும் இலது. அவ்வா றிருக்கவும், மீன மலரை மலர் என்று வள்ளுவர் கூறினர் என்றல் அவர் "குன்றக்கூறல்" என்னும் குற்றத்தை இப்பாவியற்றலிற் புரிந்தனர் என்று கூறலோ டொக்கு மன்றோ?

'மலர் மிசை ஏகினன்' என்பதற்கு 'மலர்மேல் ஏகினன்' என்று பொருளுரைக்குங்கால், கடவுள் மலரின் சீழும் மற்றை நான்கு பக்கங்களிலும் உள்ளும் ஏகிலன் என்று சொல்ல நேருமே. அவ்வாறு சொல்வதற்குப் 'பூமேல் நடந்தோன்' என்னும் கடவுளைப்பற்றிய அருக மதத்தினராவது இசைவார? இசையார். அதுபற்றித்தான் 'மிசை' என்பதற்குப் பரிமேலழகர் 'கண்' என்றுரைத்தனர்போலும். அதற்கு அப்பொருள் உரைப்பினும் கடவுள் எதன்கண்ணிருந்து மலரின்கண் சென்றான்? என்றொரு வினா நிகழும். அதனைப்பற்றிப் பின்னர்க் கூறுவல். ஆகவே, 'மிசை' என்னும் சொல் ஈண்டுப் பொருத்தமற்றதோர் சொல் லெனக் காண்க.

'ஏகினன்' என்பதற்குச் 'சென்றான்' என்பதே பொருள். பரிமேலழகரும் அச்சொற்கு அப்பொருளே உரைத்துள்ளார். ஆனால், "செலவினும் வரவினும் தரவினுங் கொடையினும், நிலை பெறத் தோன்று மந்நாற் சொல்லுந், தன்மை முன்னிலை படர்க்கை யென்னும், அம்மூவிடத்து முரிய வென்ப" எனவும், "அவற்றுள், தருசொல் வருசொல் லாயிருகிளவியுந், தன்மை முன்னிலை யாயீரிடத்த" எனவும் வரும் தொல்காப்பியச் சொல் லதிகாரச் சூத்திரங்களையும் "செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான், நல்விருந்து வானத் தவர்க்கு" என்னும் திருக் குறளையும் உற்றுநோக்குவார்க்கு 'மலர் மிசை யேகினன்' என்று கூறுதலினும் 'மலர் மிசை வந்தவன்' என்று கூறுதலே மிகப் பொருத்த முடைத்தென்று விளங்கும். 'செல்விருந்து' என்பதற் குத் 'தன்பால் நின்று பிறர்பால் செல்லும் விருந்து' என்பதும், 'வருவிருந்து' என்பதற்குப் 'பிறர்பால் நின்று தன்பால் வரும் விருந்து' என்பதுமே நேர்பொருள். "இருக்கை யெழலும் எதிர் செலவும் ஏனை, விடுப்ப ஒழிதலோ டின்ன" என்னும் நாலடியாரிற் காணும் 'எதிர்செலவு' என்பதன் கருத்து 'வரு

விருந்தோம்பி' என்பதிலும், 'வினை விடுப்ப ஒழிதல்' என்பதன் கருத்துச் 'செல்விருந்தோம்பி' என்பதிலும் அமைந்து கிடத்தலைக்காண்க.

இனி, 'வகினன்' என்பதை இடமயக்கம் எனக் கொண்டு 'வந்தவன்' எனப்பொருள் கொள்ளலாமெனினும், எங்கிருந்து எங்கு வந்தான் என்று எழும் வினாவிற்கு யாதுவிடையிறுப்பது? கடவுள் எங்கும் உளன் என்னும் கோட்பாடு எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததொன்றாகலின், அவன் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு வகினன் என்றல் பிழைபாடன்றோ?

'நற்றாள்' என்பதற்கு யான் கூறிய குற்றங்களெல்லாம் 'மாணடி' என்பதற்கும் உள. அக்குற்றங்களை அங்கு நோக்கிக் கொள்க.

'சேர்ந்தார்' என்பதற்கு 'அடைந்தார்' என்பதுதானே பொருள்? அச் சொற்கு அப்பொருள் உரைப்பின் 'மாணடி சேர்ந்தார்........நீடு வாழ்வார்' என்பதற்குக் கடவுளடியை அடைந்தவர் (அவருக்கு வேறாக ஓர் உடலோடு கூடி) நெடுங்காலம் வாழ்ந்திருப்பர்' என்றுதானே பொருள் உரைக்கவேண்டும்? இது அறிவுக்குப் பொருத்தமில்லாத ஒரு மதக்கோட்பாட்டைக் குறிக்குமன்றோ? திருவள்ளுவர் அவ்வொரு மதக்கோட்பாட்டை இக்குறளில் கூறினாரென்றல் அவர் பொதுமறை இலக்கணத்திற்கு மாறுபடக் கூறினர் என்றலேயாம். இதனை யெல்லாம் கருதி இடர்ப்பட்டுத்தான் பரிமேலழகர் 'சேர்தல்' என்பதற்கு 'இடைவிடாது நினைத்தல்' என்று பொருள் உரைத்தனர் போலும். அச் சொற்கு அப்பொருள் உரைத்தல் "வலிந்து பொருள்கோடல்" என்னும் குற்றத்தின்பாற் படுமன்றோ? அன்றியும், கடவுளடியை இடைவிடாது நினைத்துக்கொண்டிருப்பவர் அகம்பாவமுடைய அடியாராவரேயல்லாமல் அகம்பாவமிழந்த முத்தராகார். முத்தரும் நிலமிசை நீடுவாழ்தல் இல்லை.

'நிலமிசை' என்பதற்குப் 'புவியின்மேல்' என்பது பொருள். 'வாழ்தல்' என்பதற்கு 'உயிர் உடலோடு கூடி வாழ்தல்' என்பதே பொருள். அதற்குச் சான்று "வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல், அதற்கன்னள் நீங்கு மிடத்து" என்னும் திருக்குறள். பத்தராயினும் முத்தராயினும் உடலோடு கூடி நலமிசை நீடுவாழ்தல் இல்லை. இனி, 'வாழ்தல்' என்பதற்கு 'உடலோடு கூடி வாழ்தல்' என்று பொருள் உரையாது, 'சிறப்பாக வாழ்ந்திருத்தல்' என்று பொருள் உரைப்பின், அதுவும் பொருந்தாது. என்னை? எவரும் நிலமிசை நீடுவாழ்தல் இல்லை யாகலான். இவ்விடர்ப்பாடுகளை யெல்லாம் கண்டுதான் பரிமேலழகர் 'நிலமிசை' என்பதற்கு வீட்டுலகின்கண்' என்றுரைத்தனர் போலும். அச்சொற்கு அப்பொருள் உரைப்பின் அதுவும் பொருந்தாது, முத்தர் கடவுளுக்கு வேறாகத் தனித்து வாழ்தல் இல்லையாகலான். அன்றியும், மன மலரை மலர் என்று கூறுதல் குன்றக் கூறல் என்னும் குற்றமாதல் போல, வீட்டுலகை நிலம் என்று கூறுதலும் குன்றக்கூறல் என்னும் குற்றமேயாம்.

'நீடு' என்பதற்கு நெடுங்காலம் என்பதுதானே பொருள்? இக் குறட்பாவைக் கூறியவர் நீடு என்ற சொல்லால் நெடுங் காலத்தை உணர்த்தக் கருதாது எக்காலத்தையும் உணர்த்தக் கருதினரென்பது வெள்ளிடைமலை. என்னை? ஒருவர் ஓர் ஆண்டில் இறப்பினும், நூறு ஆண்டில் இறப்பினும், ஆயிரம் ஆண்டில் இறப்பினும் அவர் இறப்பினையுற்றுப் பிறப்பினை அடைந்து கடவுளடி சேராதாரேயாவராகலான். 'எக்காலமும்' என்ற பொருள்படக் கூறக்கருதிய இப்பாவாசிரியார் 'நீடு' என்று கூறினரென்றால், ஒன்று அவர் அவ்விரு சொற்களுக்குமுள்ள பொருள் வேற்றுமையை அறிந்திலர் என்றல், அல்லது அவர் 'வாழ்' என்பதனை ஈற்றசையாகக்கொண்டு முடியும் காய்ச்சீருக்குப் பொருத்தமாக எக்காலமும் என்று பொருள் தரும் 'நாளும்' என்பது போன்ற 'தேமா' அசைச் சொல்லையாவது அல்லது 'நிச்சலும்' என்பது போன்ற 'கூவிள' அசைச் சொல்லையாவது கண்டிலர் என்றல் வேண்டும். இத்தகைய அறியாமையை அல்லது காணாமையை நம் வள்ளுவர்பால் ஏற்றவிரும்புவார் யாவர்?

'வாழ்வார்' என்னும் சொல் ஈண்டும் பொருத்த மில்லாதிருத்தலை முன்னர்க் காட்டியுள்ளேன். வாழ்வார் என்னும் சொல்லின் 'வாழ்' என்னும் முதலசையை முந்தினசீரின் ஈற்றசையாகச் சேராக்கால் வெண்பாத்தளை தட்டும்படியாக வெண்பாவியற்றல் போலிப் புலவரது செய்கையாம். பிரித்து இரண்டுசீர்களிற் சேர்க்கப்படவேண்டிய ஒரு சொல் திருக்குறளில் எந்தப் பாவிலேனும் வரக்காணின் அவ்வரவுக்குத் தக்கதோர் காரணம் இருக்குமென்றெண்ணி ஆராய்ந்து அதனைக் கண்டு கொள்க.

பொருளினும் சொல்லினும் இதுகாறும் கூறிய குற்றங்களை யுடைய இக்குறட்பாவை நம்வள்ளுவர் கூறினர் என்றல் அவரைப் புலவரல்லர் என்று கூறியதோடொக்கும்.

செந்நீர்.

திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், தலைமைத் தமிழ்ப்பண்டிதர், உயர்தரக்கல்லூரி, நான்குநேரி.

(முற்றொடர்ச்சி 320.)

நாம் மேலே விரித்தபடி சுருங்கி விரியும் கருவியே செந்நீரை உடல் முழுவதும் விசைகொண்டு செலுத்துகிறது. நீரை மேலே இறைக்கும் விசைக்கருவிகள் குழாய் வடிவமாக இடை நடுவில் ஓர் தண்டுடன் விளங்குகின்றன. அத்தண்டே நீரை விசையுடன் அமுக்கித் தள்ளுகிறது. ஆனல் நமது மார்பிலுள்ள இக் கருவியோ தானே சுருங்கி விரிவதால் இச் செயலைச் செய்கிறது.

சுருங்கும்போது அவைகளிலுள்ள இருத்தங்கள் முழுமையும் பக்கங்களிலுள்ள துளைகள் வழி வெளியே போய்விடுகின்றன. உடனே அவை விரிகின்றன. அப்போது வெளியேபோன செந்நீர்கள் உள்ளே வாராதபடி தடைசெய்ய அங்குள்ள மூடிகள் வழியை மூடிக்கொள்கின்றன.

மேலறைகள் இரண்டும் செந்நீரை வாங்கிக்கொடுக்கக் கீழறைகள் அதை வெளியே விசையுடன் செலுத்துகின்றன. இதனால் இருத்தயத்தில் உண்மையாக விசைக்கருவிகளாக இருப்பன கீழறைகளே. வலது கீழறை கெட்ட இருத்தத்தை நுரையீரற் குலைகளுக்கு அனுப்புகிறது. நுரையீரற் குலைகள் இருத்தத்தில் கலந்து வரும் கரிக்காற்றை (corbonic acid gas) வாங்கிக்கொண்டு அதில் உயிர்க்காற்றைப் (oxygen) புகுத்தி நல்ல இருத்தமாக்கி உயிர் நிலையின் இடது மேலறைக்கு அனுப்புகின்றன. உயிர் நிலையின் மேலறைகளைக் காட்டிலும் தடித்த தசைகளால் கீழறைகள் அமைந்துள்ளன. ஏனெனின் மேலறைகளுக்குச் செந்நீரை வாங்கிக் கீழறைகளில் விடுவதைத்தவிர வேறு வேலையில்லை. கீழறைகள் செந்நீரைப் பல இடங்களுக்கு விசை கொண்டு செலுத்த வேண்டியதிருப்பதால் தடித்த தசைகளால் யாக்கப் பெற்றன. இவைகளுள்ளும் வலது கீழறையிலும் இடக் கீழறை மிகத் தடித்த தசைகளால் அமைந்துளது. ஏனெனில் வலது கீழறை தனது பக்கங்களிலுள்ள நுரையீரற் குலைகளுக்கு மட்டுமே செந்நீரைச் செலுத்துகிறது. இடது கீழறையோ உச்சி முதல் உள்ளங்கால் வரையுள்ள உடலணுக் களுக்கெல்லாம் செந்நீரைச் செலுத்துகிறது.

செந்நீர் உடம்பின் ஒவ்வொரு பகுதிக்கும் நரம்புகளின் வழியே பரவுகிறது. உயிர்நிலையின் இடது கீழறையிலிருந்து பிரியும் பெரிய நரம்பு, பல கிளைகளாகப் பிரிந்து உடலெங்கும் பரவி அங்கங்குள்ள உடலணுக்களுக்கு வேண்டிய உணவுகளைச் செந்நீரினின்றும் கொடுத்து வளர்க்கிறது. செந்நீரில் எலும்பு களையும், தசைகளையும், தோலையும் வளர்க்கும் உணவுப்பொருள்கள் அமைந்திருக்கின்றன. கண்ணிலுள்ள வெள்ளை விழியையும்

கருவிழியையும் வளர்க்கக்கூடிய உணவுப் பொருள்களும் இருத்தத்திலேயே அமைந்துள்ளன. இதனைக் கொண்டுபோகும் நரம்புகளும், இதனைச் செலுத்தும் உயிர் நிலையுமே இதிலிருந்து உணவு பெற்று நிலை பெறுகின்றன என்றால் வேறு கூறுவதென் ?

இருத்தத்தை உண்டு வளர்கிற உடம்பணுக்கள் உண்ணும்போதே கெட்ட பொருளை வெளியே விடுகின்றன. அப்பொருள்கள் இருத்தத்தோடு கலக்கின்றன. அவ்வாறு கெட்ட பொருள் கரிக்காற்றாகச் செந்நீரில் கலந்து அதனுடைய செந்நிறத்தையே கரிய நிறமாக மாற்றிவிடுகிறது. இவ்வாறு நிறம் மாறிக் கெட்ட செந்நீரைக் கொண்டுபோகிறதற்கு நல்ல இருத்தத்தைக் கொண்டுவருகிற நரம்புகளை அடுத்தடுத்து வேறு நரம்புத் தொகுதிகள் அமைந்துள்ளன. இவை கெட்ட இருத்தத்தைக் கொண்டுபோய் உயிர்நிலையின் வலது மேலறையில் ஊற்றுகின்றன.

மிகவும் தடித்த தசைகளாலான இடது கீழறை செந்நீரை எல்லா இடங்களுக்கும் பரவச்செய்யும் விசையோடு கூட அதனைத் திரும்ப வலது மேலறைவரை கொண்டுவந்து சேர்க்கும் விசையுடனே செலுத்துகிறது. செந்நீரைக் கொண்டுபோகும் நரம்புகளைப் "போகும் நரம்புகள்" என்றும் உயிர் நிலைக்குக் கொண்டு வரும் நரம்புகளை "வரும் நரம்புகள்" என்றும் கூறலாம். போகும் நரம்புகளில் இருத்தம் நிரம்பியிருக்கும்போதே உயிர் நிலை மறுபடியும் மறுபடியும் இருத்தத்தைச் செலுத்துகின்றது. அதனால் இவ்வாறு செலுத்தப்படும் இருத்தத்தையும் வாங்கிக்கொள்ளுமாறு போகும் நரம்புகள் விரியும் தன்மையை உடையனவாக இருக்கின்றன. மேலும் வரும் நரம்புகளைக் காட்டிலும் போகும் நரம்புகள் தடித்த சுவர்களால் அமைந்துள்ளன. தசைகளில் அமுக்குதலால் இந் நரம்புகள் நெருங்குவன. அப்போது வந்த இருத்தம் வந்த வழியே திரும்பச் செல்லவும் கூடுமன்றோ? அவ்வாறு அது போகாதிருக்கும்படி தடை செய்ய அங்கங்கே பைகள் போன்ற தடைகள் நரம்புகளில் நெடுக இருக்கின்றன.

போகும் நரம்புகள் வெட்டப்பட்டால் இருத்தம் ஒரே மாதிரியாக வராமல் பீரிட்டு வருகின்றது. இவை முடியும் நுண்ணிய இடங்களில் ஊசிகொண்டு குத்தினால் செந்நீர் கசிந்து வருகிறது. வரும் நரம்புகள் வெட்டப்பட்டாலோ இருத்தம் ஒரே மாதிரியாக வடிகிறது. இதுகாறும் செந்நீர் எவ்வாறு உடல் முழுதும் பாவுகிறது என ஆராய்ந்தோம். இனி, அடுத்த கட்டுரையில் இது எந்நிலைமையது, இதன் கெட்ட நிலை எவ்வாறு நீங்குகிறது என்ற பொருள்களை ஆராய்வோம்.

ஆர்க்காடு.

திரு. ஔவை சு துரைசாமிப்பிள்ளை அவர்கள்,
ஆசிரியர், போர்டு உயர்தரக் கலாசாலை, காவிரிப்பாக்கம்.

ஆர்க்காடு என்பது ஒரு நகரத்தின் பெயர். இது வட ஆர்க்காட்டில் சிறந்து விளங்கும் நகரங்களுள் ஒன்று. இந்நகரம் யாவராலும் புகழப் பெறும் நகரமுமாகும். வாணிபத்துறையில் வாழ்க்கையை நடாத்துவோர், "இது ஒரு வாணிப நிலையம்" என்பர்; இயற்கை நலம் விரும்புவோர் "இது மிக்கதோர் இயற்கை வளம் சிறந்த பேரூர்" என்பர்; ஆராய்ச்சியாளர்கள் "இது கிளைவ் என்னும் ஆங்கில வீரனொருவனால் பதினெட்டாம் நூற்றாண்டின் இடையில் முகம்மதியரிடமிருந்து கைக்கொள்ளப் பட்டது" என்பர்; கலாசாலை மாணவர்கள் "சாந்தா சாகேப் என்னும் முகம்மதியர் கைவிட்ட நக"ரென்று உரையாடி மகிழ்வர்; கல்வெட்டாராய்ச்சியாளர், "படுவூர்க்கோட்டத்துக் காரை நாட்டு வன்னிவேடாகிய இராணவிக்ரமச் சதுர்வேதி மங்கலத்தைச் சார்ந்த ஒரு மூதூர்" என்பர்.

இங்ஙனம் பலராலும் புகழ்ந்து கூறப்படும் இவ்வூர், பாலி யாற்றின் தென்கரையில் உயர்ந்து பரந்த மரங்கள் நின்று குளிர் நிழலைத் தர, அவற்றின் ஊடெழுந்த உயரிய மாடங்கள் கண்ணடிச் சாளரங்களோடு அழகுசெய்ய, இடையிடையே நிலத்தில் நாட்டிய நெடுவெண் கம்பங்களென முகம்மதியர் கோயிற் கோபுரங்கள் நின்று விளங்க, கிழக்கிலுந் தெற்கிலும் பசிய நன்செய் நிலங்கள் பசுங் கம்பளம் விரித்தாற் போல் நெற் பயிரொடு திகழ, மாணவர் கலை பயிலும் கலாசாலையும், மாந்தாது வரவு செலவு இடையறுத கடைத்தெருவும், ஆரணி, கலவை, செய்யாறு, இராணிப் பேட்டை, காஞ்சிபுரம் முதலிய நகரங்கட்குச் செல்லும் பூணியில் வையங்களாகிய மோட்டார் வண்டி நிலையமும் பிறவும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது.

இங்ஙனம் சீரும் செல்வமும் செழிக்கும் இந்நகரம் புதியராய் வருவார்க்குத் தான் மிகமிகப் பழமை பெற்ற நகரம் என்பதைப் பலவகையிலும் உணர்த்துகின்றது. ஒருமருங்கு தளர்ந்து இடிந்து கிடக்கும் கட்டிடங்களும், ஒரு பக்கம் பல சில எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கற்பாரைகளின் துண்டங்களும், கால வேறுபாட்டால் ஒருகாலத்து ஒரு சமயத்தார்க்கு உரியவாய் நின்றன வேறு சமயத்தார்க்கு உரிமையாக்கப் பெற்று நிற்கும் சிறு சிறு கோயில்களும், நிலைதளர்ந்து நிலம்பட்டு உருமாறிய அரண்களும், அகழ்களும் இந்நகரத்து எம்மருங்குங் காணப்படு கின்றன. சுருங்கக் கூறின், இந்நகரம் பழமையும் புதுமையும் ஒருங்குகொண்டு "ஆற்றங்கரையூர் அழகியவூர்" என்னும் முதுமொழிக்கு எற்ற எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இம்மட்டோ, இது செழுந்தமிழ்ப் புலவர் பெருமக்களாகிய தேவனார் நக்கண்ணையார், பரணர் முதலிய சான்றோர்களால், முறையே, "படுமணியானைப் பசும்பூட் சோழர், கொடி நுடங்குமறுகின் ஆர்க்காடு" எனவும், "வெல்போற்ச் சோழர் அழிசியம் பெருங் காடு" எனவும், "அரியரி யலம்புக விளங்கோட்டு வேட்டை நிரைய வொள்வாள் இளையர் பெருமகன், அழிசி ஆர்க்காடு" எனவும் "வண்டு மூசு நெய்தல் நெல்லிடை மலரும், அரியலங் கழனி ஆர்க்காடு" எனவும் புகழ்ந்து கூறப்படுகின்றது.

நிற்க, நம் நாட்டின் பழமைநிலை யுணர்த்தும் கருவிகளாக விளங்குவன புராண இதிகாசங்களும் சிலாசாசனங்களும் இலக்கியங்களும், தேச சரித்திரங்களும், கர்ண பரம்பரைச் செய்திகளும் பிறவுமாம். இவற்றுள் எளிதிற் பெறப்படுவது இறுதியிற் கூறப்படுவதேயாகும். இது பெரும்பாலும் புனைந்துரையாகவும், உண்மை சிறிதுடையதாகவும் உளது என்பர். தேச சரித்திரம் எழுதிய அறிஞர் பலரும், இச் செய்தியையே அடிப்படையாகக் கொண்டு எழுதுகின்றனர். இவ்வாறே, இந்நகர வரலாறு காணப் புகுவோர், இச்செய்தியையும் வேண்டுதலின் அதனையும் ஈண்டுக் கூறுகின்றேன். "இது முற்காலத்துப் பெருங்காடாக இருந்தது; இதன்கண் ஆறுபிரிவுகள் இருந்தன; ஒவ்வொன்றினும் ஒவ்வொருவராக ஆறு முனிவரர்கள் தவஞ் செய்தனர்; அவர் தவம் செய்த இடங்களுள் இவ்வூருக்கு மேற்கில் ஒருமைல் தூரத்திலிருக்கும் வேப்பூர் என்பது ஒன்று; அங்கு வசிட்ட முனிவர் தவஞ் செய்தனர்; இங்ஙனம் ஆறு முனிவர்கள் தவம் செய்த ஆறுகாடுகள் கொண்டதாகலின், இதற்கு 'ஆறுகாடு' அதாவது 'ஷடாரண்யம்' என்பது பெயராயிற்று" என்பது.

இதனோடு வேறொரு செய்தியும் கூறப்படுகின்றது; ஆனால், பெரும்பாலார் மேற்கூறியதையே கூறுகின்றனர். அதுவருமாறு:- "மாளவ தேசத்தை ஆண்டுவந்த சுகபாலன் என்னும் வேந்தன் தன்மனைவி தேவவனிதை யென்பாளோடு மகிழ்ந்திருக்கையில், முனிவரர் அறுவர் அவனிடம் வந்தனர். அதுபோது, அவன் தன் மனைவி யிசைத்த இசையில் மயங்கியிருந்தமையின், வந்த முனிவரரை மதியானாயினன். மற்று, முனிவர்களோ ஆரு வெகுளியராய் அரசனை நோக்கி, "ஏ, அரசே, நீ எம்மை மதியாத காரணத்தால், நின்மக்கள் அறுவரையுமிழந்து கண்ணிலியாய் அலமருவாயாக" எனக் கடுமொழி கூறினர். பின்னர், அரசன் தன் அறியாமைக்கு மிக வருந்தி, முனிவரரடியில் பன்முறை வீழ்ந்து, அதற்குத் தீர்வு கூறுமாறு வேண்டினன். முனிவரரும், வெகுளி நீங்கி, "நீ, சிலகாலம் கண்ணிலியாயுழந்து, முடிவில் தொண்டைநாடடைந்து அங்குப் பாலியாற்றின் கரையில் விளங்கும் பெருங் காட்டில் எம்மைக் காணுதல்கூடும். அதுபோது

யாம் கங்காதரனை வேண்டி நிற்போம். எம் வேண்டுகோள் நின் செவிப்படின், நீ கண்பெற்று, நின் மக்களையும் பெறுவாய்" என்றுகூறி யகன்றனர். அம் மன்னனும் அவ்வண்ணமே அம் முனிவரர் அறுவரையும் கண்டு தன் கண்ணையும், மக்களையும் பெற்றனன். அம்மகிழ்ச்சியால் அவ்விடத்துக்கு ஆறுகாடு என்ற பெயரும், அம்முனிவரர் வணங்கிய சிவனுக்குக் "கங்காதரேச்சுரர்" என்ற பெயரும் இட்டு, அவரது ஆலயத்தையும் வழிபட்டுச் சென்றனன்." என்பது.

இச்செய்தி யிரண்டும் முதியோர் பலரால் கூறப்படுகின்றனவேயன்றி, புராணங்களில் கூறப்படுவனவாய்த் தோன்றவில்லை. இங்குள்ள தமிழறிஞர்கள் "இச் செய்திகளை மட்டில் கூறுகின்றனரேயன்றி, இவற்றிற்கு ஆதாரம், பெயரைத்தவிர வேறு ஒன்றுமில்லை" என்கின்றனர். வேறு, எங்கேனும் இது கூறப்பட்டிருப்பினும் இருக்கும் என்னும் அவாவினால் எனக்குக் கிடைத்த புராணங்களை நோக்கியும், ஒன்றிலேனும் கூறப்பட்டிலது. ஒருகால், என் நண்பர், தமிழறிஞர் ஒருவரோடு, இந்நகர்க்கு வடக்கில் பாலாற்றின் வடகரையிலிருக்கும் "நவ்லக்" என்னும் சீரிய உயரிய பூங்காவைக் காண்டல் வேட்கைகொண்டு, கூர்ந்து நோக்கி வருங்கால், முட்களாலும் மாவேர்களாலும் மூடப்பட்டுக் கிடந்த மிகப் பழங்கோயில் ஒன்று சில எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கற்சுவரோடு விளங்கக்கண்டேன். அதன் கோபுரம் மட்டில் வெளியில் தெரிகின்றது. பிறபாகம் முற்றும் மணலிற் புதையுண்டு கிடக்கின்றது. எனினும், அதன் வேலைப்பாட்டை நோக்க, அது பல்லவ மன்னரது காலத்து எடுத்த கோயில்களை யொத்து, சைனருக்கு உரியதாய் நின்ற கோயிலாகத் தோன்றுகிறது. கோபுரத்தில் செதுக்கப்பட்டிருக்கும் சில வுருக்கள் சைனர் உருக்களே. மற்று, அதனருகில் நந்தியும், அருகில் கணபதி யுருவமொன்றும் காணப்படுகின்றன. சிதர்ந்து காணப்படும் கல்வெட்டு, இராசேந்திர தேவர் கல்வெட்டு. இக்கோயிலின் சுவரும் பிறவும் புதையுண்டு கிடத்தலால், அக் கல்வெட்டினைத் துருவிக்காண்டற்கு இயலவில்லை. எனினும், அக்கோயி லுண்மையும், அருகே நிலைதளர்ந்தும்,

பிலம்பட்டுங் கிடக்கும் கட்டிடங்களி னுண்மையும், ஈண்டுப் பண்டைக்கண் ஒரு செழுமிய நகரம் இருந்திருத்தல் வேண்டும் என்பதை வற்புறுத்துகின்றனர்.

நிற்க, இங்ஙனம், தொன்மைக் குறிகள் செறியத் தோன்றும் இந்நகரத்தின் சிறப்பு, எந்நூலிலாகிலும் அகத்தியம் காணப்படும் என்னும் எண்ணத்தனாய், ஆராய்ச்சி நூல்களுட் சில, கிடைத்தன படித்துக்கொண்டு வருபவன், ஒரு நாள் ஒரு ஆங்கில நூலின் கண் இந்த ஆர்க்காட்டின் சரித்திரக் குறிப்பு எழுதியிருக்கக் கண்டேன். அந்நூலாசிரியர் ஓர் ஆங்கிலர் ; சிறந்த ஆராய்ச்சி யாளர். அதன்கண், அவர் "ஆறுகாடு என்பது ஆறுகாடுகள் கொண்டது ; இதனை இந்துக்கள் ஒரு பழமையான நகரமாகக் கருதுவதோடு, இங்கே ஆறு முனிவர்கள் தவஞ்செய்தார்கள்" என்றும், 'அதனால்தான் இதற்கு ஆறுகாடு என்பது பெயராயிற்று' என்றும், மற்று "இது புராணங்களிற் கூறப்படவில்லை" யென்றும் கூறியிருக்கின்றார். இவர் கூற்றுப்படி, இது புராணங்களிற் கூறப்படாத செய்தியாம் என்பது பெறப்படுகின்றது. படவே, இந்நகரம் முற்காலத்தில் பெருங்காடாக விருந்ததென்பதும், பிற்காலத்தேதான் தோன்றிற்றுதல் வேண்டும் என்பதும் பெறப் படுகின்றன.

நிற்க, வேறு சரித்திர நூல்கள், கிறித்து பிறந்த பல நூற்றாண்டுகட்குப் பின்னும் கிழக்குத் தொடர்ச்சி மலைக்கும் சென்னைக்கும் இடைப்பட்ட நிலப்பகுதி முற்றும் பெருங் காடு பரந்த நிலப்பரப்பாக விருப்ப, இங்குக் குறும்பர் என்னும் ஒரு வகை ஆட்டிடையர் வாழ்ந்து வந்தனரென்று கூறுகின்றன. இவற்றை யாதாரமாகக் கொண்டே ஜெனரல் கன்னிங்ஹாம் "இந்நகரம் மிகமிக இடைப்பட்ட காலத்தே தோன்றியிருத்தல் வேண்டும் ; இதனைத் தொன்னகரமாகக் கோடல் பொருந்தாது" என்று கூறுகின்றார். துளுவ மொழியைப்பற்றி யெழுதவந்த திரு. கால்டுவெல் என்பவர், "சென்னையைச் சூழ்ந்த நிலப்பகுதி யாகிய இங்கு வாழ்ந்துவந்த குறும்பர்களுட் பலர் வேறு நாடு கட்குத் துரத்தப்பட, துளுவமொழி பேசும் வேளாளர் பலர்

467.

இவ்வூர்க் கொணரப்பெற்றுக் குடியேறினர் என்றும், இதற்குத் துளுவவேளாளர் மிக்கிருத்தலே சான்று என்றும் "மிராசுரிமை" என்னும் நூலின்கண், எல்லிஸ் என்பவர் கூறியிருப்பதாகக் குறிக்கின்றார். இதனால், இந் நகரம் பிற்காலத்தேதான் தோன்றி யிருத்தல் வேண்டுமென்பது வெளிப்படுகின்றது.

இஃதிவ்வாறாக, கர்னல் யூல் என்பவர், "இந்நகரம் இபன்பட்டூடா என்பவரால் ஒரு சீரிய நகரமாகப் புகழப்படுவதனாலும், அவர் காலமும் கி. பி. 1340-க்கு மேற்படுதலாலும், சற்றேறக் குறைய எழுநூறு ஆண்டுகளாகச் சிறந்து விளங்கும் நகரமாதல் வேண்டும்" என்று கூறுகின்றார்.

நிற்க, நம் தமிழ்நாட்டுச் சரித நிகழ்ச்சிகளை யாராயப் புகுபவர்க்கு ஊக்கந் தருவனவாகவும், நிலையறியாது மயங்குங் காலத்து ஒருசில குறிப்புக்களாய விளக்கங்களைத் தருவனவாகவும் அமைந்த குறிப்புக்கள் சில, மேனாட்டறிஞர்கள் பொறித்தன கிடைக்கின்றன. அவர்களுட் பெரிப்ளஸ் என்னும் நூலாசிரியரும், தாலமி யென்பவரும் பிளினி யென்பரும் எழுதி யுள்ள குறிப்புக்கள் நம் நாட்டின் தொல்லைச் சிறப்புணர்தற்குப் பயன்படுகின்றன. இவர்களுட் பிளினி யென்பவர், நம் நாட்டுக்குச் சீனதேயத்தினின்று வந்த அறிஞர்களிருவருள் ஒருவரான மெகஸ்தனிஸ் காலத்தைச் சிறிது அடுத்த காலத்தினராவர். மற்றையோர் காலமும் 1800 ஆண்டுகட்கு முற் படுகின்றன என ஆராய்ச்சி வல்லோர் கூறுகின்றனர். இப் பண்டையறிஞர்கள் நம் நாட்டுக்கு வந்திருந்த காலத்துத் தாம் கண்டனவும் கேட்டனவுமாய சில குறிப்புக்களே குறித்திருக் கின்றார்கள். இவர்களுள், தாலமி யென்பவரது குறிப்புக்களுள் "ஆர்க்காடு" என்னும் இவ்வூர் காணப்பெறுகிறது. பெறுதலால், இந்நகரம், கர்னல் யூல் அவர்களின் காலவரையறையைக் கடந்து மேலும் ஆயிரம் யாண்டுகட்கு முன்னாதல் வெளிப்படுகின்றது. டடவே, இந்நகரம் சற்றேறக்குறைய இரண்டாயிரம் யாண்டுகட்கு முன்னரே, உறையூர் முதலிய தலைநகரங்கள் விளங்கிய காலத்தே, சீரியநிலை யடைந்திருந்தது என்பது புலப்படுகின்றது. இதற்குச்

சான்று, தென்னாட்டின் நகரங்களாக மதுரை, உறையூர், கொற்கை முதலியவற்றோடு ஒப்ப, வேங்கடத்தைச் சார்ந்த இந்நாட்டின் நகரமாக இதனைக் குறித்திருப்பதனாலும், இது சோழமன்னரது தலைநகரமெனக் குறிப்பதனாலும் விளங்குவதாகும். மேலும், அக்குறிப்பை நோக்குமிடத்து, அவர் இந்நகரை நேரிற் காணாது பிறர் விதந்துகூறக் கேட்டுக் குறித்தவராகத் தோன்றுகிறார். அவர் குறிப்பின் பொருள் சோழர் என்னும் நகரத்தில் ஆர்க்காடு என்னும் அரசன் அரசுபுரிகின்றான் என்பது. இது கேள்வி மாத்திரையால் நேர்ந்த குறை. இதனாலும் இந்நகரம் பண்டைக் காலத்தே மிக்க புகழ் பெற்றிருந்த தென்பதும், அதனால், யவன வாசிரியர்கள் இதனையும் தம் குறிப்பிற் குறித்தார் என்பதும், இது சோழமன்னரது ஆட்சியில், அவர்தம் தலைநகரமாகவும் இருந்ததென்பதும் தோன்றுகின்றன.

இங்ஙனம், இது சோழமன்னரது சீரிய நகரமாக விளங்கிற்று என்பதை நற்றிணை, குறுந்தொகை முதலிய தொகை நூல்களும் உணர்த்துகின்றன.

> "உள்ளூர் மாஅத்த முள்ளெயிற்று வாவல்
> ஓங்க லஞ்சினைத் தூங்குதுயில் பொழுதின்
> வெல்போர்ச் சோழர் அழிசியம் பெருங்காட்டு
> நெல்லியம் புளிச்சுவைக் கனவி யாஅங்கு
> அது கழிந்தன்றே தோழி அவர்நாட்டுப்
> பனியரும் புடைந்த பெருந்தாட் புன்னை
> துறைமேய் இப்பி ஈர்ம்புறத் துறைக்கும்
> சிறுகுடிப் பாதவர் மகிழ்ச்சியும்
> பெருந்தண் கானலும் நினைந்தவப் பகலே." (நற். 87.)

ஒருதலைவி, தலைவன் வரைவிடைவைத்துப் பிரிந்த காலத்து, ஆற்றாளாய், அவனது நாட்டின் நலத்தையும் கூட்டத்தையும் நினைத்துக் கனவுகண்டு விழித்து வருந்திக் கூறுவது இச்செய்யுள்.

இதனுள், தலைவி, தலைவனாட்டுச் சிறுகுடிப்பாதவர் மகிழ்ச்சி, கானல் ஆகிய இரண்டனோடு அவனது கூட்டத்தையும் தான் நினைந்து கனவு காண்டற்கு வெளவாலொன்று கனவு கண்டதை

(1) 469. 1

யுவ்மிக்கின்றாள். அது ஊருள்ளிருக்கும் ஒரு மாமரத்திலிருக்கும் வௌவால் உயர்ந்தவொருகிளையிற் சென்று பற்றித் தூங்கித் துயில்கின்ற காலத்துப் பெருங்காடாகிய ஆர்க்காட்டிற் சிறந்துவிளங்கும் நெல்லியம் புளிச்சுவையை (நெல்லிப்பழத்தின் இனிய புளிச்சுவையை) நினைத்துக் கனவு கண்டது; அவ் வார்க்காடு வெல்லும் போரையுடைய சோழர் குடியிற் பிறந்த அழிசி யென்னும் சோழர் பெருமகற்கு உரியது என்பது. புன்னையந்தாது படிந்த புறத்தையுடையவாய இப்பிகள் செறிந்த கடற்கரையிலுள்ள சிறுகுடிப் பரதவர் மகிழும் மகிழ்ச்சியும், பெருமையும் தட்பமும் சிறக்கும் கானற் சோலையும் தனக்கு மகிழ்ச்சியைத் தந்து அதுவே பற்றுக்கோடாக உள்ளத்தே தலைவனது முயக்க மகிழ்ச்சியையும் நினைவு கூறச் செய்தன. இது பகற்கண் நிகழ்ந்தது. பின்னர், யான் கண்ணயர்ந்தக்கால், கனவாய் நிகழ்ந்து, விழித்தவுடன் அது கழிந்தது என்பது இச் செய்யுளின் பொருள்.

இனி இதன்கண், தலைவி மனைக்கண் உறைகின்றவள் பிரிந்த தலைவன் காரணமாக நிகழ்ந்தனவற்றை நினைப்பாள், கனவின்கண், அவனுறையும் சிறுகுடியின் மகிழ்ச்சியும், அவனைத் தலைக்கூடியசோலையும், கூட்டமும் கண்டதற்கு நேராக, வௌவால் ஆர்க்காட்டு நெல்லிப் பழத்தின் புளிச்சுவையை யொப்பிடுதல் ஆர்க்காட்டின் பெருமையும், அதனையுடையானாய அழிசியின் பெருமையும் புலப்படுத்தும் நேர்மை மிக்க இன்பந் தருகிறது. மேலும், இச் செய்யுள் செய்த நக்கண்ணையார், ஆர்க்காடு அழிசிக்கு உரியது என்பதனோடு அமையாது, நெல்லிப்பழத்திற் சிறந்தது என்றல் மிக்க நயமாகவே தோன்றுகின்றது. இவர், வௌவால் முன்போலும் கூரிய எயிற்றினையுடையதென நுணுகி நோக்கிக் கூறும் சதுரப்பாடு "வௌவாலால் விரும்பி யுண்ணப்படுவது நெல்லிக் கனி" என்னும் உண்மையை யுணர்த்துவதோடு இங்கு நெல்லி மரங்கள் இன்றும் மிக்கிருத்தலை வலிசெய்கின்றது.

நிற்க, இவ்வார்க்காட்டின் சிறப்பையே விதந்து கூறும் பாட்டு மற்றொன்று நற்றிணையிற் காணப்பெறுகின்றது. அதன் ஆசிரியர் பெயர் தெரிந்திலது. அது, இந்நகரின் வளப்பத்தையும் அழிசியின் வரலாற்றையும் உணர்த்துகின்றது. அது.

"நோயினி வாழிய நெஞ்சே! மேவார்
ஆரரண் கடந்த மாரிவண் கைத்
திதலை யெஃகின் சேந்தன் தந்தை
தேங்கமழ் விரிதார் இயல்தேர் அழிசி
வண்டு மூசு நெய்தல் நெல்லிடைமலரும்
அரியலங் கழனி ஆர்க்கா டன்ன
காமர் பணைத்தோள் நலம்வீ றெய்திய
வலைமான் மழைக்கண் குறுமகள்
சின்மொழித் துவர்வாய் நகைக்கு மகிழ்ந்தோயே"

என்பது. இது, ஒரு தலைவன், தன் தலைவியைப் பிரிந்து வினையேற் செல்லுகின்றவன், ஒரு சுரத்தின்கண் அவளை நினைந்தானாக அவன் நெஞ்சம் மீண்டு வரக்கருத, அந்நெஞ்சிற்கு, "நகைநோக்கி மகிழ்ந்தோய்! அம் மகிழ்ச்சி பின்பு கிடைக்கப் பெறுயாய்த் துன்புறுவாய். அத் துன்பத்தோடு நெடிது வாழ்வாயாக" என்று கூறும் கருத்தமைந்தது. இதன்கண் தலைவன், தலைவியின் நலத்தை, "காமர்பணைத் தோள்நலம்" என்றும், "வீறெய்திய வலைமான் மழைக்கண்" என்றும், "குறுமகள்" என்றும் புகழ்ந்து தன் நெஞ்சம் உற்ற மகிழ்ச்சிக்குக் காரணமாய நகை தோன்றிய வாயைச் "சின்மொழித் துவர்வாய்" என்றும் கூறும் சொற்றொடர்கள் அவன் அவண்மாட்டுக் கொண்ட காதலின் திறத்தைப் புலப்படுத்துகின்றன அன்றியும். அத்தோள் கண், இளமை முதலியனவும், நகையும், அவன் நினைவுற்றகாலத்து நெஞ்சின்கட் டோன்றி விருப்பந்தந்தன வாதலால் அவைகூறற்கும் உள்ளுதற்கும் இயைபுடையனவே யாம். என்னை அறிதோரறியாமை கண்டதுபோல் செறிதோறம் புத்தின்பம் பயந்து அவனுயிர் தளிர்ப்பச்செய்த முயக்கவின்பமே, அவன் களவினும் கற்பினும் முயன்று பெற்ற பொருளாகும். அப்பொருட்குக் காரணந் தோளாதலால் அதுகூறல் இயைபுடைத் தாயிற்று. களவினுள், தான் அவளைக் கண்டவிடத்து, தனக்கு நோயும் மருந்துமாய்க் குறிப்பறிவித்துக் காதல் செய்து பிணித்த

பெருமையுடைமையால் கண்ணைக்கூறி, முதற்கண், ஆயமும் தோழியுமின்றித் தனித்து நின்ற நிலைமைக்கண் தான் அவளைக் கண்டவிடத்து, அவள் நோக்கிய மருண்ட நோக்கம் மறவாது நிற்றலால், அதனை "வலைமான் மழைக்கண்" எனவும்கூறி இவை யிரண்டற்கும் நிலைக்களனாய இளமையைக் கூறி யின்புறுதலும், காதற் குறிப்பையுணர்த்திய குறுநகையை இறுதிக்கட்கூறி யின்புறுதலும் தகுவனவேயாம். இங்ஙனம், முறையிற் பிறழாது நினைப்பின் மகிழ்ச்சிதரும் சிறப்புமிக்க தன்தலைவி நலத்துக்கு ஆர்க்காட்டினை ஒப்பிடுகின்றான். அதுவும், அங்ஙனமே தன் வளத்தாலும் இயற்கை நலத்தாலும் நினைத்தொறும் இன்பம் பயக்கும் நீர்மையுடையது என்பது கருத்து.

ஆர்க்காட்டின் நெல்வயல் வளத்தினை யான் முதற்கட் கூறியிருக்கின்றேன். இச் செய்யுளின்கண், ஆர்க்காடு அழகிய நெல் வயல் சூழ்ந்தது என்றும், அவ்வயல்களில் நெல் சிறப்புற்று விளையுங்கால், இடையில் நெய்தல் தோன்றி மலரும் எனவும், அம் மலர்களின் தேன் அவ்வயலில் வடிய வண்டுகள் சூழ்வந்து மூசும் என்றும், ஆசிரியர் கூறுகின்றார். இதனால், இவ்வூர், நெல்வளம் மிக்கதென்பது வெள்ளிடை மலையாம். இந்நகர்க்கு உரியவன் அழிசி யென்னும் சோழர் பெருமகன்; இவன் தேன்கமழ்மாலை யணிந்து தேர்பலகொண்டு சிறப்புற்று விளங்குபவன்; இவன் மகன் பெயர் சேந்தன் என்பது.

இச் சேந்தன் பகைவரது புகுதற்கரிய அரண்கடந்து வென்றுகொண்ட வெற்றியும், மழைபோல் அளிக்கும் வள்ளன்மையும் திதலை (புள்ளி) பரந்த வேற்படையும்கொண்ட திறலினன் என்றதனால், இந்நகரம் வளத்தாலும் செல்வத்தாலும் வயங்கலெய்தியதோடு வண்மையும், வாண்மையும் பெருமையும் சான்ற சோழர் பெருமக்கள் ஆட்சியும் பெற்றிருந்ததென்பது விளங்குகின்றது.

இனிக் குறுந்தொகையில், பரணர் என்னும் நல்லிசைப்புலவர் பெருமகனார் இந் நகரைச் சிறப்பித்துப் பாடுகின்றார். அது,

"வாரல் எம்சேரி, தாரல் நின்தாரே
அலர் ஆகின்றால் பெரும, காவிரிப்
பலராடு பெருந்துறை மருதொடு பிணித்த
ஏந்து கோட்டுயானைச் சேந்தன் உறந்தை
அரியரி யலம்புக இளங்கோட்டு வேட்டை
நிரைய வொள்வாள் இளையர் பெருமகன்
அழிசி ஆர்க்காடு அன்ன இவள்
பழிதீர் மாண்நலம் தொழுதன கண்டே"

என்பது. இது தலைவன் புறத்தொழுக்கம் பூண்டு ஒழுகுபவன் வாயில் வேண்டியகாலை, தோழி மறுத்துக் கூறுதலைப் பொருளாக வுடையது. இதன் பொருள்: ஐயனே, உறந்தையும் ஆர்க்காடும் போன்ற இவளது மாணலம் நும்மைநோக்கி எம்மைச் சிதைத்தல் வேண்டா எனத் தொழுதன. கண்ட நீர், இனி, எம் சேரிக்கண் வாரற்க. நும் தாரினையும் தாரற்க. ஊரெங்கும் அலராகின்றது என்பது. இதன்கட் கூறப்பெறும் உறந்தையே உறையூர். இது சேந்தன் என்பானுக்கு உரியது; இவன் காவிரிப் பெருந் துறைக்கண் மருதத்தோடு கட்டப்பெற்ற உயர்ந்த கோடுகளை யுடைய பல யானைகளையுடையவன். பெருந்துறை பலர் நீராடும் துறையாகும். ஆர்க்காடு அழிசிக்கு உரியது. இவன்கீழ்ப் பல வாளேந்திய இளையர் (வீரர்) இருந்தனர். அவரது வாள் வருத்துவதில் நிரயத்தையே நிகர்க்குந் தகைத்து. இவர்கள் யானை வேட்டம் செய்வதில் விருப்பமுடையவர்கள். இப்பாட்டின் கண் உறையூரையும் ஆர்க்காட்டையும் ஒப்பவைத்துக் கூறப் பெற்றிருப்பதனால், ஆர்க்காட்டின் பெருமை இனிது விளங்கிற்றும். உறையூரோ, சோணாட்டில் மிகப்பல காலங் களாகச் சிறந்து விளங்கும் நகரங்களுட் டலைசிறந்த காவிரிப்பூம் பட்டினம், உறையூர் என்னும் இரண்டனுள் ஒன்றாகும். காவிரிப்பூம் பட்டினத்திலும் உறையூர் பழமை மிகுந்தது.

"ஊரெனப்படுவது உறையூர்" என வரும் பாவை வழக்கொன்றே அதன் பெருமை யுரைத்தற்குச் சாலுவதாம். ஆகவே, ஆர்க்காடும் அக்காலத்தே மிக்க உயர்ந்த நிலையிலிருந்தமை புலனாகும். பாணரது சொற்போக்கிலிருந்து நுனித்து நோக்குமிடத்து, சோணாட்டின் தென்மூலைக்கு உறையூரேபோல் வடமூலைக்கு இந்நகரமைந்துளது என்பது தோன்றுகிறது.

இதுகாறுங் கூறியவாற்றால், ஆர்க்காடு என்னும் சீரிய நகரம், இன்றேபோல் பண்டும், ஆயிரத்தெண்ணூறு யாண்டுகட்கு முன்னும் சிறப்புற்றிருந்ததென்பதும், இதன்கண் அழிசி யென்னும் சோழன் அரசுபுரிந்தான் என்பதும், அவன் யானை வேட்டம் வல்ல வீரர்கள் பலரையும், மிகப்பல தேர்களையும் உடையனாய்ப் புலவர்பாடும் புகழுடையனாய் விளங்கினன் என்பதும், அவனுக்குச் சேந்தன் என்னும் மகன் ஒருவன் இருந்தனன் என்பதும், அம்மகன் வீரமும், கொடையும் விளங்க உறையூரில் இருந்து வந்தனன் என்பதும், பிறவும் விளங்குகின்றன.*

இத்துணைக்கூறிப் போந்ததால், ஆர்க்காடு என்னும் இந்நகரம் சற்றேறக்குறைய ஆயிரத்தெண்ணூறு யாண்டுகட்கு முன்னரே விளங்கிய நகரமாதல் வேண்டும் என்பதும், பின்னர் அழிசி போலும் சிறப்புடைய மன்னரில்லாமையினால் அந்நகரம் அத்துணைச் சிறப்புடையதின்றி யிருப்ப, யவனவாசிரியர்கள் காலத்து அவரால் குறிக்கப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதும், பின்னர், உறையூரேபோல் சீர் குன்றிக்கொண்டே வந்த செய்தியால் பெடேட்டா முதலிய ஆசிரியர்களால் சிறிதே குறிக்கப் பெறலாயிற்றென்பதும், பின்னரே முகம்மதியர்க்குரியதாய் இற்றைநிலையடைந்திருத்தல் வேண்டும் என்பதும் பெறப்பட்டன.

---

* "மருதப்பெருந்துறை" யென்பது வையை யாற்றிலும் இருத்தலால், "சேந்தன் என்பான் பாண்டியன்மேற் படையெடுத்து அவன் பெருந்துறையில் தந்தி பிணித்திட்ட வரலாறும் உண்டுபோலும்" என ஐயுறுவர் சில ஆசிரியர்.

இனி, இந்நகரைப்பற்றிய கர்ண பரம்பரைச் செய்திக்குத் தக்க சான்று கிடைக்காமையாலும், வேறு எந்நூலினும் இதன் சார்பாக ஒரு குறிப்பேனும் கிடைத்திலாமையினாலும் கொள்ளற் பாலதாயிற்றன்று. பரணரால் இதனோடு இயைத்துக் கூறப்படும் உறையூர்க்கு இயைபுபட்ட கதையொன்று உண்டு அது ஒரு காலத்துக் கோழியொன்று ஓர் யானையோடு பொருது வென்றது என்றும், அவ்வென்றவிடம் உறையூரேயாதலின், உறையூர்க்குக் கோழியென்பதும் பெயராம் என்றும் வழங்குவது. இச்செய்தி; "முறஞ்செவி வாரணம் முன்சம முருக்கிய—புறஞ் சிறை வாரணம் புக்கனர் புரிந்தென்" எனச் சிலப்பதிகாரத்தும் கூறப் பெற்றுளது. அப்பெற்றிப்பட்டதோர் செய்தியாயின் அறுவர் தவஞ் செய்த செய்தியையாதல், மன்னவன் கண் பெற்றதை யாதல் பரணர், நக்கண்ணையார் முதலிய சான்றோர் குறியாது செல்லார். அங்ஙனம் குறிக்காது சென்றமையால் அது பின் வந்தோர் புனைந்து விட்டதேயாம். அன்றி, ஆர்க்காடு என்ற சொல்லினைப் பிழைபடவுணர்ந்தோர் ஆறுகாடு எனக்கொண்டு, இச்செய்தியைப் புனைந்து கொண்டனாதல் வேண்டும் எனச் சில அறிஞர் கருதுகின்றனர்.

உலாக் கொண்ட மூன்று சோழ மன்னர்கள்

திருவாளர், T. V. சதாசிவப் பண்டாரத்தாரவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

காளப்புலவர் எனவும் கௌடப்புலவர் எனவும் பாராட்டப் படும் கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தரால் பாடப்பெற்ற உலாக்கொண்ட சோழமன்னர்கள் விக்கிரமசோழன், இரண்டாங் குலோத்துங்க சோழன், இரண்டாம் இராசராச சோழன் ஆகிய மூவருமே யாவர். இவ்வுண்மையை,

'கூடிய சீர்தந்த வென்றெடுத்த கூத்தனுலாச்
சூடிய விக்கிரம சோழனும்—பாடிய
வெள்ளைக்கலியுலா மாலையொடு மீண்டுமவன்
பிள்ளைத் தமிழ்மாலை பெற்றானும்—தெள்ளித்தன்
முன்னு யகரினவன் மூதுலாக் கண்ணிதொறும்
பொன்னுயிரஞ் சொரிந்த பூபதியும்' என்னும் சங்கர

சோழன் உலாவடிகளால் நன்குணரலாம். இனி, இம் மூவேந்தர்து வாலாற்றையும் அடியில் வரைவாம்.

விக்கிரமசோழன் கி. பி. 1120—கி. பி. 1136. இம் மன்னன் கி. பி. 1070 முதல் 1120 வரை நம் தமிழகத்தில் சக்கரவர்த்தியாக வீற்றிருந்து தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றிச் செங்கோல் செலுத்தியவனும் சுங்கந்தவிர்த்த சோழன் என்று அறிஞர்களால் புகழப்படுபவனுமாகிய முதற் குலோத்துங்க சோழனது மகன் ஆவன். நமது விக்கிரம சோழன் அரசிளங் குமானுக விருக்கும் நாட்களில் தன் தந்தையைப்பெற்ற பாட்டனும் தன் தமையனூற் ஆட்சி புரிந்த வேங்கை நாட்டிற்குச் சென்று அங்கு அரசப் பிரதிநிதியாகவிருந்து அதனை ஆண்டு வந்தனன். வேங்கை நாடு என்பது கிருட்டிணை கோதாவிரிஎன்ற இரண்டு பேராறுகளுக்கும்

இடையில் கீழ்க்கடலைச் சார்ந்திருந்த ஒரு நாடாகும். இந்நாட்டில் விக்கிரமன் அரசப்பிரதிநிதியாக விருக்கும் நாட்களில் இவன் கி. பி. 1096-ஆம் ஆண்டில் தென்கலிங்க நாட்டின்மேற் படையெடுத்துச் சென்று அந்நாட்டின் அரசனாகிய தெலுங்க வீமனைப் போரிற் புறங்கண்டு வாகைமாலை சூடித் திரும்பினன். இவன், இங்ஙனம் கலிங்கம் வென்ற செய்தி,

'தெலுங்க வீமன் விலங்கன்மிசை யேறவும்
கலிங்க பூமியைக் கனலெரி பருகவும்
ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கி
வேங்கை மண்டலத் தாங்கினி திருந்து
வடதிசை யடிப்படுத் தருளி' என்னும் இவனது மெய்க்கீர்த்தியிலும் நன்கு விளக்கப்பட்டுள்ளது. அன்றியும் நம் விக்கிரமனது தென்கலிங்க வெற்றி,

—'போர்த் தொழிலால்
ஏனைக்கலிங்கங்கள் ஏழினையும் போய்க் கொண்ட
தானைத் தியாக சமுத்திரமே' என்று விக்கிரம சோழன் உலாவிலும்

—'வேற்றோர்
விரும்பாணில் வெங்களத்தீ வேட்டுக் கலிங்கம்
பெரும்பரணி கொண்ட பெருமாள்' என்று குலோத்துங்க சோழன் உலாவிலும்

—'பலவுந்
தரணி யொருகவிகை தங்கக் கலிங்கப்
பரணி புனைந்த பருதி—முரணி
புரந்தா னேமி பொருவ வகில
துரந்தான் விக்கிரம சோழன்' என்று இராசராசசோழன் உலாவிலும்

'செருத்தந் திரிந்து கலிங்க ரோடத்
தென்றமிழ்த் தெய்வப் பரணி கொண்டு
வருத்தந் தணிந்துல காண்ட பிரானன்
மைந்தற்கு மைந்தனை வாழ்த்தினவே' என்று தக்கயாகப் பரணியிலும் புலவர் பெருமானாகிய ஒட்டக் கூத்தரால்

பெரிதும் புகழ்ப்பெற்றுள்ளது. இனி, இக்கலிங்க வெற்றியைப் பாராட்டி விக்கிரம சோழன் மீது கலிங்கப் பரணி யொன்றும் இவனது அவைக்களப் புலவராகிய ஒட்டக்கூத்தரால் அந்நாளில் பாடப்பட்டுள்ளது என்பது மகாமகோபாத்தியாய ஐயர் அவர்களால் சிறந்த ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் அண்மையில் வெளியிடப்பெற்ற தக்க யாகப் பரணி யென்னும் நூலால் நன்கறியப் படுகின்றது. இக்கலிங்கப் பரணியும் முதற் குலோத்துங்க சோழன் மீது சயங் கொண்டாரால் பாடப்பட்ட கலிங்கத்துப் பரணியும் வேறு வேறு நூல்களாதல் உணர்க.

வேங்கை நாட்டில் ஆட்சிபுரிந்துகொண்டிருந்த விக்கிரம சோழனை கி. பி. 1108-ஆம் ஆண்டில் சோழமண்டலத்திற்கு அழைப்பித்து முதற் குலோத்துங்க சோழன் அவனுக்கு இளவரசுப் பட்டங்கட்டினான். இளவரசனாகிய விக்கிரமனும் தன் தந்தைபால் அரசியல் நுட்பங்களைக்கற்று வல்லனாயினான். பின்னர், கி. பி. 1120-ஆம் ஆண்டில் முதற் குலோத்துங்க சோழன் விண்ணுலகெய்தவே, விக்கிரம சோழனும் சோழ மண்டலத்தின் தலைநகராகிய கங்கை கொண்ட சோழபுரத்தில் சக்கரவர்த்தியாக முடிசூடிக் கொண்டனன். முடிசூடிய நன்னாளில், தன் தந்தை குலோத்துங்க சோழனைப்போல் விக்கிரமனும் திரிபுவனச் சக்கரவர்த்தி என்ற பட்டம் புனைந்து கொண்டனன்.

சோழ மன்னர்கள் ஒருவர்பின் ஒருவராகப் புனைந்து கொண்டுவந்த இராசகேசரி, பரகேசரி என்னும் பட்டங்களுள் நம் விக்கிரமன் பரகேசரி என்ற பட்டம் புனைந்து அரசாண்டவன்.

இவ்வேந்தன் ஆட்சிபுரிந்தது 17-ஆண்டுகளாகும். சோழ மண்டலத்தைச் சிறப்புடன் அரசாண்ட சோழ மன்னர்களுள் விக்கிரம சோழனும் ஒருவன் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. இவனது ஆட்சியின் ஆறும் ஆண்டில் வடக்கேயுள்ள திருவோத்தூர் முதல் தெற்கேயுள்ள தஞ்சாவூர் வரையில் மழை மிகுதியினால் உண்டான வெள்ளத்தினால் பஞ்சம் உண்டாயிற்று என்பது கோவிலடி, உடையார் கோயில், திருவதிகை,

திருவோத்தூர் முதலான இடங்களிலுள்ள கல்வெட்டுக்களால் புலப்படுகின்றது. அந்நாட்களில் விக்கிரம சோழன் குடிகளது துன்பத்தைப் போக்கிப் பல நன்மைகளும் புரிந்தனன்.

விக்கிரமனுக்குத் திறை செலுத்திவந்த வேங்கை நாட்டின் குறு நில மன்னனுகிய வெலநாண்டு சோழன் ஒருவன் சோழர்களுக்குப் பெரும் பகைவனுயிருந்த மேலைச்சளுக்கிய மன்னனுகிய ஆறும் விக்கிரமாதித்தனோடு சேர்ந்துகொண்டு விக்கிரம சோழனோடு முரண்பட்டனன். இதனை யுணர்ந்த விக்கிரம சோழன் வேங்கை நாட்டிற்குப் படையெடுத்துச் சென்று அதனை வென்று கைப்பற்றிக் கொண்டனன். இது கி. பி. 1125-க்கு முன்னர் நிகழ்ந்த போராகும்.

இனிச், சோழ மன்னர்களுக்குக் குலதெய்வமாக விளங்கியவர் தில்லையம்பதியில் எழுந்தருளியுள்ள நடராசப் பெருமான் என்பது கல்வெட்டுக்களாலும் பிறவாற்றானும் அறிந்த உண்மையாகும். இதுபற்றியே முதல் ஆதித்தன், முதல் பராந்தகன் முதலான சோழ மன்னர்கள் தம் ஆட்சிக்காலங்களில் தில்லையம்பலத்திற்குப் பொன் வேய்ந்தனர். விக்கிரம சோழனும் தன் ஆட்சியின் பத்தாம் ஆண்டில் புறநாட்டு மன்னர்கள் செலுத்திய திறைப் பொருளைக்கொண்டு தில்லையம்பலத்திற்கும் திருச்சுற்று மாளிகைக்கும் பலிபீடத்திற்கும் பொன்வேய்ந்து சிறப்பித்தனன்; அங்குத் தன் பெயரால் திருவீதியும் மாளிகையும் கட்டுவித்தனன்; தான் பிறந்த நாளாகிய புரட்டாசித் திங்கள் உத்திரட்டாதி நாளில் அம்பலம் நிறைந்த அற்புதக் கூத்தற்கு ஆண்டுதோறும் பெருந் திருவிழா நிகழ்த்த ஏற்பாடு புரிந்தனன். இதனால், இவனது ஒப்பற்ற சிவபத்தியின் மாண்பு நன்கு புலப்படுதல் காண்க. இச்செய்திகளை,

"வருமுறை முன்னே மன்னவர் சுமந்து
திறைநிறைத்துச் சொரிந்த செம்பொற் குவையால்
தன்குல நாயகன் தாண்டவம் பயிலும்
செம்பொனம் பலஞ்சூழ் திருமாளிகையும்
கோபுரவாசல் கூடசாலைகளும்

உலகுவலங் கொண்டொளி விளங்கு நேமிக்
குலவரை யுதய குன்றமொடு நின்றெனப்
பசும்பொன் வேய்ந்த பலிவளர் பீடமும்
விசும்பொளி தழைப்ப விளங்கு பொன்வேய்ந்து
இருநிலந் தழைப்ப விமையவர் களிப்பப்
பெரியதிருநாட் பெரும்பெயர் விழாவெனும்
உயர்புரட்டாதி யுத்திரட்டாதியில்
அம்பல நிறைந்த வற்புதக் கூத்தர்
இம்பர் வாழ வெழுந்தருளு வதற்குத்
திருத்தேர்க் கோயில் செம்பொன் வேய்ந்து
பருஉத்திரண் முத்தின் பயில்வடம் பரப்பி
நிறைமணி மாளிகை நெடுந்திரு வீதிதன்
திருவளர் பெயராற் செய்து சமைத்தருளிப்
பைம்பொற் குழித்த பரிகல முதலாச்
செம்பொற் கற்பகத் தொடுபரிச் சிந்நமும்
அளவில் லாதன வொளிபெற வமைத்துப்
பத்தாம் ஆண்டிற் சித்திரைத் திங்கள்
அத்தம் பெற்ற ஆதிவாரத்துத்
திருவளர் மதியின் திரயோதசி பக்கத்து
இன்ன பலவும் இனிது சமைத்தருளி" என்னும் இவ்
வேந்தனது மெய்க்கீர்த்தியால் ஒருவாறு அறிந்துகொள்ளலாம்.

இனி, தஞ்சாவூர் ஜில்லா மாயூரந்தாலூகாவில் திருமங்கலம் என்னும் ஊரிலுள்ள சிவாலயம் விக்கிரமசோழனால் எடுப்பிக்கப் பெற்றது என்பது அவ்வூரிலுள்ள கல்வெட்டுக்களால் புலப்படு கின்றது. அதற்கு அண்மையிலுள்ள குற்றாலத்தில் விக்கிரம சோழேச்சுரம் என்ற சிவாலயம் ஒன்றுளது. இது விக்கிரம சோழனாலாவது இவனது அதிகாரிகளுள் ஒருவனாலாவது கட்டப் பெற்றதாதல்வேண்டும். குற்றாலத்தையே விக்கிரமன் குற்றாலம் என்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. எனவே, இவ்வூர் மேலே குறித்துள்ள சிவாலயங்கட்கு நம் விக்கிரமனால் நிபந்த மாக விடப்பட்டிருத்தலும் கூடும். குற்றாலத்திற்கு அண்மையில் ஓடும் விக்கிரமன் ஆறு இவ்வரசனால் வெட்டப்பெற்றதுபோலும்.

தஞ்சைப் பெரியகோயில் கருப்பக்கக் கிருகத்திலுள்ள தெற்குத் திருவாசல் "திருவிக்கிரமன் திருவாசல்" என்னும் பெயருடையது என்பது ஒரு கல் வெட்டால் அறியப்படுகின்றது.

திருவரங்கத்திலுள்ள "திருவிக்கிரமன் திருவீதி", "அகளங்கன் திருவீதி" என்ற இருபெரு வீதிகளும் நம் விக்கிரமனுல் கட்டப்பெற்றவை யாகும். இச்செயல் இவன் வைணவமதத்தில் வெறுப்பில்லாதவன் என்பதை இனிது விளக்கா நிற்கும். கோயிலொழுகு என்ற வைணவ நூலும் இவனைப் பெரிதும் புகழ்கின்றது.

அகளங்கன், தியாகசமுத்திரம் என்ற பெயர்களும் இவனுக்கு வழங்கியுள்ளன என்பது விக்கிரமசோழன் உலாவினுல் புலப்படுகின்றது. இதுகாறும் ஆராய்ந்து கண்ட அளவில் இவ் வேந்தனுக்கு நான்கு மனைவியர் இருந்துள்ளனர் என்பது கல் வெட்டுக்களால் வெளியாகின்றது. அன்னோர், முக்கோக்கிழானடிகள், திரிபுவன முழுதுடையாள், தாணி முழுதுடையாள், நேரியன் மாதேவியார் என்போர். இவர்களுள், முக்கோக்கிழானடிகள் என்பாள் இம்மன்னனது ஆட்சியில் ஒன்பது ஆண்டுகள் வரையில் பட்டத்தரசியாயிருந்து பின்னர் இறந்தனள். பிறகு இரண்டாம் மனைவியாகிய திரிபுவன முழுதுடையாள் பட்டத்தரசியாயினள். இவளைத் "தெரிவையர் திலதம்" எனவும், "தியாக பதாகை" எனவும், "புனிதகுணவனிதை" எனவும் விக்கிரமசோழனது மெய்க்கீர்த்தி புகழ்ந்து கூறுகின்றது. அம்மெய்க்கீர்த்தியே, இவனது மூன்றும் மனைவியாகிய தாணி முழுதுடையாளைப் "பூதலத்தருந்துதி" எனவும், "அாணியற் கற்பிற்றாணி முழுதுடையாள்" எனவும் பாராட்டுகின்றது.

(தொடரும்.)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிராப்பள்ளி செயிண்ட் ஜோசப் கலாசாலைத் தமிழாசிரியரும்
கரந்தைத் தமிழ்ச்சங்கத்துத் திருச்சிராப்பள்ளிக்
கிளையமைச்சரும்
திரிசிரபுரம் சைவசித்தாந்த சபை உறுப்பினரும்
தஞ்சை ஜில்லா இடைக்கியம் கிராமத்து நிலக்கிழவரும் ஆகிய

இராம. நடேசபிள்ளை அவர்கள்

சுக்கில ஆண்டு தைத்திங்கள் 5-ஆம் நாள் (18-1-30)
இறைவன் திருவடி யடைந்தமை குறித்து
அவர்பால் அன்பும் மதிப்பும் பெரிதுடைய

ஒரு நண்பர் கூறிய பிரிவுரை.

திணை: பொதுவியல்.] [துறை: கையறுநிலை.

நிலைமண்டில ஆசிரியப்பா.

நானிலம் என்னும் நாடக மேடையுள்
பிறந்தும் வளர்ந்தும் பிணிவாய்ப் பட்டும்
வாழ்க்கை பலபல வகையா நடாத்தியும்
செல்லும் கூத்தர் மிகப்பலர்; அவருள்,
வேற்றுமை இல்லா விழுத்திணைப் பிறந்து
வீற்றிருந் தோரை எண்ணுங் காலை
ஒழுக்கமும் அன்பும் உடையோர் சிலரே;
அவருள் முன்னணி அமர்தற் குற்ற நீ

'நண்பர் குழாங்கள் நனிமிக வருந்த
ஆசிரியன்மார் ஆகம்குழைந் துருக
சுற்றத் தாரெலாம் துயர்மிக எய்த
என்போல் நின்பால் இறவா அன்புடை
உழுவ லன்பர் உறுதுயர் கொள்ள
இறைவன் திருவடி எய்தினை' என்ன
எண்ணி எண்ணி ஏங்கினன் பலகால்;
பின்னர்ச் சிறிது தேறுதல் பெற்றும்
உனதுவாழ் நாளில் ஒருசிறி தேனும்
பிறர்துயர் பொறாநின் பெற்றிமை நினைந்தும்
'இத்தகைத் துயரம் என்போன் றவர்கள்
எய்தல் கருதி ஏகினை யல்லை;
பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்
அயரா அன்பின் அரன்கழல் எய்தி
இன்புற் றிருப்பதே எய்தற் பாலதாம்
என்னும் குறிக்கோள் கொண்டெம் பெருமான்
திருவடி நாளும் போற்றினை ஆதலின்
அத்தகைக் கருத்தோ டிமைவிட் டகன்றனை'
என்றே தெளிந்தனன்; ஆகலின், எனது
நண்ப! நடேச! நற்றமிழ்த் தொண்ட!
பல்லோர்க் குதவும் பண்புடை யாள!
இறைவன் திருவடி நீழலில் என்றும்
அந்தமி லின்பம் அடைக நீயே.

திருச்சிராப்பள்ளி,
2—6—1930.

ம. பெ.